புதிய சமுதாயம்

KDN 10657 ஆசிரியர்: முருகு சுப்பிரமணியன் 10-8-1977



வருக! மலிவு விற்பனை வருக!!

இல்லத்தரசிகளுக்கு அரிய வாய்ப்பு!



உங்கள் மேனி எழிலுக்கு
காஞ்சிபுரம், பனாரஸ் பட்டுச் சேலைகள்!

புதியவை! மணமகள் மனம் கவர்ந்தவை!
கவர்ச்சி மிக்கவை!

பட்டு ரகங்கள் யாவற்றுக்கும்
50 விழுக்காடு கழிவு

உங்கள் இல்ல எழிலுக்கு
எல்லாவிதமான எவர்சில்வர் பாத்திரங்களும்
எங்களிடம் உண்டு.
50 விழுக்காடு கழிவு

கண்கவரும் ஏராளமான டிசைன்களில்
கைத்தறி நூல்சேலைகள்,
100 நிர். வேஸ்டி துண்டுகள்,
பெட் சீட் ரகங்கள், பிளாஸ்டிக் சுவாமி சிலைகள்
ஆகியவற்றுக்கு 40 விழுக்காடு கழிவு.

மற்றும் உல்லி ஜார்ஜெட் சேலைகள்,
வெண்கலப் பாத்திரங்கள், நாட்டிய நகைகள்,
எல்லாவிதமான வளையல்கள்,
இமிடேசன் நகைகள்
மிக மலிவாகக் கிடைக்கும்.

கிள்ளானில் சிறப்பு வாய்ந்த ஒரே இடம்.

ஒரு முறை வருகை தாருங்கள்! உண்மை விளங்கும்!
குறைவான விலையில் தரமானவைகளைப் பெற்று
உங்கள் பணத்தை மிச்சப்படுத்துங்கள்! இன்றே முந்துங்கள்!
எங்குமே கிடைக்காத விலைக்குறைப்பு
கண்டு வியப்பீர்கள்! மகிழ்வீர்கள்!

கி.ச. கொண்டசாமி செட்டியார் சன்

55, ஜாலான் துங்கு கிளானா, கிள்ளான்.

K. S. KONDASAMY CHETTIAR SON

55, JALAN TENGKU KELANA, KELANG. PHONE: 381759

NA-8

பெருங்குடி மக்கள்



பொன்முடி
கோல குபு பாரு

குடிகே டென்று குறித்தனர் அன்றே!
கொண்டன ரா.அக் கருத்தினை நன்றே!
அடியார் குடிக்கே ஆயினர் இன்றே!
அவர்மனைச் சொத்தெது? அழுகை ஒன்றே!

குடித்துக் குடித்துக் குடும்பம் தன்னை
குழந்தையின் நல்ல கல்வியின் கண்ணை
கெடுத்தனர்; அடித்தே உதைத்தனர் பெண்ணை!
கிண்ணத்தில் மூழ்கி மறந்தனர் மண்ணை!

சாலையில் வீதியில் கிடப்பார் சாய்ந்தே!
சற்றும் பாரார் மனைநலம் ஆய்ந்தே!
மூலையில் அவர்தம் பிள்ளைகள் ஓய்ந்தே
முடங்கிடு வார்பசி பசிஎனத் தீய்ந்தே!

பெருங்குடி மக்கள் எனும்பேர் கெடுத்தார்!
பெருங்குடி காரர் எனப்பேர் எடுத்தார்!
வரும்படி யில்பெரும் படிஇவர் குடித்தார்!
வறுமையில் குடும்பம் அடிபட விடுத்தார்!

சமுதா யத்தின் களைபெரும் களையே!
சாரா யத்தால் சரிந்தவர் நிலையே!
கமழ்பண் பாட்டுக்குக் கூறுவார் விலையே!
கடைநிலை மாந்தர் இவர்போல் இலையே!

வருந்தலை முறையினர் வாழ்வினைக் கொன்றே
வாழ்வாங்கு வாழுமாம் சாராயம் இன்றே!
திருந்திலர், சுழியினில் சிறுதுரும் பென்றே
திண்டாடு கின்றார் குடிவழி நின்றே!

அட்டைப்படம்: மாயன்

வெள்ளத் தனைய மலர்நீட்டம் மாந்தர்தம்
உள்ளத் தனையது உயர்வு — குறள்

புதிய சமுதாயம்

திருவள்ளுவர் ஆண்டு 2008 ஆடி 26
கம்பம் 1 :. (10-8-1977) :. குடும்பம் 10

பாவம் பெண் பிரதமர்கள்

உலகில் செங்கோல் ஓச்சி வந்த பெண் பிரதமர்கள் மூவரின் பதவிக்காலம் இப்படி ஒன்றுக்குப் பின் ஒன்றாக முடிவுக்கு வருமென்று யாரும் எதிர்பார்த்திருக்கமாட்டார்கள். முதலில் இஸ்ரேல் பிரதமராக இருந்த திருமதி கோல்டா மேயருக்குச் சீட்டுக் கிழிந்தது. அடுத்துப் பாரத தேசத்தின் வாக்காளர்கள், பிரதமர் இந்திரா காந்தியையும் அவருடைய காங்கிரஸ் கட்சியையும் தங்கள் தேர்தல் தீர்ப்பின் மூலம் ஆட்சிப் பீடத்திலிருந்து இறக்கினார்கள். கடைசியாக இலங்கையின் பிரதமராகப் பதவி வகித்து வந்த திருமதி சிரிமாவோ பண்டாரநாயகாவுக்குத் தேர்தல் தீர்ப்புப் பாதகமாக அமைந்து அவருடைய ஆட்சியும் அஸ்தமனமாகி இருக்கிறது.

முதன் முதலில் உலக நாடு ஒன்றில் பதவிக்கு வந்த பெண் பிரதமர் எனும் பெருமையைத் திருமதி சிரிமாவோ அடைந்திருந்தார். தம் கணவரின் எதிர்பாராத மரணத்தைத் தொடர்ந்து ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமையை ஏற்று, நாட்டின் பிரதமர் பொறுப்பையும் ஏற்றுக்கொண்டார். ஆனால் தீவிரவாதக் கட்சியாக விளங்கிய அவருடைய கட்சி, திருமதி சிரிமாவோ தலைமையின் கீழ் இலங்கை மக்கள் எதிர்பார்த்த பரிகாரங்களையும், நன்மைகளையும் செய்ய இயலவில்லை. அதற்கு மாறாக அரசாங்க நிர்வாகத்தில் ஊழல்களே அதிகரிக்கத் தொடங்கின. அது மட்டுமின்றித் தம் குடும்பத்தைச் சேர்ந்தவர்களுக்கு அரசாங்கத்தில் முக்கியப் பதவிகளைக் கொடுப்பதிலும் திருமதி சிரிமாவோ சற்றுத் தாராளமான போக்கைக் கையாண்டு மக்களின் பழிப்புக்கு இலக்கானார். இந்தியாவில் சஞ்சய் காந்தி செய்த அட்டகாசங்களினால் இந்திராகாந்தியின் ஆட்சிக்கு ஊறு நேர்ந்ததுபோல், இலங்கையில் திருமதி சிரிமாவோவின் ஆட்சிக்கு அவருடைய புதல்வர் அனுராவும் மற்றும் அவருடைய குடும்பத்தைச் சேர்ந்தவர்களும் உலை வைத்துவிட்டதாகவே கருதவேண்டியிருக்கிறது.

இலங்கையில் இப்பொழுது மிகப்பெரிய பெரும்பான்மையோடு ஆட்சிக்கு வந்திருக்கும் வலசாரி கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியும் அதன் தலைவரான புதிய பிரதமர் ஜெயவர்த்தனாவும், இலங்கை நீண்டகாலமாக எதிர்நோக்கி இருக்கும் பொருளாதாரச்

எங்கள் அலுவலகம்
131, ஜாலான் துவாங்கு அப்துல் ரஹ்மான், [2ஆவது மாடி] கோலாலம்பூர் 01-08. தொலைபேசி:80839

சீர்கேடுகளுக்குத் தக்க விமோசனங்களைக் காண முற்பட்டு வெற்றியடைவரென்று நம்புகிறோம்.

தோற்றுப்போன திருமதி சிரிமாவோவின் கட்சிக்குக் கூடத் தமது மந்திரி சபையில் இடமளிக்கப் பிரதமர் ஜெயவர்த்தன முன்வந்திருப்பது அவருடைய பெருந்தன்மையையே பிரதிபலிக்கிறது. எல்லாக் கட்சிகளையும் உள்ளடக்கிய சர்வ கட்சி அரசாங்கத்தை அமைப்பது தம் நோக்கமென்று தேர்தல் பிரசாரத்தின்போது அவர் அறிவித்திருந்தார். மலேசியாவின் முன்மாதிரியைப் பின்பற்றி "தேசிய முன்னணி அரசாங்க" மொன்றை அமைத்து, அரசியல் கட்சிகளிடையே பலப் பரீட்சைகள் தொடர்ந்து நடப்பதை நிறுத்தி, எல்லாச் சக்திகளும் தேச நிர்மாணப் பணியில் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டுமென்பது பிரதமர் ஜெயவர்த்தனவின் விருப்பமாகும். ஆனால் அவருடைய இந்த லட்சியம் எந்த அளவுக்கு இலங்கையில் செயல்படும் என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

20 லட்சத்திற்கு மேற்பட்ட இலங்கைத் தமிழர்களைப் பொறுத்தவரையில், தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணி, தமிழ் மக்கள் வாழும் வடக்கு கிழக்குப் பகுதிகளில் 17 தொகுதிகளைக் கைப்பற்றியதன் மூலம் அவர்களின் ஏகப்பிரதிநிதியாக அக்கட்சி விளங்கிவருகிறது என்பதை மறுபடியும் மெய்ப்பித்திருக்கிறது. பிரதமர் ஜெயவர்த்தனவின் ஐக்கிய தேசியக் கட்சி, இலங்கையின் மற்றப் பகுதிகளில் ஈட்டியிருக்கும் நிகரற்ற வெற்றியைத் தமிழர் வாழும் பகுதிகளில் ஈட்ட முடியவில்லை என்பதும் கவனிக்கத் தக்கது.

ஆகவே, இலங்கைத் தமிழர்களின் சுய நிர்ணய கோரிக்கைக்குப் புதிய இலங்கை அரசாங்கம் தக்க நியாயம் வழங்குமென்று நிச்சயம் எதிர்பார்க்க முடியும். தமிழர்களின் சுய நிர்ணயத் தனி ஈழநாட்டுக் கோரிக்கைக்குத் தீர்வு காணச் சர்வ கட்சி மாநாடு ஒன்றைத் தாம் கூட்டப்போவதாகத் திரு. ஜெயவர்த்தன ஏற்கனவே தேர்தல் சமயத்தில் கூறியிருக்கிறார். இந்தத் தேர்தல் வாக்குறுதியை அவர் நிறைவேற்றுவதற்கும் இப்பொழுது தக்க தருணம் வந்திருக்கிறதென்றே சொல்லவேண்டும்.

தமிழ் எழுத்தாளர்கள்

அண்மையில் நடைபெற்ற மலேசியத் தமிழ் எழுத்தாளர் சங்கத்தின் 15ஆம் ஆண்டு விழாவில் தமிழ் எழுத்தாளர்களின் சார்பில் மகஜர் ஒன்று அரசாங்கத்திற்கு வழங்கப்பட்டிருக்கிறது. ஆண்டு விழாவைத் தொடக்கி வைத்துப் பேசிய தொழிலாளர் ஆள்பலத் துறையின் துணை அமைச்சர் மாண்புமிகு பத்மநாபன் அரசாங்கத்தின் சார்பில் மகஜரைப் பெற்றுக் கொண்டதோடு தமிழ் எழுத்தாளர்களின் நியாயமான கோரிக்கைகளுக்குத் தீர்வு காண்பதற்குத் தாம் முயல்வதாகவும் உறுதி அளித்திருக்கிறார்.

தேசிய இலக்கியப் படைப்புக்களுக்கு அரசாங்கம் ஆண்டுதோறும் வழங்கி வருகிற பரிசுத் திட்டத்தில் மலேசியத் தமிழ் இலக்கியப் படைப்புக்களுக்கும் நியாயமான பங்கு வழங்கப்பட வேண்டுமென்பது இந்த மகஜரில் வைக்கப்பட்டிருக்கும் முக்கிய கோரிக்கைகளில் ஒன்றாகும். தமிழ் எழுத்தாளர் சங்கம் ஒரு சில ஆண்டுகளாகவே இந்தக் கோரிக்கையை வலியுறுத்தி வந்திருக்கிறது. "கப்பேன" என்னும் தேசிய எழுத்தாளர் சங்கச் சம்மேளனத்தில் உறுப்பியம் பெற்று நாட்டின் தேசிய இலக்கியப் படைப்புக்குத் தனது பங்கை ஆற்றவும், நெடுகிலும் தமிழ் எழுத்தாளர் சங்கம் ஆயத்தமாக இருந்து வந்திருப்பதோடு தன் விருப்பத்தையும் இவ்வகையில் அழுத்தமாகப் புலப்படுத்தி வந்திருக்கிறது.

நூற்றுக்கு நூறு பங்கு தேசிய மணம் கமழும் வகையில் தம் எழுத்துப் படைப்புக்களைத் தமது தாய்மொழியாகிய தமிழில் படைத்து வருகிற மலேசியத் தமிழ் எழுத்தாளர்களுக்கு அரசாங்கம் தேசிய இலக்கியப் பரிசு மூலம் ஓர் அங்கீகாரத்தை வழங்க முன்வருவது மிக இன்றியமையாதது. மலேசியத் தமிழ் எழுத்தாளர்கள் தேச நிர்மாணப் பணியில் மேலும் தங்கள் பங்கை ஆற்றுவதற்கு அரசாங்கத்தின் இந்த அங்கீகாரம் பெருந்துணை புரியுமென்பது நமது நம்பிக்கை.

நோற்போர் வாழி!

அபிவிர்த்தீஸ்வரம் கவிநேசன்

ஒப்பிலா தீனின் சோலை
ஒளிமரம் குர்ஆ னுள்ளம்,
செப்பிய வழியில் சிந்தை,
செழும்நோன்பு நோற்போர் வாழி!

உடலுறை பெண்டிர் நெஞ்சம்,
உறவையும் உதறி உண்மை,
திடமதி காட்டும் நன்மை,
திருநோன்பு நோற்றோர் வாழி!

சீர்பதி எழிலாம் சொர்க்கம்,
சீரிளம் இஸ்லாம் மார்க்கம்,
நேரிய நெறியில் நின்று,
நிமிர்ந்திட்டோர் நோன்பு வாழி!

நாற்பதில் ஒன்றை ஈந்து,
நாயனின் பதமும் சார்ந்து
நேர்பதி வாழ்வு போந்து,
நிறைமனம் கொண்டோர் வாழி!

சோழமாதேவி

1. பவளமணிப் பந்தல்

தொட்டுப் பொட்டிட்டுக் கொள்வதற்கு ஏதுவானாற்போல் இருண்டு கிடந்த மையிருளை இரண்டாகப் பிளந்துகொண்டு கடுகிப் பறந்த வெண்புரவியின்மேல், கடிவாளத்தில் ஒரு கரமும் உடைவாளில் ஒரு கரமுமாகக் கம்பீரமாக வீற்றிருந்த பல்லவ இளவரசன் அதலபாதாளவர்மன்[1] நொடிக்கொரு தடவை பின்னால் திரும்பிச் சற்றே கவலைக்குறி படர்ந்த தன் கூரிய விழிகளால் அந்த இரண்டாம் சாமத்துக் காரிருளை ஊடுருவி நோக்கியவாறிருந்தான்.

அவனைத் துரத்திக்கொண்டுவந்த காபாலிகர்களின் புரவிகளின் குளம்பொலி மெல்ல மெல்ல இற்று மறைந்துபோனதானது அவனுக்கு ஓரளவு மகிழ்வைத் தந்தாலும், சாளுக்கியர்களின் அந்தகாரச் சிறையிலிருந்து யவன ஒற்றன் இராமுலசின் துணையோடு நாலேணி வழியாகத் தப்பித்தபோது சுளுக்கிக் கொண்ட சுண்டுவிரலும் பெருவிரல் நகமும்[2] சொல்லவொண்ணாத வேதனையைத்தந்தன.

தன்னைச் சூழ்ந்திருந்த பேராபத்து ஓரளவு நீங்கிவிட்டமையால் மனம் தெளிவுற்ற அதலபாதாளவர்மன், பொங்கிப்பெருகி, சுழித்து நுரைத்து, இருகரை தொட்டு ஓடிக்கொண்டிருந்த வெண்மணலாற்றங்கரையில் நின்றிருந்த முருங்கைமரத்தைக் கண்டவுடன் உள்ளம் களிகூர்ந்து, சற்றே இளைப்பாறக் கருதிப் புரவியினின்றும் இறங்கி அந்த முருங்கைமரத்தினடியில்[3] மெல்லச் சாய்ந்து துயில்கொண்டான்.

மெல்லிய ஓசை கேட்டு உறக்கம் நீங்கிய இளவரசன், கார்மேகம் போன்ற நீள்குழலும், பிறையன்ன நெற்றியும், கயல் தோற்கும் கண்களும், முகையொத்த நாசியும், மலரிதழ்போலும் காதுகளும், இரப்பர்மலர்[4] போன்ற பற்களுமாக எல்லாவிதமான எழிலும் நிறைந்த பேரழகி ஒருத்தி எதிரே நிற்பதைப் பார்த்துத் திகைத்து "பெண்ணே, யார் நீ? யாது நின் பெயர்? எங்கிருந்து வந்தனை? ஏது எண்ணி வந்தனை?" என வினவினான்.

அதலபாதாளவர்மனின் கட்டழகில் தன்னை ஒருகணம் இழந்த அக்காரிகை, அவன் குரல் கேட்டுத் தெளிவுற்று "தோழியரோடு நீராட வந்தேன்; வழி தவறித் தோழியர் பிரிந்தனர்; தனித்து இங்குற்றேன். சுண்டல் கொண்டவன்[5], சோறு கண்டவன், சும்மா இருந்தவன்[6] என்று உலகம் ஏத்திப் புகழும் சூடில்லாச் சோப்பளாங்கிச் சோழனின்[7] திருமகள் நான்! தடியிடைப் பெருந்தேவி[8] என்பது என் பெயர்!" என மறுமொழி பகர்ந்தவள் "தாங்கள் யாரோ?" என்று நிலம் நோக்கிக் குயிலினுமினிய குரலால் மெல்லக் கேட்டாள்.

புளகாங்கிதம் பெருக்கெடுக்க அவளை ஏறிட்டு நோக்கித் தான் யார் என்று கூற முனைந்த அதலபாதாளவர்மன், தற்செயலாக ஆற்றின் மறுகரையைப் பார்த்ததும் அப்படியே திகைப்புண்டு, நெடிய மேனியில் வியர்வை பெருக்கெடுக்க கண்கள் நிலைகுத்தி நின்றான்.

(தொடராது)



---

1. பல்லவப் பேரரசன் படுபாதாளவர்மனின் (கி.பி. 1101 – 1165) மூத்த புதல்வன் – ('பல்லவர் வரலாறு' – பேராசிரியர் நின்று நிமிர்ந்த நாதனார்.)

2. 'அதலபாதாளவர்மனுக்குச் சுண்டுவிரலும் பெருவிரல் நகமும் இருந்தனவா' என்பதில் வரலாற்றாசிரியர்களிடையே கருத்து வேறுபாடு உண்டு.

i. பல்லவ இளவரசன்: முடிவுகளும் விடைகளும்' – டாக்டர் முத்துவேலனார்.

ii. 'The Little Finger of the Pallava Prince' – Dr. Edward Crook.

3. பல்லவர் காலத்து முருங்கை மரங்கள் நிழல் கொடுத்தன என்னும் செய்தி செப்புப்பட்டயங்கள் பலவற்றில் குறிக்கப்பட்டுள்ளது.

4. 'இரப்பர்' தமிழ்ச்சொல்லே என்பதும், பழந்தமிழகத்தில் இரப்பர் மரங்கள் மிகுந்திருந்தன என்பதும் சங்க இலக்கியங்களால் அறியபபடும்.

'இரப்பர் பலரே!
இரப்பர் பலரே!
இரப்போர்க் கீவார்
இல்லா தொழியினும்
இரப்பர் பலரே!
இரப்பர் பலரே!'

என்னும் சிறுகுடுமிப்பெருந்தலையனார் பாடிய அகநானூற்றுப் பாடலைக் காண்க. 'பலரே' என்பது 'மலரே' என்பதன் மரூஉ மொழியாகும்.

5. திருக்கோவில்களில் சுண்டல் வழங்கும் நடைமுறைக்கும், இந்த அடைமொழிக்கும் தொடர்புள்ளதா என்பது ஆராயற்பாலது.

6. 'தான் வென்ற நாடுகளில் சோழ மன்னன் தன் ஆட்சியையும், மொழியையும், பண்பாட்டையும் நிறுவாமல் அங்குக் கிடைத்த சோற்றை மட்டும் படைவீரர்களோடு சேர்ந்து உண்டுவிட்டுத் தன் நாடு திரும்பிச் சும்மா இருந்திருப்பானோ' என்று இந்த அடைமொழிகளிலிருந்து ஊகிக்க இடமுண்டு. ('The Chola Kings' – Prof. Vengadasalam).

7. சூடில்லாச் சோப்பளாங்கிச் சோழன் என்பது இயற்பெயரே – இவன்வழி வந்தோரே இன்றைய தமிழர்கள். ('சோழப் பேரரசர் மாட்சி' புலவர் அழுத்தந்திருத்தனார்)

8. இது காரணப் பெயர் – ('சோழர் காலத் தமிழகம்' – பேராசிரியர் அ. இ. உ. அழகில்லாசாமி)

13. ‘பார்வை ஒன்றே போதுமே’

“ஹாய் கோபி! எங்கே இந்தப் பக்கம்...?” லல்லி தனது வரவேற்பு உபசரணைகளையெல்லாம் முடித்துக்கொண்டு கோபியிடம் வந்து சேர்ந்தாள் வம்படிக்க. அவளது கேலிக்குரல் கேட்டு உணர்வு வரப்பெற்ற கோபி அவள் பக்கம் திரும்பினன்.

"ஒரு பார்ட்டியோ, டின்னரோ மிஸ்பண்ணுவதே கிடையாதுபோலிருக்கே!"

"நீமட்டும் என்ன...? உன் தோழியையும் சேர்த்து அழைத்துக் கொண்டு வந்துவிட்டாயே..."

கோபி வேண்டுமென்றே வனிதாவையும் சேர்த்துக் கூறினன். "ஐயையோ...! நிறுத்துங்கள்! நிறுத்துங்கள்! என்னைப் பற்றி என்ன வேண்டுமானலும் சொல்லுங்கள்...! ஆனல் அவளை மட்டும் வம்புக்கு இழுக்கவேண்டாம்! அப்புறம் அந்தச் செல்லப்பெண் அழத்தொடங்கி விட்டால் சமாதானப்படுத்த யாராலும் முடியாது...!"

"ஏய் லல்லி... நீ சும்மா இருக்க மாட்டே...?" வனிதா பொய்யான கோபத்தோடு அவளை மிரட்டினள்.

"ஓகே! நான் போகிறேன்! இனி உங்கள்பாடு அவள்பாடு! உங்களால் முடிந்தவரை கிண்டல் செய்யுங்கள்! இனி அவளே சமாளித்துக்கொள்வாள் போலிருக்கு..."

"போதும்! சும்மா இரு லல்லி...!"

வனிதா அவளை இடைமறித்தாள். கோபி அவர்களின் கேலிப் பேச்சில் லயித்துப்போய் வந்த காரியத்தையே மறந்து உட்கார்ந்து விட்டான்.

"நான் ரிச்சர்ட்டைப் பார்க்க வந்தேன்..."

"அப்படியே அவனது அழகான தங்கை..! அப்புறம் அவளது தோழிகள்... எல்லாவற்றிற்கும் மேலாகச் சாப்பாடு .." லல்லி அடுக்கிக்கொண்டே போனள். வனிதாவால் சிரிப்பை அடக்கமுடியவில்லை! கோபி தலையைச் சொரிந்துகொண்டான்.

"ஏய் லல்லி, என்ன இது, ஒரேயடியாய் என்னை இப்படி மட்டந் தட்டிக்கொண்டே போகிருய்...! அதுவும் வனிதாவையும் வைத்துக் கொண்டு..."

"ஏன்? வனிதாவிடம் நல்ல பெயர் வாங்கவேண்டுமோ...? சரி, நான் உங்களைப் பற்றி அவளிடம் பிரமாதமாகச் சொல்லிவைக்கிறேன்! பாவம், அவளும் உங்களைப் பற்றி நல்ல அபிப்பிராயம்தான் வைத்திருக்கிருள் என்று நினைக்கிறேன்! மிகவும் அக்கறையாக நேற்றுக்கூட விசாரித்தாள்...!" லல்லி கண்களைச் சிமிட்டியபடியே சிரித்தாள்.

"உண்மையாகவா" என்று வினவுவதுபோல கோபி வனிதாவை ஊடுருவிப் பார்த்தான். வனிதா நாணச்சிவப்பேறிய கன்னத்தை லல்லியின் தோளில் பதித்துக்கொண்டாள். கோபிக்கு இன்ப உணர்வு உடல் முழுதும் பரவிப் பரவசமூட்டியது.

லல்லி ஒருகணம் அவர்கள் இருவரையும் மாறிமாறிப் பார்த்தாள். ஏனே அவளுக்கு நவினின் நினைவு வந்தது.

"கோபி! உங்களிடம் முக்கியமான ஒரு விஷயம் சொல்லவேண்டும் என்று இரண்டு நாட்களாகவே நினைத்துக்கொண்டிருந்தேன்...!"

"அப்படியா...? என்ன அது...?"

"பிரமாதமாக ஒன்றுமில்லை! என்றலும் நீங்கள் தெரிந்துகொள்ள வேண்டும் என்று நினைக்கிறேன்! நவினை உங்களுக்கு நினைவிருக்கிறதா...?"

"ஓ...! அந்த மோட்டார் சைக்கிள் தாடிக்காரன்...!"

"ஆமாம்! அவனேதான்! உங்களுக்குப் பழக்கம் உண்டா...?"

"பழக்கமில்லை! ஆனல் பார்த்திருக்கிறேன்...! அதுவும் நான் போகும் இடத்திலெல்லாம் அவனைப் பார்க்க முடிகிறதே என்று நினைத்துக்கொள்வேன்!"

"அவனுக்கு உங்களைப்பற்றிய விவரங்கள் எல்லாம் தெரிந்திருக்கின்றன..."

"ஆனல் எனக்கு அவனைப்பற்றி எதுவும் தெரியாதே! நாங்கள் பேசிக்கொண்டதுகூட இல்லையே...? வழியில் தற்செயலாகப் பார்த்துக்கொள்வது உண்டு! அதற்குமேல் எதுவும்..."

லல்லி அவனை இடைமறித்தாள்!

"அது ஒன்றும் தற்செயலாக நடப்பதில்லை... எல்லாம் திட்டம் போட்டுத்தான் நடக்கிறது..."

நவினைப்பற்றி அவர்கள் பேசிக்கொண்டதைக் கேட்டதும் வனிதாவுக்குச் "சுரீர்" என்றது. அவனைப் பற்றிய விபரங்களை அறிந்து கொள்ளவேண்டும் என்று அவளுக்கும் ஒருவித உந்துதல் ஏற்பட்டிருந்தது.

"என்ன சொல்கிருய் லல்லி? எனக்கு விளங்கவில்லையே..."

"நவின் உங்களைப் பின் தொடர்ந்து வருகிறன் போலிருக்கிறது..."

"அப்படியென்றல்...?"


"அதுதான் உங்களுக்குள் ஏதாவது தகராறு இருக்குமோ என்று நினைத்தேன் ! ஏனென்றல் அவனுக்கு நண்பர்களைவிட பகைவர்கள்தான் அதிகம்! அதனல் தான் சொல்ல வந்தேன்...!"

"மிகவும் ஆச்சரியமாக இருக்கிறதே...? எனக்கு அவன் பெயர்கூட நீ சொல்லித்தானே தெரிய வந்தது... அப்படியிருக்கும்போது என்னிடம் என்ன பகை அவனுக்கு?"

"இல்லை! அப்படியொரு யூகம் தான் எனக்கு! வேறென்றுமில்லை..." லில்லி நிம்மதியாக மூச்சு விட்டாள். நவினுடன் கோபிக்குத் தகராறு இல்லை என்பதே பெரும் ஆறுதலாக இருந்தது.

வனிதாவுக்கும்கூட அதைக்கேட்கும்போது மிகவும் ஆறுதலாக இருந்தது. முன்பின் அறிமுகமில்லாதபோதே தனது அறைவாசல் வரையிலும் வந்து நின்று வம்பு செய்து விட்டுப் போனவனயிற்றே?

கோபிக்கு ஆச்சரியத்தோடு ஆவலும் அதிகமாயிற்று. நவினைப் பற்றி லல்லி குறிப்பிட்டுக் கேட்டதற்குக் காரணம் இருக்கவேண்டும். மிகவும் சாதாரண விஷயங்களையெல்லாம் பெரிதுபடுத்தும் சுபாவமுடையவள் அல்ல லல்லி. பெரிய பெரிய விவகாரங்களைக்கூட "பூ" வென்று ஊதிவிட்டுச் சிரிக்கும் பெண்ணயிற்றே...;





"லல்லி! நீ சொன்ன பிறகுதான் எனக்கு அவனைப்பற்றிய நினைவு கூட ஏற்பட்டது! நான் போகும் இடங்களில் எல்லாம் பெரும்பாலும் அவனைப் பார்ப்பதுண்டு. ஆனால் நட்பு கொள்ளும்படியான தோற்ற-மோ குணமோ அவனிடம் துளி கூட காணப்பட்டதில்லை!"

"கரெக்ட்! அவன் மூஞ்சியைப் பார்த்தாலே சண்டைக்காரன் மாதிரித் தோன்றும்...! தோன்றுவதென்ன...? அவன் சுபாவமே சண்டைக்குப் போவதுதான்! அவன் பார்வை ஒன்றே போதுமே...!"

"நீ சொன்ன பிறகுதான் ஒரு விஷயம் நினைவுக்கு வருகிறது! மூன்று நாட்களுக்கு முன்பு என் ஸ்கூட்டரோடு மோதுவது போல் வந்துவிட்டு என்னையே முறைத்து விட்டுப் போனான்...!"

"எதற்கும் நீங்கள் கொஞ்சம் எச்சரிக்கையாக இருப்பது நல்லது!" கோபி குழப்பத்தோடு அவளை நோக்கினான்.

"உங்களைப் பற்றி எனக்குத் தெரியும்! நீங்கள் ஒதுங்கிப் போனாலும் அவனே வலிய வம்புக்கு வருவான்! அதற்காகச் சொன்னேன் ஏனென்றால் அவனைப் பற்றி எனக்குத்தான் தெரியும்!"

"என்ன சொல்கிறாய் லல்லி? அவன் யார்...? எதற்காக என்னிடம் வம்புக்கு வரவேண்டும்...?"

"உங்களிடம் மட்டுமல்ல! வனிதாவிடமே வாலாட்ட வந்துவிட்டான்!" கோபிக்கு இதைக் கேட்டதும் திகீர் என்றது. வனிதாவை ஏறிட்டு நோக்கினான். வனிதாவின் அழகிய முகத்தில் பயத்தின் சாயல் படர்ந்திருப்பதை அவனால் உணர முடிந்தது.

"கோபி! நீங்கள் எச்சரிக்கையாக இருப்பதோடு வனிதாவையும் கொஞ்சம் கவனித்துக் கொள்ளுங்கள்! அவன் சரியான போக்கிரி!"

"அவனைப் பற்றி உனக்கு எப்படித் தெரியும்? உனக்கு அவனிடம் பயமில்லையா...?"

"அவனுக்குத்தான் என்னைக் கண்டாலே பயம்! கவலைப்படாதீர்கள்! என் மாமாவின் மகன்தான் அவன்!" அலட்சியமாகச் சிரித்தாள் லல்லி! அவளது துணிச்சலை எண்ணி வியந்து நின்றான் கோபிநாத்.

14. 'உறவாடும் விழிகள்'

கோபியின் மனம் நிலை கொள்ளாமல் தவித்தது. லல்லி சொன்ன அந்த விஷயத்தையே மீண்டும் எண்ணிப் பார்த்தான்.

அந்த நவீனுக்குத் தன்மீது ஆத்திரம் உண்டாகக் காரணம் என்ன இருக்கிறது...?

அவன் வனிதாவிடம் வம்புக்குச் சென்றிருக்கிறான். தன்னிடமும் வம்புக்கு வரத் துடிக்கிறான்!

இரண்டிற்கும் ஏதாவது சம்பந்தமுண்டா...? வனிதாவை எண்ணியபோது அவன் மனம் இனிய ராகமிசைத்தது. மறுகணம், நவீன் என்னும் துஷ்டனால் அவளுக்கு ஏதாவது இன்னல் ஏற்பட்டுவிடுமோ என்ற கவலையும் சூழ்ந்துகொண்டது.

"நவீன் பொல்லாத போக்கிரி!"

"வனிதாவையும் கொஞ்சம் கவனித்துக் கொள்ளுங்கள்!" லல்லி கூறிய அந்த இரு வாக்கியங்களும் அவன் மனத்தில் விசுவரூபமெடுத்துக் கொண்டிருந்தன.

சிந்தனை

மனதை ஒருமுகப்படுத்த முடியாதவனுக்கு அறிவும் ஆழ்ந்த சிந்தனையும் கிடையாது. ஆழ்ந்த சிந்தனையற்றவன் அமைதியும் இன்பமும் பெற முடியாது.

—(கீதை)

ஒரு மரத்தில் கோடிக்கணக்கான இலைகள் இருக்கின்றன. ஆனால் மரம் ஒன்றே. அதைப் போல கடவுளும் ஒருவரே. மனிதர்கள் பலராக இருப்பதால் சமயங்களும் பலவாக இருக்கின்றன.

—(மகாத்மா காந்தி)

பழிதூற்றல், வாளினும் அதிகமான கூர்மையும், நாகத்தினும் அதிகமான நஞ்சும் உடையது. அது மூச்சுவிட்டால் போதும், அரைக்கணத்தில் உலகம் முழுமையும் நஞ்சு பரவிவிடும்.

—(ஷேக்ஸ்பியர்)

மற்றவர்களிடம் நீ அன்பு செலுத்துகின்றாய் என்றால் அதை நீ எப்படிக் காட்ட வேண்டும்? அவர்களைப் புகழ்வதனால் அல்ல. அவர்களுக்குத் தொண்டு செய்வதனால்.

—(சுவாமி விவேகானந்தர்)

-வளர்மதி,
அண்ட்லி தோட்டம்,
பந்தாய் ரெமிஸ்.

எவிஸபெத்தும் ரிச்சர்ட்டும் மீண்டும் வனிதாவிடம் வந்து சேர்ந்துவிட்டதால் அவனால் அவளோடு எதுவும் பேச இயலவில்லை.

எப்படியும் அவளுக்கு ஆறுதல் தரும்படியாக சில வார்த்தைகளாவது சொல்லவேண்டும்! முக்கியமான இன்னொரு விஷயமும் அவன் மனத்தில் தலைநீட்டிக்கொண்டிருந்தது.

தன் இதயத்தில் பொங்கிக்கொண்டிருக்கும் இனிய நினைவுகளை வனிதாவிடம் கொட்டித் தீர்க்க வேண்டும் என்று துடித்துக்கொண்டிருந்தான். அதற்கு இனிமேல் இப்படியொரு வாய்ப்புக் கிட்டுமோ என்னவோ?

"சொல்லிவிடவேண்டும்" என்று நினைத்தானே தவிர எப்படிச் சொல்வது, என்னவென்று சொல்வது என்று தெரியாமல் தயங்கினான்.

லல்லி சற்றுத் தொலைவில் ஒரு சீனப் பெண்ணிடம் பேசிக்கொண்டு நிற்பதைக் கண்ட கோபி, தனது காலியான கிளாஸை நிரப்பச் செல்வது போல எழுந்து அந்தப் பக்கம் சென்றான்!

கிளாஸில் குளிர்பானத்தை நிரப்பிக் கொண்டு நிமிர்ந்தபோது லல்லியே எதிரில் நின்றாள்.

"லல்லி, உன்னிடம் ஒரு விஷயம் கேட்க வேண்டுமென்று நினைத்தேன்..."

"நான் பல விஷயங்களைச் சொல்லவேண்டுமே என்று வந்தேன்..." லல்லி தனக்கே உரிய சிரிப்போடு விஷயத்தை ஆரம்பித்தாள்.

லல்லியைப் போன்ற துணிச்சலும் புத்திசாலித்தனமும் நல்ல குணங்களும் ஒருங்கே அமையப் பெற்ற பெண்ணைக்காண்பது அபூர்வமல்லவா?

கோபி தனக்குள் வியந்து கொண்டான்.

"லல்லி! நவீனுக்கு என்மீது ஆத்திரம் ஏற்படக் காரணம் எதுவும் உண்டா? அவன் என்னை ஏன் இப்படி வெறுக்கிறான்...?"

"இதற்குக் காரணம் இருக்கிறதோ இல்லையோ! அவன் முரடன்! கட்டுப்பாடின்றி ஊரைச் சுற்றும் சுபாவத்தினால் இப்போது போக்கிரியாக மாறிக்கொண்டிருக்கிறான்! மாமா மிகவும் நல்லவர்! கௌரவமான குடும்பத்தில் பிறந்த இவன் இப்படி மாறிக்கொண்டு போகிறான்..."

"உன் மாமா கண்டிப்பதில்லையா...?"

"அவர் கண்டிக்கக்கூடிய வயதா இவனுக்கு...? அதோடு இவன் வீட்டிற்கும் அடங்காத பிள்ளை! ஊர் சுற்றுகிறான் என்பது மட்டுந்தான் அவருக்குத் தெரியுமே தவிர இதெல்லாம் தெரிய நியாயமில்லை!"

"அப்படியென்றால்...!"

"முன்பு ஒழுங்கானவனாகத்தான் இருந்தான்! இப்போது புதிய சகவாசதோஷம் அப்படி ஆளை மாற்றிக்கொண்டு வருகிறது!"

"உன் மாமாவின் மகனாக இருந்தாலும் அவனிடம் நீயும் எச்சரிக்கையாக இருப்பதுதான் நல்லது லல்லி! விளையாட்டுத்தனமாக இருந்துவிடாதே!" லல்லி கலீரெனச் சிரித்தாள். பின் மிகவும் அலட்சியமாக இப்படிக் கூறினாள்:

"கோபி! அவன் முரடன்தான்! ஒருவருக்கும் பயப்படமாட்டான். என்றாலும் என்னிடம் அவனுக்கு பயம் இருக்கிறது!"

"ஏன் அப்படி? உன்னிடம் அவனுக்கு என்ன பயம்?"

"அது என்னிடமுள்ள பிரியத்தால் ஏற்பட்டது என்று சொல்ல வேண்டும். அதனால்தான் உங்களையும் வெறுக்கிறான் என்பதை மட்டுமே என்னால் யூகிக்கமுடிகிறது!"

கோபிக்கு அவள் என்ன சொல்ல வருகிறாள் என்பது பளிச்சென்று புரியாவிட்டாலும் ஏதோ புரிந்தது.

"உன்னிடம் நான் எதுவும் தவறாக நடந்துகொள்ளவில்லையே, அவன் ஏன் ஆத்திரப்படுகிறான்?"

"இது கூடவா புரியவில்லை! அவனைக் கண்டால் எரிந்து விழுகிறேனாம். உங்களிடம் சிரித்துச்சிரித்துப் பேசுகிறேனாம்..."

லல்லி கலகலவென்று சிரித்தாள். கோபிக்கும் சிரிப்புவந்து விட்டது!

"இதை அவன் எங்கே பார்த்தான்...? அவனுக்கு எப்படித் தெரியும்...?"

"அவனுக்கா தெரியாது? தியேட்டர் வாசலில், ரெஸ்டாரெண்டில்... இன்னும் எங்கெங்கோ... நீங்கள் போகுமிடமெல்லாம் அவனும் தொடர்ந்து வந்து கொண்டே இருக்கிறான்! அவன் முரடன்! அதனால்தான் இதைப்பற்றிச் சொல்ல வந்தேன்..."

"நீ என்ன நினைக்கிறாய் லல்லி?"

வெகுளித்தனமாக இப்படிக் கேட்கும் கோபியை அவள் ஒருமுறை ஊன்றிப் பார்த்தாள். அவளால் இதற்கு மேலும் என்ன சொல்ல முடியும்?

"என்ன லல்லி பேசாமல் நிற்கிறாய்?"

"கோபி! அவனுக்கு நான் உங்களோடு பேசுவதோ பழகுவதோ சற்றும் பிடிக்கவில்லை! அதோடு அன்று வனிதாவை வேறு பார்த்துவிட்டான்! எல்லாப் பெண்களையும் நீங்களே "பிரண்ட்" பிடித்துக் கொள்வதாக நினைத்துக் கொள்கிறான்! பாவம்...! அவனைக் கண்டால்தான் பெண்கள் அஞ்சி ஓடிவிடுகிறார்களே...!"

"ஏய் லல்லி! பாவம், அவனைப் பற்றி அநியாயமாகச் சொல்லாதே! அவனைப் பார்த்தால் "நியூவேவ்" படத்தின் ஹீரோ மாதிரியல்லவா "ஸ்டைலாக" இருக்கிறான்..."

"ஆனால் குணம் வில்லனாக இருக்கிறதே..." இப்போது லல்லியோடு கோபியும் சேர்ந்து கொண்டு சிரித்தான்.

"முக்கியமான விஷயத்தைச் சொல்ல மறந்து விட்டேன்...! அன்று சினிமாவுக்கு சென்றிருந்தபோது தியேட்டர் வாசலில் பார்த்தோமே நினைவிருக்கிறதா...?"

"இல்லாமல் என்ன? வனிதாவை அன்றுதானே முதன் முதலில் அறிமுகப்படுத்தினாய்..."

லல்லி சட்டென்று அவன் முகத்தை ஏறிட்டுப் பார்த்தாள்! அவன் வனிதாவைப் பார்ப்பதில் லயித்திருந்தான்!

அப்படியானால்...? கோபியும் அவளை...!

அவள் முகத்தில் பலவித உணர்வுகளின் ரேகைகள் படியத்தொடங்கின.

கோபி தன்னை மறந்தவனாக அவளையே பார்த்துக்கொண்டிருந்தபோது வனிதாவும் அவனையே பார்த்துக் கொண்டிருப்பதைக் கண்டாள்.

உறவாடும் அவ்விழிகளைப் பார்த்தபோது லல்லிக்கு அவர்களின் நிலைமை புரியத் தொடங்கியது.


அதன் பிறகு அவளால் எதுவும் பேச முடியவில்லை!

(வளரும்)

வழிகாட்டுகிறார் வள்ளுவர்

பற்றுக்குறைப் பல்லவிக்கு முற்றுப்புள்ளி வையுங்கள்

முருகு சுப்பிரமணியன்



நாம் எடுத்துக் கொள்ளும் மூன்றாவது குறள் பொருட்பாலில் வலியறிதல் என்னும் அதிகாரத்தில் இடம் பெற்றிருக்கும் 478ஆவது குறளாகும்.

**"ஆகாறு அளவிட்டி தாயினுங் கேடில்லை
போகாறு அகலாக் கடை" (478)**

மேற்படி குறளுக்கு டாக்டர் மு. வ. எழுதி இருக்கும் தெளிவுரை வருமாறு: "பொருள் வரும் வழி (வருவாய்) சிறிதாக இருந்தாலும் போகும் வழி (செலவு) விரிவுபடாவிட்டால் அதனால் தீங்கு இல்லை."

குபேரர்கள்முதல் மிகச் சாதாரண நிலையிலுள்ள ஏழை எளியவர்கள் வரை எல்லாரும் வாழ்க்கையில் கடைப்பிடிக்கவேண்டிய ஒரு விதியை இந்தக் குறள் மிக அழகாகக் கூறுகிறது. பொருள் இல்லார்க்கு இவ்வுலக மில்லைஎன்பதும், மனிதனை மற்றவர்கள் பொருட்படுத்தக் கூடியவகை மாற்றுவது பொருளே என்பதும் திருவள்ளுவரின் தீர்க்கமான முடிவாகும். அதனால்தான் கல்வியை வலியுறுத்திய அளவுக்குப் பொருளின் இன்றியமையாத நிலையையும் பல்வேறு குறள்களில் அழுத்தமாக -நம் மனத்தில் தைக்கும்படியாக -எடுத்துக் காட்டியிருக்கிறார். மக்களிடையே பண வசதியில், வருவாய் தேடுவதில் மாறுபட்ட பல்வேறு நிலைகளையும், ஏற்ற இறக்கங்களையும் காண்கிறோம். "வருவாய் போதவில்லையே" என்னும் மனக்குறை ஆண்டுக்கு லட்சக்கணக்கில் சம்பாதிக்கின்ற வர்த்தகரிடையே கூட காணப்படுவதை நாம் புரிந்துகொள்ள முடிவதில்லை. பாலுக்குச் சீனியில்லை என்று பரிதவிக்கின்ற வசதி படைத்தோர் நிலையுமுண்டு. கூழுக்கு உப்பில்லை என்று கண்ணீர் வடிக்கின்ற ஏழைகளுமுண்டு.

அரசாங்க உயர் அதிகாரிகளையும், பெரிய வர்த்தக நிறுவனங்களில் உச்சமட்டங்களில் பணிபுரியும் நிர்வாகிகளையும் எடுத்துக் கொண்டால் அவர்களில் பலர் மாதந்தோறும் மூவாயிரம் வெள்ளி, ஐயாயிரம் வெள்ளி, பத்தாயிரம் வெள்ளி என்று முரட்டுச் சம்பளம் வாங்குபவர்களாக இருப்பார்கள். அவர்கள் எல்லா வசதிகளோடும் வாழ்வார்கள். ஆனாலும் அவர்களிலும் பெரும்பாலோருக்கு எவ்வளவு வந்தும் போதவில்லையே என்னும் மனக்குறை தீராத பிணியாக வருத்திக் கொண்டிருக்கும்.

கீழ்மட்டத்திற்குச்சென்று, மாதம் நூறு வெள்ளி, இருநூறு வெள்ளி என்று குறைவாகச் சம்பளம் எடுக்கிறவர்களின் வீடுகளில் விசாரித்துப் பார்த்தால் அங்கும் இதே பல்லவிதான். "வாழ்க்கைச் செலவு ஏறிவிட்டது. இந்த வருமானம் எந்த மூலைக்குப் போதும்?" என்று அவர்கள் மூக்கால் அழுவார்கள்; எப்பொழுதும் முணுமுணுத்துக் கொண்டிருப்பார்கள்.

அகலமான இடைவெளி

தனி மனிதர் வாழ்க்கையில் மட்டுமின்றி ஆட்சி புரிந்து வருகிற அரசாங்கங்களுக்குக்கூட இந்தப் பற்றுக் குறை, செலவுக்குத் தகுந்த வரவு இல்லையே என்னும் போதாத நிலை இருந்து வருவதை நாம் காண முடிகிறது. பெரும்பாலான நாடுகள் வரவுக்கு மீறிச் செலவு செய்து அகப்பட்ட இடத்திலெல்லாம் கடன் வாங்கிப் பற்றுக்குறை வரவு செலவுத் திட்டங்களைத் தயாரித்துக் காலத்தை ஓட்டி வருவது கண்கூடு. ஒரு சில விரல் விட்டு எண்ணக்கூடிய நாடுகள் மட்டுமே துண்டு விழாத உபரி வரவு செலவுத் திட்டங்களை கருத்தோடு தயாரித்துத் தங்கள் நாட்டின் பொருளாதாரத்தைப் பாதுகாப்பான நிலையில் வைத்திருக்கின்றன. கடன் பளு தாங்க முடியாத அளவுக்கு ஏறிவிட்ட நிலையில் கரன்சி நோட்டுக்களைக் கணக்கு வழக்கு இல்லாமல் அச்சடித்து நிர்வாகத்தை நடத்துகின்ற பொறுப்பற்ற அரசாங்கங்களும் உண்டு.

திருவள்ளுவர் வாழ்க்கை அனுபவம் நிறைந்தவர். அவர் தம் வாழ்நாளில் சந்தித்த பல்வேறு தரப்பட்ட ஆட்களையும், அவர்கள் எதிர்நோக்கும் சிக்கல்களையும் கூர்ந்து நோக்கியிருப்பது,திருக்குறளைப் படிக்கும் யாருக்கும்நன்கு புலனாகும். மனிதன் எதிர்நோக்கும் எண்ணற்ற சிக்கல்களில் மிக முக்கியமானது இந்தப் "பற்றுக் குறை" என்பதை அவர் புரிந்து கொண்டார். ஆயிரம் சம்பாதித்தாலும் ஐந்நூறு சம்பாதித்தாலும், ஐம்பது வெள்ளி சம்பாதித்தாலும் எல்லாரிடமும் பெரும்பாலும் பற்றுக்குறை-"வருவாய் போதவில்லை" என்னும் மனக்குறை- தலைதூக்கி நிற்பதை அவர் கண்டார். குறைந்த வருமானம் கிடைப்பவர்களிடம் மட்டுமின்றிக் கூடுதலான வருமானம் குவிந்து கொண்டிருக்கிறவர்களிடம் கூட இந்தப் பற்றுக்குறை- வரவுக்கும் செலவுக்கும் பொருந்தி வராத அகலமான இடைவெளி பெரும்பாலும் இருப்பதை அவர் கண்டார். அவர் மனம் இதற்கொரு பரிகாரத்தை ஆராய்ந்தது. அதன் பலன்தான் கட்டுரையின் தொடக்கத்தில் குறிப்பிட்டிருக்கும் குறளாகும்.

வருகின்ற பணத்தையெல்லாம் செலவழித்து விட்டு அதற்கு மேலும் கடன் வாங்கி, அடுத்த மாதச் சம்பளத்தையும் கரைத்துக் கொண்டிருப்போர் நம்மிடையே அதிகம். கவலையற்ற ராஜாக்கள் என்று அவர்களைச் சொல்லலாம். எவ்வளவு வருகிறது, எவ்வளவு போகிறது என்பதைப் பற்றியெல்லாம் அவர்கள் சிந்திப்பதில்லை.

கையிலும் பையிலும்

கையிலும், பையிலும் காசிருக்கும் வரை செலவழித்து முடிப்பார்கள். திட்டமிட்டுப் பணம் ஒதுக்கிச் செலவுகளை ஆராய்ந்து கணக்காகப் பணத்தை விநியோகிக்கும் பழக்கத்தை அவர்களிடம் காண முடியாது. கையில் காசு தீர்ந்தவுடன் கடன் கொடுக்கிற இடங்களைத் தேடி ஐந்து வட்டி, பத்து வட்டி என்று "தடி" வட்டிகள் கொடுத்துக் கடன் வாங்கவும் இந்த ராஜாக்கள் தயங்கமாட்டார்கள். இவ்வாறு திட்டமில்லாமல் செலவு செய்து தங்களையும், தங்கள் குடும்பத்தையும் ஒட்டாண்டி நிலையில் வைத்திருப்பவர்கள் ஏராளம். அவர்களுக்கு இந்தக் குறள் நல்ல படிப்பினையை நல்குகிறது

வரவுக்கு மேல் செலவு செய்து கண்ணியமாக கட்டுச்செட்டாக வாழத் தெரியாதவர்கள் கூட்டமே எந்த நாட்டிலும் மிகுதி. அவர்களுக்கு மத்தியிலும் கெட்டிக்காரர்களாக, பணத்தின் அருமை தெரிந்தவர்களாக, சிக்கனத்தின் சிறப்பைப் புரிந்தவர்களாகத் தங்கள் வருவாயை அளந்து செலவிட்டு, தக்க சேமிப்போடு கண்ணுங் கருத்துமாக வாழ்கிறவர்களும் உண்டு.

அவர்களின் எண்ணிக்கை குறைவாக இருந்த போதிலும், மக்களிடையே பொருட்படுத்த வேண்டிய-"பசை" உள்ளவர்களாக அவர்கள் தலைநிமிர்ந்து நம்பிக்கையோடு வாழ்ந்து வருவார்கள். இத்தகைய சாமர்த்திய சாலிகளில் பலரையும் வள்ளுவர் ஆராய்ந்து பார்த்திருக்கிறார். இந்தச் சாமர்த்தியசாலிகளில் ஆயிரம் வெள்ளி, இரண்டாயிரம் வெள்ளி என்று சம்பாதிப்பவர்களும் இருந்தார்கள். அதே சமயத்தில் இருநூறு, நூறு என்று குறைவாகச் சம்பளம் எடுப்பவர்களும் இருந்தார்கள். இந்த இரு தரப்புக்கும் மாத வருமானத்தில் கணிசமான வேறுபாடு இருந்தாலும், இரு தரப்பாரும் தங்கள் வரவுக்குத் தகுந்த செலவு செய்து சிக்கனமாக வாழ்வதையும், சேமிப்புக்களை அவர்கள் கணிசமாக வைத்திருப்பதையும் வள்ளுவர் கண்டார். வரவுக்கு மேல் செலவு செய்து வாழத் தெரியாமல் பரிதவிக்கின்ற ஊதாரிகளையே கண்டு கண்டு அலுத்துப் போன வள்ளுவருக்கு இந்தச் சிக்கனக்காரர்களின் சிறப்பு பூரிப்பை உண்டாக்கிற்று. நம்பிக்கையோடு அவர்களை அணுகி "நூறு வெள்ளி சம்பாத்தியத்தில் எப்படி உன்னால்சிக்கனமாகவாழ முடிகிறது"என்று கேட்டுப் பார்த்தார். அவர்கள் கூறிய விடைதான் வள்ளுவர் நமக்கு வழிகாட்டியாக தந்திருக்கிற இந்தக் குறளாகும்.

தாரக மந்திரம்

வரவுக்கேற்ற செலவு என்னும் தாரக மந்திரத்தை இந்தக் குறள் நமக்கு உபதேசிக்கிறது. நமக்கு வருகின்ற வருமானத்தின் அளவை அறிந்து அதற்கேற்ப மாதந்தோறும் குடும்ப "பட்ஜெட்" போட்டு, அதில் ஒரு பகுதியைச் சேமிப்பாக வங்கியில் மாதந்தோறும் போடுகின்ற சீரிய பழக்கத்தை நம்மவர்கள் -முக்கியமாக மாதச் சம்பளம் எடுப்பவர்கள்- கடைப்பிடிக்க வேண்டும். இது எப்படிச் சாத்தியம் என்று விலைவாசிகள் ஏறிக் கொண்டிருக்கிற இக்காலத்தைச் சுட்டிக் காட்டிப் பலர் கேள்வி எழுப்பக் கூடும். வாழ்க்கைச் செலவு ஏறிவருவது உண்மைதான். அதற்கு ஏற்ப சம்பளமும், வருமானமும் ஏறிக்கொண்டு வருவதையும் யாரும் மறுக்க முடியாது. இதில் முற்றிலும் மனநிறைவு அளிக்கத்தக்க நிலையை யாரும் எதிர்பார்க்க முடியாது. வள்ளுவர் சொல்கிற சூத்திரப்படி வருமானம் நூறு வெள்ளி என்றால் தொண்ணூறு வெள்ளிக்குச் செலவுப்பட்டியல் தயாரியுங்கள். பத்து வெள்ளியைச் சேமிப்பில் போடுங்கள். 1000 வெள்ளி வருமானமென்றால் 900 வெள்ளியைச் செலவுக்கு ஒதுக்குங்கள். 100 வெள்ளியைச் சம்பளம் வந்தவுடன் சேமிப்புக் கணக்கில் சேர்த்து விடுங்கள்.

மேற்கண்ட நடைமுறை சாத்தியமில்லை என்று கருதுகிறவர்கள், குறைந்த வருவாயிலும் நிறைந்த மனத்தோடு சீரும் சிறப்புமாக, சிக்கனமாக வாழ்கிற குடும்பங்களைக் கண்டு அவர்களிடமிருந்து ரகசியங்களைக் கேட்டறிந்து,புத்திசாலிகளாகப்பிழைக்க முற்பட வேண்டும்.

நான் சந்தித்த சிக்கனக்காரர்கள் பலர் எனக்கு மலைப்பை ஊட்டியிருக்கிறார்கள். மாதம் தொண்ணூறு வெள்ளி சம்பாதித்த ஒருவர் அந்தப் பணத்தில் சேமிப்புச் செய்து பணத்தைப் பெருக்கி இருபது ஆண்டு காலத்தில் லட்சாதிபதியாக உயர்ந்திருப்பதைப் பார்க்கிறேன். தொண்ணூறு வெள்ளி சம்பளம் எந்த மூலைக்கு என்று அலட்சியம் செய்து, அளவுக்கு மீறிச் செலவு செய்த அவர்களுடைய சகாக்கள் பலர் இன்றும் மாதச் சம்பளம் வாங்கும் வயிற்றுப்பாட்டுக்காரர்களாகவே அன்றுபோல் இன்றும் பற்றாக்குறை பல்லவியோடு தரித்திர நாராயணர்களாக வாழ்வதையும் கண்கூடாகப் பார்க்கிறேன். ஒரே சம்பளம் எடுத்த இந்த இரு தரப்பாரிடையேயும் வாழ்க்கையில் ஏற்பட்டிருக்கும் முன்னேற்றத்தில் காணப்படும் வித்தியாசத்திற்குக் காரணம் யாது?

எத்தனை இலக்கம்?

வாங்குகிற சம்பளம் எத்தனை இலக்கம் என்பது முக்கியமல்ல. அறுநூறு வெள்ளியாக இருந்தாலும், ஆயிரம் வெள்ளியாக இருந்தாலும் வரவு செலவு தெரியாத ஊதாரிகளுக்கு இந்தத் தொகை எப்படி இருந்தாலும் ஒன்றுதான். அவர்கள் 100 வெள்ளி எடுத்தால், 150 வெள்ளி செலவழிப்பார்கள். 1000 வெள்ளி எடுத்தால் 2000 வெள்ளிக்குச் செலவு வைத்திருப்பார்கள். இவர்களுக்கு வருமானம் கூடுவதால் யாது பயன்? அவருக்கும் பயன் இல்லை. அவருடைய குடும்பத்தாருக்கும் பயனில்லை.

குறைந்த சம்பளம் எடுத்தாலும், நிறைந்த சம்பளம் எடுத்தாலும் அதில் ஒரு விழுக்காட்டைச் சேமிக்கத் தெரிந்தவனே புத்திசாலி. அவன் வள்ளுவர் காட்டிய வழியை நன்கு உணர்ந்திருக்கிறான் என்று பொருள்.

"குறைந்த சம்பளம் என்று கவலைப்படாதே, அந்தச் சம்பளத்திற்கு ஏற்றபடி உன் செலவை வகுத்துக்கொள்" என்பதுதான் வள்ளுவர் காட்டுகிற வழி. 5000 வெள்ளி சம்பாதித்து ஒரு காசுகூடச் சேமிக்காமல் கடனாளியாக வாழ்கின்ற அந்தஸ்து மிகுந்த பெரிய மனிதனைக்காட்டிலும், நூறு வெள்ளி சம்பளம் எடுத்து மாதந்தோறும் ஐந்து வெள்ளியைச் சேமிப்பு வங்கியில் எதிர்காலத்திற்காகச் சேர்த்து வருகிறவன் சமுதாயத்தின் மதிப்பைப் பெறுகிறான். ஆகவே வரவுக்கு ஏற்ற செலவு, விரலுக்குத் தகுந்த வீக்கம் என்னும் கோட்பாட்டை நம்மவர்கள் மனத்தில் பதியவைத்துக் கொள்ள வேண்டும். வருகின்ற பணம் குறைவாக இருந்தாலும் பரவாயில்லை. கையைவிட்டுப் போகின்ற பணம் அதனைவிடக் குறைவாக இருக்கவேண்டும். இந்தச் சூக்குமத்தை நன்கு புரிந்து கொண்டால் பெரிய வருமானம் ஈட்டுபவர்களாயினும், சிறிய ஊதியம் பெறுபவர்களாயினும், கட்டுக்செட்டாக, சிக்கனமாக, அண்டை அயலார் மதிக்கத்தக்க முறையில் அந்தஸ்தோடு வாழ முடியும்.

தோட்டப்புறங்களில் கூட ஒருசில குடும்பங்கள் கண்ணியமாக வாழ்வதையும், அதே வருமானத்தைப் பெறுகிற மற்றும் பல குடும்பங்கள் வாழ வழி தெரியாமல் திண்டாடுவதையும் காண முடிகிறது. ஒரே வேலையில், ஒரே சம்பளத்தில் வேலை பார்க்கிற இந்தக் குடும்பங்களிடையே ஏன் இந்த வேறுபாடு? சிக்கனமாகச் சேமித்து அளவோடு வாழத்தெரிந்தவர்கள் வாழ்க்கையில் மின்னுகிறார்கள்; தங்கள் குழந்தை குட்டிகளையும் மின்ன வைத்துக் கல்வியிலும் பிரகாசிக்கச் செய்கிறார்கள்.

இந்த உண்மையைத்தான் வள்ளுவர் நமக்கு அழுத்தமாகச் சுட்டிக்காட்டுகிறார். வருமானத்தின் அளவு முக்கியமல்ல, பெரும்பணம் வந்தாலும், சிறு தொகை வந்தாலும் அந்தஅந்த வருமானத்திற்கு ஏற்பச் செலவுப் பட்டியலை வகுத்துக் கொண்டால் வாழ்க்கையில் கேடு நேரிடாது. கடனாளியாகத் தெருவில் நின்று, திண்டாட வேண்டிய அவலம் வாராது. இந்தக் குறளைக் கட்டமிட்டுப் பெரிய எழுத்தில் எழுதி ஒவ்வொரு வீட்டிலும் எல்லாருடைய கண்ணிலும் தெரியும்படியாகக் கண்ணாடி போட்டுவைப்பது நன்று. சிக்கனமாகச் சேமித்து வாழச் சீரிய வழிகாட்டுகின்ற இந்தக் குறளை மீண்டும் மீண்டும் படியுங்கள். வாழ்க்கையில் தவறாமல் கடைப்பிடியுங்கள்.

"ஆகாறு அளவிட்டி தாயினுங் கேடில்லை
போகாறு அகலாக் கடை" (478)

பேராளர் பெருமை

கடந்த 2.7.77இல் பேரவை நடப்பதற்கு முன் தேர்தலில் வேட்பாளர்களாக நின்றவர்கள் அறிக்கைகளை அச்சிட்டுக் கட்டுக் கட்டாக ஒவ்வொரு பேராளர்க்கும் தனித் தனியே அனுப்பிக்கொண்டிருந்தனர்.

எத்தனை விதமான அறிக்கைகள்! எத்தனை விதமான வேண்டுகோள்கள்! எத்தனை விதமான வாக்குறுதிகள்! அப்பப்பா, சொல்லி முடியாது!

தேர்தல் முடிந்தது! தோற்றவர் பலர்; வென்றவர் சிலர்! ஆனால் பேராளர்களுக்கு ஒரு நன்றிக் கடிதம்

அதனால்தான் ஒரு பேராளர் 'நம்முடைய அருமை பெருமையெல்லாம் 2ஆம் தேதி வரைதான்" என்றார்.

-ஒரு பேராளன்

15 நாள் பலன்

ஆக. 10 முதல் 25 வரை

கும்பம் (ஜன. 20 — பிப். 18)

குடும்பத்தைச் சேர்ந்தவர்களோ, நண்பர்களோ உங்களுக்குச் சில புதிய தொல்லைகளைத் தரக்கூடும். பெரியோர்களின் ஆலோசனையைக் கேட்டுச் செயல்படுங்கள். இன்சூரன்ஸ் போன்றவற்றை எடுத்துக் கொள்வதற்கு இது நல்ல நேரம். பயணங்களைக்கூடுமானவரைதவிருங்கள். அடிக்கடி ஆத்திரமும் கோபமும் கொள்ளவேண்டிய சந்தர்ப்பங்கள் வரலாம். நிதானமாக இருங்கள்.

நல்ல நாட்கள்: 11, 15, 19
எச்சரிக்கை நாட்கள்: 13, 23

மீனம் (பிப் 19- மார்ச்சு 20)

முற்றாக உங்களுக்குச் சொந்தமாகாத எந்தப் பொருளுக்காகவும் பணத்தைச் செலவிடாதீர்கள். அதாவது கூட்டாக எதையும் வாங்காதீர்கள். மற்றவர்களின் வற்புறுத்தலினால் எதிலும் அவசர முடிவு எடுப்பது ஏற்றதல்ல. நீங்கள் போடும் புதிய திட்டங்களுக்குக் குடும்பத்தினர் முழு உற்சாகம் அளிப்பார்கள். அதனால் உங்களுக்குத் தன்னம்பிக்கையும் தைரியமும் அதிகம் உண்டாகும். பிறகென்ன; எல்லாம் வெற்றிதான்.

நல்ல நாட்கள்: 17, 21, 23
எச்சரிக்கை நாட்கள்: 13, 22

மேஷம் (மார்ச்சு 21 - ஏப். 20)

காரண காரியமின்றிச் செய்தொழிலில் தப்பும் தவறும் ஏற்படலாம். இயந்திரம் சம்பந்தப்பட்ட தொழில் என்றால் மிகவும் கவனம் தேவை. வேறு வேலை எதுவும் தேடிக் கொண்டிருப்பீர்களாயின் ஏமாற்றம்தான் மிஞ்சும். பெரியோர்களின் ஆலோசனைகளும் குழப்பமாகவே இருக்கலாம். என்றாலும் உறவினர்கள் உதவி உபயோகமானதாகவே இருக்கும்.

நல்ல நாட்கள்: 19, 21, 23
எச்சரிக்கை நாட்கள்: 13, 20

ரிஷபம் (ஏப். 21 - மே 20)

எல்லா நிலைகளிலும் கூட்டு முயற்சிகள் பலனளிக்கும். கடினமாக உழைக்கும் அதே வேளையில் உடலாரோக்கியத்தையும் கவனித்துக் கொள்ளுங்கள். செய்தொழிலில் வருமானம் உயர வழி பிறக்கலாம். சிலருக்குப் புதிய-நல்ல வேலைகிடைக்கும் வாய்ப்புண்டு. உறவினர்கள் உங்களிடம் சுமுகமாக இருப்பார்கள். செலவு அதிகரிக்கலாம். சிக்கனம் தேவை.

மிதுனம் (மே 21-ஜூன் 20)

உடலாரோக்கியத்திலும், வாகனப் போக்குவரத்திலும் கவனமாக இருக்க வேண்டும். பெரியோர்களின் ஆதரவு கிட்டும். செய்யும் முயற்சிகள் பலன் அளிக்கும். கற்பனைக்கு வாய்ப்புள்ள இலக்கியம், சித்திரம் போன்றவற்றில் ஈடுபாடு உடையவர்களுக்கு நல்லது. பொருள் வரவு உண்டாகும். தேவையற்ற செலவுகளைக் குறைத்தால்தான் பணத்தட்டுப்பாடு ஏற்பட வழியிருக்காது.

நல்ல நாட்கள்: 19, 24
எச்சரிக்கை நாட்கள்: 13, 21

கடகம் (ஜூன் 21-ஜூலை 20)

உங்களைச் சேர்ந்தவர்கள் உங்களுக்கு அனுகூலமாக இருந்தாலும் அவர்களிடமிருந்து அதிகபட்ச உதவியை எதிர்பார்க்காதீர்கள். காதல் விவகாரங்களில் சம்பந்தப்பட்டவர்களுக்குத் தோல்வி ஏற்படும் சந்தர்ப்பங்கள் வரலாம். பண நெருக்கடி குறையும். தொலைபேசி, அஞ்சல் மூலமாக வரும் செய்திகள் பயன் கொடுக்கும்.

நல்ல நாட்கள். 11, 15, 19
எச்சரிக்கை நாட்கள்: 13,18,20

சிம்மம் (ஜூலை 21 - ஆக 21)

ஏதாவது புது முயற்சிகளில் ஈடுபட நினைக்கிறீர்களா? பொறுத்திருந்து சில நாட்களுக்குப் பிறகு அவற்றில் ஈடுபடுங்கள். மற்றவர்களின் சங்கடங்களை உங்களுக்கு வந்தவையாக நினைத்து நீங்கள் கலங்கவேண்டியிருக்கும். வியாபாரிகளாயிருந்தால் பணமுடை ஏற்பட வழியுண்டு. பிரமுகர்களின் அறிமுகத்தால் சில நன்மைகள் கிடைக்கும்.

நல்ல நாட்கள்: 19, 24,
எச்சரிக்கை நாட்கள்: 13,14,23

கன்னி (ஆக 22-செப் 22)

உடலாரோக்கியம் பாதிக்கும் வாய்ப்பு உண்டு. அதனால் நீங்கள் செய்ய நினைத்த காரியங்களுக்கும் தடங்கல்கள் ஏற்படும். ஆனாலும் பண விஷயத்தில் உங்களுக்கு எந்த விதத் தொல்லையும் ஏற்படாது. ஏனெனில் அதிர்ஷ்டக் காற்று உங்கள் பக்கம்தான் வீசிக்கொண்டிருக்கிறது.

சொந்தக்காரர்களின் நடவடிக்கைகளும் யோசனைகளும் குழப்பத்தைத் தருமென்றாலும் பெரிய தலையிடியை அவை தந்துவிடமாட்டா. வாகனப் போக்குவரத்து ஏற்றதல்ல.

நல்ல நாட்கள்: 15, 17, 19
எச்சரிக்கை நாட்கள்: 14, 23

துலாம் (செப் 23-அக். 22)

செய்யும் வியாபாரமோ, தொழிலோ மந்தமாக இருப்பது போல் தோன்றினாலும் பொருளாதார நிலை அபிவிருத்தி அடைந்து வருவதாகவே சொல்லவேண்டும். உடல்நிலை பாதிக்கப்பட்டிருந்தால் குணமடையும் சூழ்நிலை உருவாகிறது. உங்களுக்கு உதவ நினைத்துக் கொண்டிருப்பவர்களை நீங்கள்தான் நன்கு பயன்படுத்திக்கொள்வதில்லை போல் தெரிகிறது.

நல்ல நாட்கள்: 15, 17, 22
எச்சரிக்கை நாட்கள்: 12, 22

விருச்சிகம் (அக் 23- நவ. 22)

பணம் சம்பாதிக்கும் உங்கள் முயற்சிகளுக்கு நண்பர்கள் - குறிப்பாக வெளியூரில் இருப்பவர்கள் உதவுவார்கள். பெரிய "புள்ளி"களின் உதவி கிடைக்கும் என்று நினைத்துக்கொண்டிருக்க வேண்டாம். பகற்கனவு பெரும்பாலும் பலிக்காதல்லவா? கூட்டு முயற்சிகள் பலன் தரும். நீங்கள் எதிர்பாராத சம்பவங்கள் சில நிகழும். அவை நல்லவையா; தொல்லையானவையா? பொறுத்திருந்து பாருங்கள்.

நல்ல நாட்கள்: 15, 19
எச்சரிக்கை நாட்கள்: 13, 23

தனுசு (நவ. 23 - டிச. 20)

பொருளாதாரத்தைப் பெருக்கும் முயற்சிகளில் முழுமூச்சாக இறங்கி வேலை செய்ய நல்ல வேளை இது. ஒருபுறம் நண்பர்களால் சில எதிர்பாராத சங்கடங்கள் வந்தாலும் மறுபுறம் பெரியோர்களின் ஆதரவு கிடைக்கும். பழைய கடன்களைத் தீர்க்க வாய்ப்பு உண்டு. இழுபறியாகக் கிடக்கும் பல பிரச்சினைகளுக்கு முடிவு உண்டாகும். எந்த முயற்சிகளையும் "காமா சோமா" வென்று அவசரமாகச் செய்ய முனையாமல் நிதானமாகச் செய்யுங்கள். நிதானம்தான் முன்னேற்றத்திற் பெருந்தனம்!

நல்ல நாட்கள்: 15, 24
எச்சரிக்கை நாட்கள்: 12, 23

மகரம் (டிச. 21- ஜன. 19)

பண வரவுக்காக நீங்கள் மேற்கொள்ளும் எல்லாவிதப் போக்குவரத்தும் நூற்றுக்கு நூறு என்றில்லாவிட்டாலும் எழுபது சதவிகிதமாவது வெற்றியைத் தரும். அது மட்டுமல்ல. கடிதப் போக்குவரத்தும் நன்மையே தரும். வந்ததை எல்லாம் செலவழித்துவிட்டால் எதிர்கால வாழ்க்கை என்னவது? ஆகவே, சேமிக்க முயலுங்கள். கணக்கு எழுதுபவர்கள் மிகவும் கவனமாக இருக்கவேண்டும்.

நல்ல நாட்கள்: 19, 21
எச்சரிக்கை நாட்கள்: 16, 23

—தஞ்சை நகுலன்

இறைவன் அருள்

வ.முனியன்

பதிலில்லை.

"சா...ர்...ர்" மீண்டும் நீட்டி முழக்குகிறார் எங்களுடன் வந்திருக்கும் ஒருவர்.

"யாரய்யா அது?" "குசுனி"ப் பக்கமிருந்து அதட்டல் குரல் ஒன்று வெளி வருகிறது.

"கோவில் வசூலுக்கு வந்திருக்கோங்க" கோவில் பொருளாளர் பதில் குரல் கொடுக்கிறார்.

"என்னய்யா இது! நேத்துத்தானே மூன்று பேர் கோயில் வசூலுக்கு வந்தாங்க. இன்னைக்கு நீங்க வந்திருக்கீங்க. மாசம் பூரா இப்படியே வந்துக்கிட்டிருந்தா யாருக்குத்தான் பணம் கொடுப்பது? பணம் என்ன கித்தா மரத்திலா காய்க்குது?" கேள்வி கேட்டுக்கொண்டே வெளியே வருகிறார் அவர். நிதி கொடுத்துக் கொடுத்தே ஓட்டாண்டியாகி விட்டவர்போல் சலித்துக் கொள்கிறார். அவரைப் பார்க்கும்போது அவரது நிலை அதை உறுதி செய்கிறது.

"இதோ பாருங்க. நீங்க இப்படியெல்லாம் கூறக்கூடாதுங்க. நேத்து வந்தவங்க நாங்க இல்லீங்க. இது நம்ப கோயிலுக்காகங்க. நம்ப கோயிலுக்கு நாம திருவிழா நடத்தாம வேறு யாருங்க செய்வாங்க? உங்களைப் போன்றவங்க இருப்பதால்தாங்க ஒவ்வொரு வருசமும் திருவிழாவே நடத்த முடியுதுங்க" கோயில் கமிட்டிகளில் ஒருவர் நயந்து பேசுகிறார். அனுபவம் அவருக்குக் கை கொடுக்கிறது.

முகஸ்துதி வேலை செய்ய ஆரம்பித்து விடுகிறது. "திருவிழா என்னைக்குங்க?" வீட்டுக்குரியவர் இறங்கி வருகிறார்.

"வர்ர பத்தாம் தேதிங்க" கோயில் செயலாளர் அச்சடித்த மஞ்சள் வண்ணப் பத்திரிகை ஒன்றை நீட்டுகிறார்.

பத்திரிகை கை மாறுகிறது. "போன திருவிழாவுக்கு இரண்டு படம் காட்டினீங்க. இந்த வருஷம் எத்தனைப்படம் காட்டுறீங்க?" வசூல் கொடுப்பதற்கு முன் அவர் தன் உரிமையைப் பயன்படுத்திக் கொள்கிறார்.

"என்னங்க இப்படிக் கேட்டுட்டீங்க இந்த வருசமும் திருவிழாவுக்கு படங்களோட பேரு என்னென்னு இன்னும் நிச்சயமா சொல்ல முடியலிங்க. இதோ பாருங்க, பத்திரிகையிலேகூட ரெண்டுபடம் காட்டறதா போட்டிருக்கோம்" கோயில் காரியதரிசி பத்திரியின் கடைசியில் ஓரிடத்தைச்சுட்டிக் காட்டுகிறார்.

"ஆமா...ஆமா, நான் சரியா கவனிக்கலே" தன் கல்வியறிவின்மையைப் பூசி மறைக்கிறார்.

"கொஞ்சம் இருங்க. இதோ வந்திடறேன்" வீட்டுக்குள் நுழைகிறார். டப்பாக்கள் திறந்து மூடப்படும் சத்தம் கேட்கிறது.

வசூல் கிடைத்து விடுகிறது. அவர் நீட்டிய ஒரு வெள்ளியை வாங்கிக்கொண்டு பெயரைக் கேட்டு நோட்டுப் புத்தகத்தில் பதிந்து கொள்கிறார் பொருளாளர்.

அவருக்கு நன்றி கூறியதோடு அவர் கண்டிப்பாகத் திருவிழாவுக்கு வர வேண்டுமென்று ஒப்புக்குக் கூறி விட்டு அங்கிருந்து அடுத்த வீட்டை நோக்கி நகருகிறோம்.

"பார்த்தீங்களா? நான் முன்பே கூறினேனில்லையா. படம் காட்டலேனா வசூல் கிடைக்காதுன்னு" கோயில் செயலாளர் என்னை நோக்கிக் கேலிப் புன்னகையுடன் கூறுகிறார். மற்றவர்களின் பார்வையிலும் விஷமம் கலந்திருப்பதை உணர்கிறேன்.

நான் அந்த ஊருக்குப் புதியவன். வேலை மாற்றலாகி அங்கு வந்து சுமார் ஒரு வருடமே ஆகியிருந்தது. ஊர் சிறிய ஊராகையாலும் அரசாங்க வேலையில் நான் இருப்பதாலும் விரைவில் பலருக்கு அறிமுகமாகி விடுகிறேன். அதன் பலன்... கோயில் கமிட்டிகளில் ஒருவனாகி விடுகிறேன்.

சில தினங்களுக்கு முன் கோவில் கமிட்டிக் கூட்டம் நடைபெற்றபோது எதிர்வரும் பத்தாம் தேதி திருவிழா நடத்த வேண்டுமென்று முடிவெடுத்தனர். பிறகு வசூல் செய்வது பற்றியும் படம் காட்டுவது பற்றியும் பேச்சு எழுந்தபோது நான் என் எதிர்ப்பைக் காட்டத் தயங்கவில்லை. வசூல் செய்து திருவிழா நடத்துவதில் எனக்கு அவ்வளவாக விருப்பமில்லை. அதுவும் கோயில் திருவிழாவின்போது சினிமா காட்டுவதை அடியோடு வெறுப்பவன் நான். ஆனால் நான் என் மறுப்பைத் தெரிவித்தபோது எதிர்ப்பு நாலா பக்கங்களிலிருந்தும் கிளம்பும் என்று நான் எதிர்பார்க்கவில்லை.

"நாம படம் காட்டாவிட்டா இந்த வருசம் திருவிழாவே நடத்த முடியாதுங்க" கமிட்டிகளில் ஒருவர் தனக்குத் தெரியாதது ஒன்றுமேயில்லை என்ற தோரணையில் கூறிவிட்டு ஓர் அலட்சியப் பார்வையையும் என்மீது வீசிவிட்டு அமர்கிறார்.

"கூறினால்தான் எல்லாரும் பணம் தருவாங்க. இல்லாவிட்டா திருவிழா நடத்தவே நமக்குப் பணம் கிடைக்காதுங்க!" கோயில் பொருளாளர் ஒத்து ஊதுகிறார்.

"போன வருசம்கூட பாருங்க, இரண்டு படம் இருக்குன்னு சொன்ன பிறகுதான் பலபேர் பணம் கொடுத்தாங்க!" கோயில் செயலாளர் என்னைப் பார்த்துக் கூறுகிறார்.

நான் தலைவரைப் பார்க்கிறேன். தலைவர் என்னைப் பார்க்கிறார். என்னை ஆதரித்து அவரும் பேச மாட்டார் என்பதை உணர எனக்கு அதிக நேரம் ஆகவில்லை. மற்ற கமிட்டிகளை நோக்குகிறேன். யாரேனும் என்னை ஆதரித்துப் பேசுவார்கள் என்ற ஒரு நப்பாசை. ஆனால் யாரும் என்னை ஆதரிக்கத் தயாராயில்லை. எனவே, நானே என் கட்சியைப் பற்றி வாதாடுகிறேன்.

"நாம் செய்வதோ இறைவனுக்குத் திருவிழா. அன்று ஒரு நாளையாகிலும் இறைச் சிந்தனையிலேயே கழித்தால் நாம் செய்யும் அந்தத் திருவிழாவுக்கும் பெருமை; நமக்கும் பெருமை. அதனால்தான், இறைச்சிந்தனையிலிருந்து நம்மை வேறு பக்கம் இழுத்துச் செல்லும் சினிமாப் படம் வேண்டாம் என்கிறேன்."

யாரும் என் கருத்தை ஏற்றுக் கொள்ளத் தயாராக இல்லை. கோவில் பொதுக்கூட்டங்களும் கலாட்டாக்களும் போன்று, வசூலும் சினிமாப் படமும் பிரிக்க முடியாதவை என்று கருதும் கோவில் நிர்வாகஸ்தர்களைக் கண்டு மனம் வருந்துகிறது.

"பொதுமக்களுக்காகப் பொதுமக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பொதுமக்களான கோவில் நிர்வாகஸ்தர்களை அவனேயன்றி வேறு யாரால் வழிக்குக் கொண்டுவர முடியும்?" மனம் ஏதேதோ எண்ணுகிறது.

இறுதியாக கோவில் திருவிழாவன்றே இரண்டு படங்கள் காட்டுவதென்ற தீர்மானத்துடன் கூட்டம் முடிவடைகிறது.

"சார், கோயில் வசூலுக்கு வந்திருக்கோம்!" கமிட்டிகளில் ஒருவர் குரல் கொடுக்கிறார். சிந்தனை அறுபடுகிறது. அதற்குள் அடுத்த வீட்டிற்கு வந்துவிட்டதை அப்போதுதான் உணர்கிறேன்.

மீண்டும் அதே மாதிரியான கேள்விகள். அதே மாதிரியான பதில்கள். ஆனால், இவர் முன்னவரையும் விட ஒரு படி மேலே சென்று விடுகிறார்.

"இந்த வருசம் எம்.ஜி.ஆர். படம் ஒண்ணு கண்டிப்பா காட்டணும். இல்லாவிட்டா அடுத்த வருசம் வசூலுக்கு வந்துடாதீங்க!" மிரட்டல் விடுக்கிறார். அவர் முருக பக்தரோ இல்லையோ எனக்குத்

கெடா மாநிலத் தமிழ் எழுத்தாளர் – வாசகர் இயக்கம், கெடா மாநில இளம் எழுத்தாளர்களுக்காக அண்மையில் நடத்திய சிறுகதைப் போட்டியில் முதற்பரிசு பெற்ற கதை.

தெரியவில்லை. ஆனால் ஒன்று மட்டும் எனக்குத் தெள்ளத் தெளிவாக, உள்ளங்கை நெல்லிக்கனி போல் தெரிகிறது. அதாவது அவர் "ராம" பக்தன் என்பது.

தலையாட்டிக் கொள்கிறார் பொருளாளர், வசூல் நன்றாக நடைபெற வேண்டாமா? வேறொரு வீட்டை நோக்கி நடைபோடுகிறோம்.

"என்ன மனிதர்கள்! திருவிழா பார்க்கவும் இறைவனைக் கண்ணாரக் கண்டு வணங்கவும் ஆலயத்திற்குப் போவார்களா! படம் பார்க்கப் போவார்களா! மற்ற சமயத்தவர்கள் நம்மைக் கேவலமாகப் பேசுவதில் வியப்பொன்றுமில்லையே!" உள்ளம் எரிமலையெனக் குமுறுகிறது; வார்த்தைகள் வெடிக்கின்றன.

"என்ன மனுசங்க சார் இவுங்க. படம். படம்னு அடிச்சிக்கிறாங்க. கோயிலுக்குச் சாமி கும்பிட யாரும் வர்ரதா தெரியலியே"

"இதுக்குத்தான் சார் நாங்க படம் காட்டணும்னு அன்னைக்கு முடிவெடுத்தோம். உங்க பேச்சைக் கேட்டிருந்தா நாம இந்த வருசம் திருவிழாவே நடத்த முடியாமல்..." பொருளாளர் மேலும் தொடர்வதற்குள் நான் இடையே குறுக்கிடுகிறேன்.

"அதுக்கு இப்படிப்பட்ட திருவிழாவே தேவையில்லையே! படம் பார்ப்பதற்கு நாம திருவிழாவும் நடத்த வேண்டியதில்லை; கோயிலுக்கும் போகவேண்டியதில்லை. நேரா தியேட்டருக்கே போகலாமே! பக்தியே இல்லாத இந்தத் திருவிழாவைக் கண்டு ஆண்டவன் மகிழ்வான் என்று நினைப்பது எவ்வளவு வேதனைக்குரிய விசயம்" என் மனத்தைத் திறந்து கொட்டுகிறேன்.

என் கோபத்தைக் கண்டு பயந்துவிட்டாரோ அல்லது தான் மற்றவர்கள்போல் அல்லாமல் சிந்திக்கும் ஆற்றல் உள்ளவன் என்று நினைத்தாரோ என்னவோ, பொருளாளர் சமுதாயத்தின்மேல் பழியைப் போட்டுத் தப்பித்துக்கொள்ள நினைக்கிறார்.

"இது நம்முடைய சமுதாயத்திற்கு ஏற்பட்ட சாபக்கேடு சார். இந்த ஊர்ல மட்டும் இந்த நிலையில்லை சார். எனக்குத் தெரிஞ்ச பல ஊர்லேயும் இதே நிலை தான் காணப்படுது. என்ன செய்யறதுங்க? ஊர்



போகும் பக்கம்தானே நாமும் போக வேணும்!"

"நீங்க இந்த ஊருக்குப் புதிசு. அதனாலே உங்களுக்கு இதபத்தி சொன்னா அதிகமா புரியாது" வாழ்க்கையில் பலவித அனுபவங்களைப் பெற்றவர்போல் பேசிய கமிட்டிகளில் ஒருவர் என் வாய்க்கு முற்றுப் புள்ளி வைத்துவிடுகிறார்.

வசூல் தொடர்ந்து நடைபெறுகிறது. ஒவ்வொருவரிடமும் நைசாகப் பேசி தங்கள் காரியத்தை வெற்றிகரமாக நடத்திக்கொண்டிருக்கின்றனர் மற்றவர்கள்.

ஆனால் என் மனத்திலோ! கொந்தளிப்பு. புயல் வீசிக்கொண்டிருக்கிறது.

"ஏனய்யா! சம்பளம் போட்டது எப்படியா உங்களுக்குத்தெரிஞ்சது? சம்பளம் போட்டதும் போடாததுமா கடன்காரன் மாதிரி வாசல்ல வந்து நிக்கிறீங்க?"

சுற்றுப்புறத்தை நான் உணர்கிறேன். சுமார் நாற்பது வயது மதிக்கத்தக்க ஓர் அம்மையார்தான் அவ்வாறு வெடித்தவர் என்பதைத் தெரிந்து கொள்ள வெகுநேரம் பிடிக்கவில்லை எனக்கு. "அவருக்கு என்ன கவலையோ, கோபமோ! சம்பளம் வாங்கியதும் கடன் கொடுத்தவர்கள் எல்லாவற்றையும் பிடுங்கிக் கொண்டுவிட்டார்களோ?" மனம் மேலும் நினைக்கத் தயங்குகிறது.

"அம்மா, நீங்க இப்படியெல்லாம் கோபித்துக்கொள்ளக்கூடாது. ஒவ்வொரு வருசமும் நீங்க கொடுக்கிற நன்கொடையில்தானே திருவிழாவே நடக்குது. உங்க ஆதரவு இல்லாவிட்டா இந்த வருசம் நிச்சயமா திருவிழா நடக்காது. நீங்கள் எல்லாம் ஏமாந்துவிடக்கூடாது என்பதற்காக இந்த வருடமும் இரண்டு படம் "புக்" பண்ணியிருக்கோம்" செயலாளர் நயமாக "ஐஸ்" வைக்கிறார்.

அம்மையார் ஓரளவு நெகிழ்ந்து போகிறார். "நான் சாமிக்குக் குடுக்க மாட்டேன்னு சொல்லலீங்க. ஏதோ அவன்தான் அரை வயித்துக் கஞ்சி ஊத்தறான். இருந்தாலும் பாருங்க! கஷ்டத்துக்கு மேலே கஷ்டத்தைக் குடுத்து என்னைச் சோதிக்கிறான்!"

எப்படியோ ஒரு வெள்ளி வரவாகிவிடுகிறது.

அடங்கியிருந்த கொந்தளிப்பு மீண்டும் எழுந்துவிடுகிறது. "இப்படி வசூல் செய்துதான் ஆண்டவனுக்குத் திருவிழா நடத்தவேண்டுமா? ஒருவராவது மனமுவந்து திருவிழா நடத்த நிதி கொடுப்பதாகத் தெரியவில்லையே. மாறாக முகஸ்துதிக்கும் படத்துக்காகவுமே அல்லவா வசூல் கொடுப்பதாகத் தெரிகிறது! கோவில் நிர்வாகத்தினரும்கூட அல்லவா படத்தைச் சொல்லி பணம் வசூல் செய்கின்றனர். ஆண்டவன் இந்தத் திருவிழாவை மனமுவந்து ஏற்றுக்கொள்வானா?"

இதை நான் வெளியில் சொல்லவில்லை. சொன்னால் மற்றவர்கள்தான் என்னைச் சும்மா விடுவார்களா! ஒரு வழியாக வசூல் முடிவடைகிறது. நல்ல வசூல் இந்த வருடம் என்று கூறிக்கொண்டார்கள்.

பத்தாம் தேதி இரவு பன்னிரண்டு மணி. ஊர்வலம் சென்ற சுவாமி இன்னும் கோயிலுக்குத் திரும்பவில்லை. படம் சீக்கிரமே காட்டவேண்டுமென்பதற்காகச் சுவாமி சீக்கிரமே ஊர்வலம் புறப்பட்டுவிட்டதால் இன்னும் சிறிதுநேரத்தில் திரும்பி வந்துவிடும் என்று பேசிக்கொள்கிறார்கள்.

எல்லாரும் ஆவலோடு காத்திருக்கிறார்கள் - தங்களுடைய அபிமான நடிகரின் படத்தைக் காண.

மணி ஒன்று. சுவாமி திரும்பி வருவது தெரிகிறது. கூட்டத்தில் ஒரு சலசலப்பு.

படம் உடனே ஆரம்பிக்கப்பட்டுவிடும் அல்லவா!

எதிர்பார்த்தது போலவே படம் விரைவில் ஆரம்பிக்கப்பட்டு வெள்ளித்திரையில் ஓடுகிறது. கூட்டம் குளிரையும் தூக்கத்தையும் மறந்து வெட்ட வெளியில் உட்கார்ந்து படத்தில் ஒன்றிப்போய் விடுகிறது. "வாத்தியார்" படம்!

கோவிலில் அங்குமிங்குமாக ஓரிருவர் தூங்கி விழுந்துகொண்டிருக்கின்றனர்.

"திருவிழா கோவிலிலா, வெட்ட வெளியிலா?" நினைக்க நினைக்க சமுதாயத்தின் மேலேயே வெறுப்பு. இந்தச் சமுதாயம் திருந்தாதா என்று மனம் எண்ணி எண்ணிக் கலங்குகிறது.

தூற்றல் அங்கொன்றும் இங்கொன்றுமாக விழுகிறது. என் மனம் போலவே வானமும் கலங்குகிறதோ!

சிறிதுநேரத்தில் இது லேசான மழையாக மாறுகிறது. கூட்டம் இன்னும் கலையவில்லை. வெள்ளித்திரையில் யாரோ இருவர் மழையில் நனைந்துகொண்டு ஆடிப்பாடுவது தெரிகிறது. எம். ஜி. ஆரும் "கனவுக் கன்னி" லதாவுமாகத்தான் இருக்கவேண்டும். இல்லாவிட்டால் மழை தூறுவதை கூட்டம் உணர்ந்திருக்குமே!

மழை தூற ஆரம்பித்தும் சலனமில்லாமல் உட்கார்ந்திருக்கும் கூட்டத்தைக் கண்டு மனம் மேலும் அழுகிறது.

மழை வலுத்துவிடுகிறது. இந்தச் சமுதாயத்தின் நிலைகண்டு இறைவன் வடிக்கும் கண்ணீர், மழையாகப் பொழிகிறதோ!


குணசேகரனுக்குப் பொன்னாடை



அரசியல், தொழிலாளர் சங்கம், சமுதாயம் முதலான பல அமைப்புக்களின் மூலமாகக் கடந்த 37 ஆண்டுகளாகத் தொண்டாற்றி வந்திருப்பவர்; இன்றும் அவ்வாறே தொண்டுபுரிந்து வருபவர் கம்பார் திரு. மு. குணசேகரனார். அன்னார் ஆற்றிய தொண்டுகளின் பலனாக மாட்சிமை தங்கிய நமது மாமன்னர் அவர்கள் அன்னாருக்கு அண்மையில் பி.பி.என். விருது வழங்கிச் சிறப்பித்தார்.

மாமன்னர் வழங்கிய விருதோடு கம்பார் வட்டார மருத்துவ மரபினர் 26-6-77ஆம் நாளில் திரு. குணசேகரனாருக்குப் பாராட்டு விருந்தும் வழங்கினர். "புதிய சமுதாயம்" இதழின் ஆசிரியர் திரு. முருகு சுப்பிரமணியன், அவர்களின் சார்பில் பொன்னாடை போர்த்தி திரு. குணசேகரனாரின் தொண்டுகளைப் பாராட்டிப் பேசினார்.

ஈப்போ திரு. க. அண்ணாதுரை (கண்ணா) பாராட்டுக் கவிதை பாடி வழங்கினார். அருள்மிகு நாகம்மாள் கோவில் தலைவர் திரு. அரவிந்தட்சன், கம்பார் தமிழ்ப்பள்ளித் தலைமையாசிரியர் திரு. தா. ஏசுதாசன், கம்பார் தமிழ் இளைஞர் மணிமன்றத் தலைவர் திரு. மா. கு. தமிழ்ப்பித்தன், ஈப்போ திரு. மு. சு. மணியம் பி. ஜே. கே., தீமோ மலை தங்கவேலு, ஆகியோரும் அன்னாரைப் பாராட்டிப் பேசினர். விருந்து தஞ்சோங் தோலாங் ம. இ. கா. கிளைத் தலைவர் திரு. வி. எம். மோகன் தலைமையில் நடந்தது.


கற்பின் செல்வி
கண்ணகி
கதை: சரோ
படம்: பானு
10
கண்ணகி தனது இடப் பக்க மார்பகத்தைத் திருகி, மதுரை நகரை மூன்று முறை வலம் வந்த பிறகு விட்டெறிந்தாள். அப்போது தீக்கடவுள் தோன்றினான்
மாபெரும் பத்தினியே, உனக்குத் தவறு செய்த இந்த நாளிலே மதுரையை எரிக்கும்படி எனக்கு முன்பே ஒரு கட்டளை உண்டு. நான் யார் யாரை எரிக்காமல் விட்டு விட?
அந்தணர் அறவோர் பசு பத்தினிப் பெண்கள் முதியவர் குழந்தைகள் ஆகியோரை ஒதுக்கி தீயவரை அழி!
மதுரை நகர் தீயில் அழிகிறது
தீயின் வெம்மை பொறுக்கமாட்டாமல் மதுராபதித் தெய்வம் கண்ணகி முன் தோன்றி கோவலனின் முற்பிறவியைப் பற்றி கூறுகிறது!
பத்தினித்தேவியே, கோவலன் முற்பிறவியில் செய்த தவறுக்காகத்தான் இப்போது கொலையுண்டான்.. போன பிறவியில் அரசாங்க அதிகாரியாக இருந்த கோவலன், சங்கமன் என்ற வணிகனை ஒற்றன் என்று சந்தேகித்துக் கொலை செய்தான்...
கணவனை இழந்த சங்கமன் மனைவி பதினைந்து நாட்கள் சென்றபின் ஊர் எல்லையிலுள்ள ஒரு மலை உச்சியில் ஏறி... "எனக்கு இந்தக் கொடுமை செய்தவரின் மனைவியும் என்னைப் போலவே துயரடையட்டும்" என்று கூறி விழுந்து இறந்தாள்
அந்த ஊழ்வினையே கோவலனின் உயிரைப் பறித்தது. பதினைந்து நாட்களுக்குப் பின் உன் கணவனை மீண்டும் தேவவடிவில் காண்பாய்!
மதுராபதித் தெய்வம் கூறியபடியே வேங்கை மரத்தின் கீழ் நின்றிருந்த கண்ணகி தேவர்களுடன் வந்திருந்த தன் கணவனுடன் சென்றாள். அந்தக் காட்சியைக் குன்றத்தவர் கண்டனர்
தொடரும்.

கொழுப்புவுறைகளோ காரணமாக இல்லாது இரத்த அழுத்தம் கூடுகிறது. நாளங்கள் முதிர்ச்சி காரணமாய்த்தடித்து ஈயும்தன்மை இழந்து இரத்தம் பாயும் வழிகள் ஒடுங்குகின்றன. இரத்த ஓட்டம் தடைப்படுகின்றது. உறைவுகளால் ஏற்படும் நெருக்க நிலையே இங்கும் உண்டாகின்றது. எழுபது வயதைத் தாண்டிவிட்டால் ஓய்வு ஜீவியமும் பிரம்புடன் மாலை வேளைகளில் உலாவிவரும் பழக்கமும், சாந்த சூழ்நிலையும் இறைவழிபாடும் இருக்குமாயின் ஜீவியம் நெருக்கடியின்றி ஓடிக்கொண்டே போகும். மரணபயம் இருக்குமாயின் மருத்துவமனைகளைத்தஞ்சமென்றோடநேரிடும். பயனுள்ள வாழ்க்கை நடத்த முடியாதபோது என்றோ ஒருநாள் இறக்கவே வேண்டும். அது எப்போதாவது வரட்டுமே என்று மனதைத் திடப்படுத்தி இப்போதாவது இடைவிடாது இறையடி வணங்கி, ஏழைக்கிரங்கி, கூடியளவு உதவி, வாழவேண்டும். மனச்சாந்தியை ஏற்படுத்த ஏற்ற வழிகள் இவையே. ஜீவியமும்நெருக்கடியின்றி நீடிக்கும். இறக்கும் வாயிலிலும் பணத்தைப் பெருக்க எடுக்கும் அநியாய வட்டி. ஏழைகளைச் சுரண்டல் போன்ற முயற்சிகளைப் பார்க்கும் போது இவர்களும் மனுஷர்களா-மோ என்ற ஓர் அருவருப்பு ஏற்படுகின்றது.

கடுங்கட்டுப்பாடு

கட்டுப்பாடு முறைகளால் குழந்தைகளை முளைகளிலேயே கிள்ளி வீசுகிறோம். பயனுள்ள வாழ்க்கை நடத்தமுடியாத தள்ளாப் பருவத்திலும் இன்னும் சில நாட்கள் தானும் ஜீவியம் நடக்காதோவென்றெண்ணி என்னென்னவோவெல்லாம் செய்கிறோம்! மருந்துக்கும் அது இது என்று சத்துணவுக்கும் காசை அள்ளி இறைக்கிறோம். முன் எடுத்துக்காட்டிய "லான்செட்" ஆசிரியரின் கூற்றைப் பின்பும் வாசிக்க மனம் அவாவுகின்றதன்றோ?

அந்தக் கிள்ளியெறியும் முளைகளால் தடுக்கப்பட்ட பிள்ளைகளைக் காத்து வளர்த்தால் இருபது வருடங்களால் பயன்தரும் பிரஜைகளாய் வருவாரன்றோ? பின்பு நாற்பது வருடங்கள் நாட்டுக்குழைப்பவர் தானே? மருந்துகளும் நீரில் அமிழ்ந்துபவன் தாவிப் பிடிக்கும் மிதக்கும் புற்கள் போன்றவை. செலவு கருதி முளைகளைக் கிள்ளி எறிகிறோம். உடுக்கவும் உண்ணவும் கூடிக்கொண்டுபோகும் தொகையினருக்குக் கொடுக்கமுடியாது போகும் என்றே இந்தத் தீவிர கட்டுப்பாட்டு முறைகள். வீண் செலவினத்தைக் குறைக்க முயலுகின்றோமில்லை. செயற்கை உறுப்புக்களைச் சேர்த்தும் சிலநாட்கள் கூட முளைகளைக் காப்பாற்ற யாருமில்லை. பரந்து கிடக்கும் காடுகளை வெட்டி நாடுகளாக்கி வேண்டியவெல்லாம் தாமே விளைவிப்பர். இருபது வருடங்கள் பின் என்று சிந்திப்பாரும் இலர். உண்மைக்குப் பட்டினி அபாய விளிம்பில் நிற்கிறோமோ? அல்லது ஊக்கமின்மைக்கும் சிந்தனைச் சிதைவுக்கும் ஆக்கமளிக்கிறோமோ? இது சிந்தனையாளர் சிந்தனைக்கு; தலைவர்களின் கவனத்துக்கு.

இருதயத்தில்

இரத்தம் தேகத்துக்குத் தேவையான ஊட்டப் பொருட்களையும் பிராண வாயுவையும் உடலெங்கும் கொண்டுசெல்கின்றதென்று முன்பு கண்டோம். இந்தப் பொருட்கள் ஓயாது உழைக்கும் தொழிலாளி இருதயத்துக்கும் தேவையன்றோ? அந்தத் தேவையை இரண்டு (Coronary Arteries) இரத்த நாளங்கள் பூர்த்திசெய்கின்றன. இந்த நாளங்கள் முதிர்ச்சியால் தடித்து ஒடுங்கும்பொழுதும் அல்லது கொழுப்பு உறைவுகளினால் பாதிக்கப்படும் பொழுதும் இரத்தம் தடைபடுகின்றது. இது நேரும் பொழுது தாங்கொணா வலி நெஞ்சில் ஏற்படுகின்றது (Anguina Pectoris). ஏக்கத்தோடு கலந்த இலகுவில் விவரிக்கமுடியாதநோய். "கடவுளே!" என்று கோலூர்களையும் கூவியழைக்க வைக்கும் நோய். தாக்கப்பட்டவர் நெஞ்சில் கை வைக்கிறார்; சரிகிறார். இந்த நோய் இடத்தோளையும் எட்டலாம். கைவழியே ஓடி விரல்களையும் தர்க்கலாம். மேல் வயிற்றிலுமே பிரதிபலிக்கலாம். அந்தத் தடை பெருந்தடையாயின் சில மூச்சுக்கள் விடுமுன்பே ஆவி பிரிந்துவிடும். எந்நேரம், எங்கு, எப்போது இது நேரும் என்று சொல்ல இயலாது. தடை அரை குறையாயின் இயற்கையாகவே தடை எடுபட்டு சுகமாவது உண்டு. பின்பும் வர மாட்டாது என்றுசொல்வதற்கில்லை. ஜீவியத்தை மாற்றியமைப்பதால் அந்தநாளை அகலத்தள்ளலாம். முதல் மூன்று நாட்கள் ஆபத்தான காலம். காலஞ்செல்ல, உணவு நடைமுறைகளை மாற்றி அமைக்க இந்த ஆபத்து சிறிது எட்டச்செல்லும்.

இருதயம் இரத்தம் தடைப்பட எப்படிப் பாதிக்கப்படுகின்றதோ அப்படியே உடம்பின் எந்தப் பாகமும் பாதிக்கப்படலாம். மற்றதோர் பிரதான பாகமும் உடன் உயிரைக் கொள்ளை கொள்ளக்கூடியதும் மூளை. அதனாலேயே இருதயத்தைப் போல் மூளையும் ஓர் எலும்பாலான கோட்டைக்குள் அமைக்கப்பட்டிருக்கின்றது. மனிதன் மனிதனாக வாழ அங்கேயே வழிகள் வகுக்கப்படுகின்றன. மூளை செயல்படாவிட்டால் உடம்பு அனைத்துமே செயல்கவோ, மணக்கவோ, சுவைக்கவோ, உணரவோ, எழுதவோ, நடக்கவோ எது செய்யவும் மூளையின் ஒவ்வொரு பாகமும் செவ்வனே இயங்கவேண்டும்; ஒவ்வொரு பாகமும் ஒவ்வொரு வேலைக்குப் பொறுப்பாயிருக்கின்றது. இருதயம் போல் இங்கும் அதே தடைகள் காரணமாய் இரத்த ஓட்டம் தடைப்படலாம்; குறையலாம். தடைப்பட்ட பக்க ஆட்சியில் நடக்கும் வேலைகள் தளரும்; குறையும்; அல்லது முற்றாகவே நின்றுவிடக்கூடும் (Paralysis). தடையின் அரைகுறை முழுமையைப் பொறுத்து இது நடக்கும். இவை மாத்திரமல்லாது நாளங்களின் சுவரை உடைத்து இரத்தம் வெளிச்செறிவதும் உண்டு. இது நேரும் பொழுது வாயால், மூக்கால், காதுகளால் இரத்தம் சொட்டும்; ஏன், பெருகவே கூடும். மூளையில் பெரும் பாகத்தில் இத்தடைகள், முறிவுகள் ஏற்பட்டால், கடும் காய்ச்சலும், பெரும் வலியும் தொடர்ந்து அறிவு இழப்பும் வலிப்பும் ஏற்படும் (Stroke). உடனுக்குடன் மரணமும் ஏற்படும். சிறு சிறு தடைகள் சிறு சிறு தலையிடிகளுடன் மாறுவதும் உண்டு.

கழுத்தின் இரு பக்கங்களிலும் அமைந்திருக்கும் இரு நாளங்களின் வழியே (Carotids) மூளைக்குத் தேவையான பெரும்பாலான (70%) இரத்தம் செல்கின்றது. முள்ளந்தண்டின் அடிப்பக்கமாய்ச் செல்லும் நாளம் எஞ்சிய இரத்தத்தை எடுத்துச் செல்கின்றது. முதுமையின் காரணமாய் தடிக்கும் இரு பக்க நாளங்களையும் விரல்களால் தடவி உணரலாம். கொழுப்பு உறைவுகளால் இரத்தம் தடைப்படும்போது முடிச்சு முடிச்சாய் அவ்விடங்கள் உணரப்படும்; தென்படவே கூடும். கழுத்தில் மாத்திரமின்றி உடம்பின் எப்பாகத்திலும் உணரக்கூடிய நாளங்களில் இம்மாற்றங்களை ஊகிக்கலாம். நாடி அடிகளும் பெரிதாகவும் உரமாகவும் விரல்களால் உணரப்படும்.

ஒருபக்க "கரொட்டிட்" நாளம் பாதிக்கப்படும் பொழுது அந்தப் பக்கக்கை, கால், தசைநார்கள் பாதிக்கப்படும்; சோரலாம்; வழங்காமலே போகலாம். அதே போல் மற்றப் பக்கத்திலும் நிகழலாம். இரு பக்கமுமே பாதிக்கப்படலாம்.

மருந்துகளின் தீங்கு

கொழுப்புறைவுகளை மாற்றும் மருந்துகளால்-"அவைகளைப் பாவிப்பது, ஆராய்ச்சி ரீதியில் அர்த்தமற்றதுமல்லாமல் தீங்குகளை இழைப்பனவுமல்லாமலில்லை. இரண்டு சத "ஆஸ்பிரின்" மாத்திரையை ஒரு முறை விழுங்கினால் மூன்று நாட்களுக்கு மேல் இந்தக் கொழுப்

மருத்துவக் கட்டுரை (2)

இருதய நோய்கள்

டாக்டர் ச. இராசரத்தினம்

புறைவுகளைப் பிரித்து வைத்திருக்க உதவும்" (British Medical Journal 15-2-75). பிரயோசனம் ஏதும் உண்டோ என்று ஏங்கவேண்டியிருக்கிறது இந்த மருத்துவ அறிக்கையை வாசித்தபின். பல்வேறு மருந்துகளை நோயாளி காசை வாரி இறைத்து வாங்கச் செய்யும் வைத்தியர் சிறிது மூச்சுவிட்டு தாம் செய்வது சரியோ என்று யோசிக்க வேண்டாமோ?

நாளங்களை விரித்து இரத்தத்தைத் தடங்கலில்லாமல் 'பாயச் செய்யும் மருந்து நிக்கடோனிக் ஆசிட் (Nicotonic Acid). அதே அடித்தளமாய்ச் சிறு மாறுதலுடன் உண்டாக்கப்பட்டது "கொம்பிளாமின்" வியாபாரப் பெயர். உண்மைப் பெயர் 'Xanthinol Nicotinate'. முந்தியது ஒன்று 1½ காசு. மற்றது ஒன்று 28 காசு. ஒரு வேலையையே இரண்டும் செய்கின்றன. இருந்தும் நிக்கடோனிக் ஆசிட்டைப் பாவிக்கப் பணிக்கும் டாக்டர்மார் மிகமிகச் சிலர். இதேபோல் பல மருந்துகள் ஒரே வேலையைச் செய்யும். ஆனால் டாக்டர்மார் விலை கூடியனவைகளையே பெரும்பாலும் எழுதி மருந்துத் தயாரிப்பாளருக்கு உதவுகிறார்கள். 5 காசு "சல்பா" குளிகைகள் கொடுக்கக்கூடிய நோய்க்கு 25காசு "ரெட்டாசயிக்கிளின்" கொடுக்கிறார்கள். ஸ்ரீலங்கையில் எதற்கும் "ரெட்டாசையிக்கிளின்" பாவிக்கப்படுகின்றதெனப் பயப்படவேண்டி இருக்கிறது. சீவசத்து (விட்டமின்) "சி" போல் எல்லோரும் அறிந்த ஒன்றாய் பாமர சனங்களும் தாங்களே நேரில் கடையில் வாங்கி விழுங்குகிறார்கள். தடிபால் அடித்துக் கொல்லக்கூடிய பாம்பை உலக்கைகொண்டு ஏன் சிதறடிக்க வேண்டும்? பரவலாய் துஷ்பிரயோகப்படுத்தப்படும் இந்த "ரெட்டாசையிக்கிளின்" வேண்டிய நேரத்தில் உதவாது போகின்றது. நோய்க்கிருமிகள் பழக்கப்பட்டு பின் அழியாது நிற்கின்றன. இலங்கைப் பேராசிரிய ஆராய்ச்சியாளர்களின் முடிவு இது.

வயதுக்குத் தடிக்கும் நாளங்களுக்கு வைத்தியமே இல்லை. கொழுப்புறைவுகளைத் தடுக்கும் மருந்துகளாலும் பிரயோசனம் யாதுமில்லை. நீங்காவது அவை இழுக்காமல் இருக்கின்றனவோ என்பதைத் திடமாகவும் சொல்லவில்லை. ஆழ்ந்து யோசித்தல் வேண்டற்பாலன. அதிர்ச்சியில்லா ஜீவியம், மனைவி, மக்கள், புருஷன், அயலவர்களின் என்றும் வற்றாத அன்பு, வறுமையின்மை, இவற்றுடன் இறை வணக்கமும் மரணப் பயமின்மையும் சேர்ந்தால் எஞ்சிய சொற்பகாலம் செவ்வனே ஓடும். நோயுற்றபின் செய்வதற்கொன்றில்லையாயின் நோயே வாராது பாதுகாக்க என்ன செய்யவேண்டும்?

தடுப்பு முறைகள்

1. உயரத்துக்குத் தகுந்த நாற்பது வயதை அண்டி வரும் இக்கச் சடுதி மரணங்களுக்கு எதுவாயிருக்கும் எதையும் முப்பது வயது வரும் முந்தியே கண்டுபிடித்து அதை விலக்கும் வழியில் இறங்க வேண்டும். இருபத்தைந்து வரையும் நல்ல போஷாக்குத் தரும் உணவுகள் வேண்டும். வளரும் நிலையிலிருக்கும் இந்த உடம்புக்கு வளர்ச்சிக்கு உரிய ஊண்களையெல்லாம் தேடிக்கொடுபடவேண்டும்.. தாய் தந்தையர் தயங்காது, யாரும் கேளாது இதைச் செய்வர். பின்பு நாம் நம்மை பாதுகாத்துக்கொள்ள வேண்டும். முடிந்த கட்டிடத்தில் மேல்மாடி எழுப்ப நினைத்தோமாயின் இரு மாடிகளும் தரை மட்டமாகிவிடும். எனவே கட்டிய வீட்டைத் தூசி துடைத்து, ஓட்டை இருப்பின் அவற்றை அடைத்து வெள்ளை பூசிப் பாதுகாப்பது மட்டும் நமது வேலையாகிறது. அதேபோல நாவுக்கு இடம் கொடுத்து அதை இதை தேவைக்கு அதிகமாய் உண்டு மோசம் போகக்கூடாது. இது உடம்பை வளர்க்கும். சதையைச் சேர்க்கும். எடையைக் கூட்டும் (Obesity). அகால மரணத்திற்கு ஆளாவோம். பாரம் உயரத்துக்குத் தகுந்ததாயிருத்தல் வேண்டும். அதிலிருந்து எவ்வளவு தூரம் கூடுகின்றதோ அவ்வளவு தூரம் வயதும் குறைகின்றது. ஐந்தடி உயரமுள்ள ஆண் 110 பவுண்டு எடையுள்ளவராயும் பெண் 100 பவுண்டு உடையவளாயும் இருத்தல் வேண்டும். ஐந்தடிக்குக் கூடும் ஒவ்வொரு அங்குலத்துக்கும் ஐந்து பவுண்டு கூடலாம். இருபாலருக்கும் இந்தக் கணக்கிலிருந்து பத்துப் பன்னிரண்டு பவுண்டு கூடலாம்; குறையலாம். குறைவதையே நன்றென்று கொள்ளல் வேண்டும். 10 விதம் பாரம் கூடினால் 30 வீத சீவியத்தைக் குறைக்குமாம்! 100 வயதைக் காணவேண்டியவர் 70 வயதில் மடிவார். வயதானவர்கள் தங்கள் ஒவ்வொரு அங்குல உயரத்திற்கும் இரண்டு பவுண்டு எடையை மிஞ்சாது பாதுகாத்துக்கொள்ள வேண்டும்.

நிறை கூடுவதை அவதானித்துத் தொடக்கத்திலேயே உணவு வகைகளை மாற்றி அமைத்துத் தேக பாரத்தைக் கட்டுப்பாடாக வைத்திருக்க வேண்டும். இதுவே சாலச் சிறந்த இலகுவான வழியாகும். சிலர் துரதிர்ஷ்டவசமாகப் பாதி வயிறு உண்டாலும் பாரம் குறைவதேயில்லை. இக்கூட்டத்தில் அதிர்ஷ்டவசமாய் மிகச் சிலரே சேருவர். உடலின் உட்சுரப்பிகள் ஒத்துழையாமையே இதற்குக் காரணம். மற்றும்சிலர் தாயின் பாலை முதல் ஆறு மாதங்களாயினும் தனியே குடித்து வளராமையால் நிறையைக் குறைக்க முடியாது வருந்துவர். ஏனெனில் கொழுப்புக் கூடிய பிற பாலைக் குடித்து. அதிலுள்ள தேவைக்கு மிஞ்சிய கொழுப்பு, உடலில் கொழுப்புக் கண்ணிகளாய் (Extra Fat Cells) மாறி உடம்பைப் பருக்கப் பண்ணுகிறது. இவை பின் அழிவதேயில்லை. நிலைத்திருந்து உடம்பின் பாரத்தைக் கூட்டுகின்றன.

இன்னும் சிலர் பசியும், பட்டினியும், பாதிவயிறும் நாலா பக்கமும் தாண்டவம் போடப் பகிர்ந்து சாப்பிடும் மனப்பான்மை சற்றுமின்றி தேவைக்கு அதிகமான ஆகாரங்களை உட்கொண்டு, உடல் பருத்து நோய்களை இளம் வயதிலேயே தேடிக்கொள்கின்றனர். பாதி வயது போகு முன்னரே மாண்டுபோகின்றனர். உடம்புத் தேவைக்கு மிஞ்சிய ஆகாரம் கொழுப்புச் சதைகளாய் மாறுகின்றது. தட்டம்மட்டமின்றிச் சதை மலையாகப் பொலியும். இருதயத்திலும் குண்டிக் காய்களிலும் கொழுப்புச் சேர்ந்து அவைகளை நோய்வாய்ப்படுத்தி உடையோரைத் துன்புறுத்தும். பருக்கும் உடம்பெங்கணும் இரத்தத்தைச் செலுத்தும் வேலையும் நோய்வாய்ப்பட்ட இருதயத்திற்குக் கூடுகின்றது. அம்மட்டோடும் அமையவில்லை. தேவைக்கு மிஞ்சிய உணவுகள் பித்தசுரலில் இரத்த உறைவுகளாயும் (Triglycerides) மாற்றப்படுகின்றன. இவை பின் இரத்தத்தில் சேர்க்கப்பட்டு இரத்த ஓட்டத்துக்கும் தடையாகின்றன. இரத்தத்துக்கு, ஒன்றின்மேல் ஒன்றாய் இது மூன்றாம் அடி ஆகின்றது! என் செய்யும்? இளைத்துக் களைத்துத் தயங்கி இயங்கும். ஆனால் எவ்வளவு காலத்துக்கு இந்த நிலை பரத்தில், மாற்றம் ஏற்படாவிடின்!

உணவு

உட்கொள்ளும் உணவுகளைக் கட்டுப்பாட்டில் கொண்டு வருவதாலேயே மாற்றம் ஏற்படும். இறைச்சி, முட்டை, பால், வெண்ணெய், நெய், தேங்காய், (பூ, பால், எண்ணெய்) பால் இவையெல்லாமே கட்டுப்பாட்டுக்குள்ளாக வேண்டும். நல்லெண்ணெய், நிலக்கடலை எண்ணெய் சமையலுக்குச் சேர்த்துக்கொள்ளலாம். இந்த எடை, இந்த அளவு இன்னது என்று தலை உடைப்பதில் பிரயோசனமில்லை. அவை செய்கை முறையில் சாத்தியமுமல்ல. அதை ஆராய்ச்சியாளருக்கு விடுவோம். அரிசி தொண்டு ஆக்கப்படும் உணவுகளும், கோதுமை சேரும் உணவு வகைகளும், இவற்றுடன் சேர்க்கப்படும் உப்பு, இனிப்பு எல்லாமே தேகபாரத்தைக் கூட்டுவன. இவையும் குறைக்கப்படவேண்டும். மிளகு, உள்ளி, வெங்காயம், மல்லி, சீரகம், கடுகு இவை தீங்கிழைப்பனவல்ல; நன்மையே தருவன. பச்சை வெங்காயம் ஒன்று தினமும் உண்ண கொழுப்பு உறைவுகளைத் தடுக்கும்; அழிக்கும் மருந்தாயும் அமையும். குறைக்கப்பட்ட உணவுகளின் பின், எடை எவ்வளவு ஆகின்றதென்று இரு கிழமைகளால் பார்க்கவேண்டும். குறைந்திருந்தால் அந்த முறையைப் பின்பற்றலாம். குறையாவிடின் உட்கொண்ட உணவு இன்னும் மிதமிஞ்சியது என்றுகொண்டு பின்பும் குறைக்கவேண்டும். மாதம் மாதம் ஐந்து, ஆறு பவுண்டாகக் குறையச் செய்தல் வேண்டும். கணக்கான பாரத்துக்கு உடம்பு வந்தவுடன் அந்த எடையிலேயே அதை வைத்திருக்க முயலவேண்டும்.

(இன்னும் வரும்)

மலேசியமொழித்தேர்வில் வெற்றிபெற...(8)

மேலும் கொஞ்சம் இலக்கணம்

வெ. ஆறுமுகம்

சொற்களின் முதலில் வந்து சேரும் Awalan-களைப் பற்றிக் கடந்த இரு இதழ்களிலும் சுருக்கமாகக் கண்டோம். சொற்களின் ஈற்றில் சேரும் Imbuhan வகையான Akhiran-களையும் பிறவற்றையும் இனிக் காண்போம்.

Akhiran "An": மிக விரிவாகப் பயன்படுத்தப்படும் akhiran-களுள் இதுவும் ஒன்று. இதனை முழுமையாக இங்கு விளக்க இயலாதாகையால் பொதுவான இயல்புகள் மட்டும் குறிக்கப்பட்டுள்ளன. இதனை முழுமையாகப் புரிந்துகொள்ள, மிகுதியாகப்படிக்கும் பழக்கம்ஒன்று மட்டுமே துணைசெய்யும்.

1. வினைச்சொற்களோடு an சேர்ந்து அவற்றைப் பெயர்ச் சொல்லாக்கும்.

makan - makanan, baca-bacaan.

2. சில வேளைகளில் பெயர்ச் சொற்களோடு சேர்ந்து அவற்றின் பொருளை வலுப்படுத்தும்.

laut - lautan (laut - கடல், lautan — பெருங்கடல்), duri-durian (duri -முள், durian- முட்கள் நிறைந்த பழம்)

Akhiran "Kan": "தனக்கென்று செய்து கொள்ளாமல் பிறர்க்காகச் செய்தல்" என்னும் பொருளை இது தரும். இது பொதுவான விளக்கம்; விதிவிலக்குகள் உள்ளன; அவற்றை நீங்களே தெரிந்துகொள்ளலாம்.

ஏதேனும் ஒன்றைப்பிறர்க்காகச் செய்யுமாறு ஏவுதல், கட்டளையிடுதல், உத்தரவிடுதல். Baca surat itu; Bacalah surat itu என்னும் வாக்கியங்கள் "அந்தக் கடிதத்தைப் படி" என்று பொருள் தருவதோடு "உனக்காக நீயே படித்துக்கொள்" என்னும் பொருளையும் உள்ளடக்கி நிற்கின்றன. ஆனால் Bacakan surat itu என்று சொல்லும்போது படிக்கச்சொல்வதன் நோக்கம் வேறுபடுகிறது. "எனக்காக, அவனுக்காக, அவளுக்காக, அவருக்காக, அவர்களுக்காகப் படி" என்றெல்லாம்இதற்குப் பொருள் தோன்றும். சுருங்கச் சொன்னால் "பிறருக்காகப்படி" என்பதே இதன் உட்பொருளாகிறது. (Bacakanlah surat itu என்று சொல்வதும் உண்டு. இப்படிச் சொன்னால் உத்தரவின் அழுத்தம் சற்றுக் கூடும்; ஆனால் "பிறருக்காக" என்னும் அடிப்படைப் பொருள் மாறாது.)

Akhiran 'I'-மலேசிய மொழியில் நன்கு பயிற்சி உள்ள மாணவர்கள்கூட சில சமயங்களில் akhiran 'Kan', akhiran 'I' இரண்டுக்கும் உள்ள நுண்ணிய வேறுபாடுகளை அறியாமல் குழம்பிப் போவது உண்டு. "பிறர்க்காகச் செய்தல்" என்னும் பொருளை akhiran 'kan' தருவதைப் போல, "தனக்காகச் செய்து கொள்ளுதல்" என்னும் பொருளைப் பொதுவாக இந்த 'I' தரும். Hiaskan rumah; Hiasi rumah என்னும் இவ்விரு வாக்கியங்களும் "வீட்டை அலங்கரி; அழகு படுத்து" என்னும் பொருளைத்தான் தருகின்றன. ஆயினும் உட்பொருள் வெவ்வேறானவை. Hiaskan rumah என்று சொன்னால் "நம் வீட்டையோ பிறர் வீட்டையோ, பிறருக்காக, பிறரின் தேவைக்காக அழகு செய்தல்" என்னும் பொருள் தொனிக்கும். Hiasi rumah என்பது அதற்கு நேர்மாறாக "நமக்காக, நம் உபயோகத்துக்காக அலங்கரித்தல்" எனும் பொருள் தரும். Hiaskan rumah-(பிறர்க்காக) வீட்டை அழகு செய். Hiasi rumah-(உனக்காக) வீட்டை அழகு செய்.

இது ஒன்றுதான் இந்த akhiran-இன் இயல்பு என்று எண்ணாதீர்கள்; இன்னும் பல. ஆயினும் இதை மட்டுமேனும் நீங்கள் நன்கு புரிந்துகொள்வீர்களாயின் பிழைகள் பலவற்றைத் தவிர்க்கலாம்.

மலேசிய மொழியில் பெரும்பாலான சொற்கள் சொல்லுக்கு முன்னும் பின்னும் (முதலிலும் ஈற்றிலும்) Imbuhan-களை ஏற்று வரும். இப்படி முன்னும் பின்னும் Imbuhan-கள் சேரும்போது சொற்களின் பொருள் பேரளவில் மாறுபடும். மலேசியமொழியில் செம்மையாக எழுத, இவற்றைத் தெளிவாகப் புரிந்துகொள்வது அவசியம்.

i. Ber ...an

1. "அதிகமாக, மிகுதியாக, தொடர்ச்சியாக" ஒரு செயல் (தொழில்) நடைபெறுவதை இது குறிக்கும்.

bercucuran (air mata) கண்ணீர் பெருக்கெடுத்தல்.

bertaburan - இறைந்து கிடத்தல்.

(tiada) berputusan - முடிவே இல்லாமல்.

berjauhan - வெகு தொலைவில் இருத்தல்.

Saudara mara Maniam datang ke rumahnya tiada berputusan - மணியத்தின் உறவினர்கள் அவர் இல்லத்திற்கு(முடிவே இல்லாமல்) மிகுதியாக வந்தனர்.

2. Ber...an எனும் Imbuhan-களுக்கு இடையில் வரும் சொல்லை இருமுறை எழுதினால் அச்சொல்லின் பொருள் மேலும் வலுப் பெறும். "மீண்டும் மீண்டும், தொடர்ச்சியாக" எனும் பொருளும் கிடைக்கும்.

berlompat - lompatan- குதித்துக் கொண்டிருத்தல்.

berlari-larian-ஓடிக் கொண்டிருத்தல்.

வீடு திரும்பும் தந்தையைத் தொலைவில் கண்டதும் பிள்ளைகள் அவரை நோக்கி ஓடி வருவார்கள்; அவர்கள் ஒரே சீராக, ஒரே சீரைவாக ஓடுவதில்லை; ஓடுவதும், நிற்பதும், விரைந்து ஓடுவதும், மெதுவாக ஓடுவதுமாகத் தந்தையை அணுகுவார்கள். இதை berlari - larian என்று சொல்லலாம். தந்தையைக் கண்டதும் பிள்ளைகள் துள்ளிக் குதித்து மகிழ்வதும் உண்டு. குதிப்பதென்றால் போட்டியில் குதிப்பது போல் தாண்டியா குதிப்பார்கள்? நின்று நின்று, விட்டு விட்டுக் குதிப்பார்கள். இதை berlompat-lompatan என்று சொல்ல வேண்டும்.

3 Berpengetahuan, berkebudayaan போன்ற சொற்கள் மேலே காட்டப்பட்ட இருவிதிகளிலும் சேரா. ஏனெனில் இவ்வகையான சொற்களில் an எனும் akhiran வேறு imbuhan-களோடு (pe...an, ke...an) முதலில் சேர்ந்து விடுகிறது. அதன்வழி பிறக்கும் முழுச் சொற்களே (pengetahuan, kebudayaan) ber எனும்awalan-உடன் சேருகின்றன. எனவே இங்கு ber என்பது தனி awalan ஆக இயங்கி "உண்டு, உடைய" என்னும் உரிமைப் பொருளையே தரும்.

berpengetahuan- பொது அறிவுடைய, அறிவுடைய, அறிந்த

berkebudayaan - பண்பாடு உடைய.

நீங்கள் உங்களை ஆயத்தப்படுத்திக் கொண்டாலும், கொள்ளாவிட்டாலும் ஆண்டு இறுதியில் தேர்வு வந்தே தீரும். உங்களுக்காகக் காலமும் தேர்வும் காத்து இரா. எனவே எவ்வளவு முடியுமோ அவ்வளவு முயன்று உங்களை ஆயத்தப்படுத்திக் கொள்ளுங்கள். ஆயுதங்கள் இல்லாமல் போரில் வெற்றி பெற முடியுமா? ஆயத்தம் இல்லாமல் தேர்வில் தேர்ச்சிபெற இயலுமா?

சபதம்

மலேசியத் தமிழ் எழுத்தாளர் சங்கம் நடத்திய ஜூன் மாதச் சிறுகதைக் கருத்தரங்கில், புதிய சமுதாயம் 7வது (25-6-77) இதழில் பிரசுரமான "சபதம்" சிறுகதை $50 பரிசுக்குரியதாகத் தேர்வுபெற்றது.

"சபதம்" சிறுகதை திரு. பாதாசன் எழுதியதாகும். மலர்விழி பதிப்பக உரிமையாளரும், எழுத்தாளருமான திரு. வீ. கு. சந்திரசேகரன் ஏற்பாட்டில் முத்தமிழ்ப் படிப்பகத்தில் அக்கருத்தரங்கம் நிகழ்ந்தது. தேர்வு பெற்ற கதைக்கான பரிசை [illegible]

வேப்பெண்ணெய்

பல வாசகர்கள் குறிப்பிட்டுள்ளதுபோல் புதிய சமுதாயத்திற்குத் திரையுலகம் என்னும் வேப்பெண்ணெய் வேண்டியதில்லை என்றே எண்ணுகிறேன்

--சு. ந. தென்னவன், கோலசிலாங்கூர்

கங்கையும் கடல் நீரும்

சிலர் சினிமாப் பகுதியை வேண்டாம் என்கிறார்கள். அதனால் இதழின் தரம் குறைவதாக எண்ணுகிறார்கள் போலும். கங்கையில் ஒரு துளி கடல் நீர் விழுந்துவிட்டால் கங்கை நீர் ஒன்றும் கடல் நீர் ஆகிவிடாது.

--ஆர். பழனியாண்டி, பெட்டாலிங்

குலுக்குங்கள்

தமிழறிவுப் போட்டியில் அநேகர் வெற்றிபெறும்போது பரிசுத் தொகை குறைகிறது. எனவே பலர் சரியான விடையளித்திருந்தால் குலுக்கின்மூலம் ஓரிருவரைத் தேர்ந்தெடுத்துப் பரிசளித்தால் சிறப்பாக இருக்கும்..

--சு. குணசேகரன், ஜாசின்

முன்கூட்டியே மகிழ்ச்சி

குறிப்பிட்ட நாளுக்கு முன்பாகவே இதழ் எங்கள் கையில் கிடைப்பது எல்லையில்லாத மகிழ்ச்சியைத் தருகிறது

—தாரா எழிலழகன், சுங்கை வே

DUKACITA

"டுக்காச்சித்தா" சிறுகதையில் வரும் கோபால், வேலை கிடைக்காமல் படும்பாடு மனதை நெகிழச் செய்கிறது. கோபாலைப்போல் நம்மிடையே பல படித்த இளைஞர்கள் வேலையின்றி இருப்பதை நினைத்தால் நமக்கு "டுக்காச்சித்தா"வாகத் தான் இருக்கிறது.

--ந. உதயபாலன், சுங்கை சோ தோட்டம், ரவாங்

கவர்ந்த கவிதை

சுங்கைப்பட்டாணி ஆர். வள்ளியின் "ஈரம்" என்னும் கவிதை என்னைக் கவர்ந்தது

--என். நல்லதம்பி, ஜெரம் பாடாங் தோட்டம், பகாவ்

நல்ல செய்தி

புதிய சமுதாயத்தில் வெளிவந்த சற்று மாறுபட்ட சிறுகதையான "சபதம்", சென்ற மாதத்தில் சிறந்த கதையாகத் தேர்வுசெய்யப்பட்ட செய்தி அறிந்து மகிழ்ந்தேன்! எப்போதும் தரமான கதைகளைத் தாங்கிவரும் புதிய சமுதாயம் மேலும் பரிசுகள் பெற மனமார வாழ்த்துகிறேன்.

--ராஜா, கோலாலம்பூர்

எது முக்கியம்?

பத்திரப்படுத்தி வைக்கவேண்டிய ஏடு "புதிய சமுதாயம்". எனவே சினிமாச் செய்திகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கவேண்டாம்.

--முத்து சின்னையா, பேர்மனுக் தோட்டம், சிப்பாங்

அதிர்ச்சி வைத்தியம்

"புதிய சமுதாயம்" துணிவான கருத்துக்களை வெளியிடவேண்டும்-தயங்கக்கூடாது. நமது சமுதாயம் உயர, அதிர்ச்சி வைத்தியம் தேவைப்படுகிறது.

--மா. இராமையா, தங்காக்

பாலனைப்போல்...

அகிலனின் "பால்மரக் காட்டினிலே" படிப்பதற்கு விறுவிறுப்பாக இருக்கிறது. இக்கதையில் வரும் பாலனைப்போல் எல்லா இளைஞர்களும் புரிந்துணர்வோடு பொதுத் தொண்டில் ஈடுபட்டால்...!

--என். ஜெயபாலன் (நிர்மல்), சிரம்பான்

பலாபலன்

நம் இளம் சமுதாயத்ினருக்குத் தன்னம்பிக்கையூட்டிப் புதிய வாழ்க்கைக்கு வழிகாட்ட வேண்டுமே தவிர, ராசி பலன் போன்ற பகுதியை வெளியிட்டு அவரவர்களின் ராசியை நோக்கி ஒரு காரியத்தைச் செய்ய ஊக்குவிப்பதாக இருக்கக் கூடாது. ஆகவே "ராசி" பலன் பகுதியைத் தவிர்க்க வேண்டும்.

--சு. குணாளன், கட்டி தோட்டம், கோலக்கங்சார்

பரிசு வேண்டும்

முருகுவின் பதில்கள் என்னை வெகுவாகக் கவர்கின்றன. சிறந்த கேள்வியினைத் தேர்ந்தெடுத்துப்பரிசு அளித்தால் சிறப்பாக இருக்குமே!

--எஸ். எஸ். வேலன் கோபால், கம்போங் ரம்புத்தான்

நல்ல திட்டம்

காஜாங்வாசகரின் சம்சு ஒழிப்புக்கான திட்டம் வரவேற்கப்பட வேண்டிய ஒன்று.

புதிய சமுதாயத்தைக் கூடிய விரைவில் வார இதழாக வெளியிட ஆவன செய்யுங்கள்.

—அ. பத்மாவதி, ஜொகூர் லாபிஸ் தோட்டம்

எட்டாவது...

புதிய சமுதாயத்தின் ஏழு வெளியீடுகளுக்கு இருந்துவந்த தனி மதிப்பும் கௌரவமும் எட்டாவது வெளியீட்டுக்கு இல்லாமல் போய் விட்டது வருந்தத்தக்கது. எட்டாவது வெளியீடு (10-7-77) ஒரு சினிமா நடிகரின் படத்தை அட்டையில் ஏந்திவந்ததே இதற்குக் காரணமாகும்.

மலேசிய இந்தியர்களை ஏய்த்துப் பணம் திரட்டவும், குடித்துக் கும்மாளம் போடவும் இங்கு வருபவர்களுக்குச் சஞ்சிகைகள் துணைநிற்கக் கூடாது.

--ஷாபி இக்பால், மலாக்கா

அறிஞர்கள் அலங்கரிக்கட்டும்!

நடிக நடிகையர் படங்களை அட்டையில் வெளியிடுவதற்குப் பதில் சமூகத்துக்கு நல்லன செய்த அறிஞர்களின் படங்களை வெளியிடலாமே!


--சுந்தரபத்மன், சுங்கைவே

இருப்பது போதாதா?

புதிய சமுதாயத்தின் அட்டையை இன்னும் பயனுள்ள வகையில் அமைத்தால் நன்றாக இருக்குமே! இருக்கிற சினிமா மோகம் போதாதா?

--மா. பொன்னுசுவாமி, ஈப்போ

அடுத்த இதழ்



மெர்தேகா சிறப்பிதழ்

ஆகஸ்ட் 25இல் வருகிற அடுத்த இதழ் மெர்தேகா 20ஆவது ஆண்டு நிறைவுச் சிறப்பிதழாக வெளிவருகிறது.

வழக்கமான அம்சங்களுடன் நாட்டின் 20 ஆண்டுகாலச் சுதந்திரத்தைச் சித்தரிக்கும் சிறப்புக் கட்டுரைகள், படங்கள், கவிதைகள், சிறுகதைகள், பேட்டி முதலானவை சிறப்பிதழில் இடம்பெறும்.

அதிகமான பக்கங்களுடன் சிறப்பிதழ் வெளியாகிறது. ஆனால் விலையில் மாற்றமில்லை; ஐம்பது காசுதான். தங்களுக்குத் தேவைப்படும் பிரதிகளுக்கு, ஆகஸ்டு 18ஆம் தேதிக்குள் தெரியப்படுத்துமாறு விற்பனையாளர்களைக் கேட்டுக் கொள்கிறோம். வாசகர்கள் கத்கம் பிரதிகளை விற்பனையாளர்களிடம் உறுதி செய்து கொள்ளும்படிக் கேட்டுக் கொள்கிறோம்.

மன்னேட்டம்

தொலைக்காட்சி

11-8-77 வியாழன் மாலை 5.30க்குத் தமிழ்ப்படம்: ரவிச்சந்திரன், "கலர் நாயகி" காஞ்சனா நடித்துள்ள நாலும் தெரிந்தவன்



18-8-77 இந்திப் படம் "மஞ்சாயி"

25-8-77 வியாழன் மாலை 5.30க்கு மலையாளப்படம். லட்சுமி நடித்த "சட்டைக்காரி"

28-8-77 ஞாயிறு மாலை 4.00க்கு ஜெமினி கணேசன், மஞ்சுளா நடித்த "சாந்தி நிலையம்"

வானொலி

மனச்சுழல்

(ஞாயிறு தோறும் காலை 10.30க்கு ஒலிபரப்பாகிறது)

14-8-77 "இதுதான் உள்ளம்" (எழுத்து: சா. ஆ. அன்பானந்தன்)

21-8-77 "சிதைந்த வாழ்க்கை" (எழுத்து: பகவியன்)

சிறுகதை

[ஞாயிறு தோறும் இரவு 8.45க்கு ஒலிபரப்பாகிறது]

14-8-77 காலம் செய்த கோலம் (கூலாங்கர் திருமதி தெய்வானை எழுதியது)

21-8-77 நெஞ்சில் நிறைந்தவள் (சுங்கை பாக்காப், நாகலட்சுமி ராஜாராம் எழுதியது)

நாடகம்

[சனிக்கிழமைதோறும் பிற்பகல் மணி 2க்கு ஒலிபரப்பாகிறது]

13-8-77 பிராயச்சித்தம் சுங்கை பாக்காப் ராஜாமணி சுப்பிரமணியம் எழுதியது. (கோலாலம்பூர் நிலையத் தயாரிப்பு)

20-8-77 நினைப்பதெல்லாம் நடந்து விட்டால் கிள்ளான் எஸ். ராஜரெத்தினம் எழுதியது. (மலாக்கா நிலையத் தயாரிப்பு)

தொடர் நாடகம்

[திங்கட்கிழமை தோறும் இரவு 7.15க்கு ஒலிபரப்பாகிறது]

8-8-77 பகுதி1, 15-8-77 பகுதி2, 22-8-77 பகுதி 3, ஈப்போ எஸ். எலிசபெத் எழுதும் உறவு முள். இதனை எல். ராமன் தயாரிக்கிறார்.

இஸ்லாமிய நாடகம்

18-8-77 வியாழன் இரவு 8.30க்கு "சொர்க்கத்தில் நிச்சயம்" (எழுத்து: பெட்டாலிங் ஜெயா ஆர். ஷாஜஹான்)

ஒலிச்சித்திரம்

(சனிக்கிழமை தோறும் மாலை 6-31க்கு ஒலிபரப்பாகிறது)

13-8-77 பகுதி1, 20-8-77பகுதி 2 சிவாஜி கணேசன், ஜெயலலிதா, மனோகர், முத்துராமன், விஜயகுமாரி, நாகேஷ் நடித்துள்ள "சித்ரா பௌர்ணமி" (வானொலி வடிவம்: எல். ராமன்)

சிரிப்புச் சித்திரம்

[சனிக்கிழமை தோறும் இரவு மணி 7.15க்கு ஒலிபரப்பாகிறது]

13-8-77 கலாட்டா கைலாசம் (பத்தாங் பெர்ஜுந்தை சுப்பிரமணியம் சக்கரவர்த்தி எழுதியது)

20-8-77 கனவுகள் பலிக்குமா (சபாக் பெர்ணம் எம். கே. ஆறுமுகம் எழுதியது)



"குடிநீர் வசதியெல்லாம் எப்படி?" எனக் கத்தோயாங் தோட்ட நிர்வாகியிடம் விசாரிக்கிறார் துணையமைச்சர் பத்மநாபன்.

'பத்மா' பாடிய கவிதை

"பொறந்து வளர்ந்தது எல்லாம் தோட்டமே, போங்க போங்கன்னு எங்கே போறது" என்று தோட்டப்புற மக்களிடையே கவிதை பாடினார், நமது தொழிலாளர் ஆள்பலத் துணையமைச்சர் மாண்புமிகு பத்மநாபன்.

"புதிய சமுதாயம்"7வது இதழில் கவிஞர் கரு. திருவரசு எழுதிய கவிதையின் சில வரிகள்தாம் துணையமைச்சர் பத்மநாபன் பாடிய அந்த வரிகள்.

அண்மையில் கத்தோயாங், எஸ்கோட் ஆகிய தோட்டங்களுக்கு வருகை மேற்கொண்டிருந்த அவர் அங்குள்ள மக்களிடையே பேசுகையில் "தோட்டப்புற மக்களின் வாழ்க்கை நிலையை மிக உருக்கமாக எடுத்துரைக்கும் வரிகள் இவை" என்று குறிப்பிட்டு மனமுருக அந்த வரிகளைப் பாடினார்.

"போன கதையெல்லாம் தொலைஞ்சு போகட்டும்" என்று அந்தக் கவிதையிலிருந்து மேலும் ஒரு வரியை எடுத்துரைத்து, சொந்த வீடுகளைக் கட்டிக்கொள்வதில் இனியேனும் தீவிர அக்கறை செலுத்துமாறு துணையமைச்சர் "பத்மா" தோட்டப் பாட்டாளிகளைக் கேட்டுக் கொண்டார்.

—படமும் செய்தியும்: ஊடுருவி

கண்ணோட்டம்

மலேசிய வானொலியில் ஞாயிறு தோறும் பிற்பகல் 12.30-க்கு ஒலியேறும் "கலை மன்றம்" ஒரு சிறப்புப் படைப்பு. இதனைத் தயாரித்து வழங்கும் தயாரிப்பாளருக்கு எனது பாராட்டுக்கள். பெரும்பாலும் பாடகர்களையே கொண்டு உருவாக்கப்பட்டு வந்த இந்நிகழ்ச்சியில், திடீரெனக் கடந்த 24-7-77இல் நகைச்சுவைக் கலைஞர்கள் இடம்பெற்றது பாராட்டுக்குரிய ஒன்று. அதில் இடம்பெற்ற நகைச்சுவைச் செய்தித் துணுக்குகள், குத்துச் சண்டைப் பேட்டி, முனியன் நாடகக் கம்பெனி ஆகிய மூன்று நகைச்சுவைகளுக்கும் பரிசுகள் வழங்கினாலும் தகும். காரணம் அவ்வளவு பிரமாதம். பாடல்களை மட்டுமன்றி, தயாரிப்பாளர் இப்படிப்பட்ட நகைச்சுவைகளையும் தொடர்ந்து இடையிடையே படைக்க வேண்டுகிறேன்.

–கல்யாணி நாயர்
சுங்கை திங்கி தோட்டம்,
பத்தாங் பெர்ஜுந்தை.

முடிவு

மா. இராமையா

கடந்த ஒரு மாத காலமாகத் தன் கணவனிடம் என்னென்னவோ கேட்கவேண்டும் என்று நினைத்த அனைத்தையும் மனத்திற்குள் போட்டுப் புழுங்கிக் கொண்டிருந்தாள் மரகதம்.

எப்படிக் கேட்பது என்ற தயக்கமும் அதனால் குழப்பம் வந்து விடுமோ என்ற பயமும் அவள் மனத்தை ஆட்கொண்டிருந்தன.

தன் கணவன் ஏதோ அரசியல் கூட்டத்திற்குத்தானே போகிறான் என்று வாளாவிருந்தாள். ஆனால் அது இவ்வளவு தூரம் வரும் என்று அவள் எதிர்பார்க்கவே இல்லை.

காலையில் வேலைக்குப் போகும் சரவணன் இரவு ஒன்று அல்லது இரண்டு மணிக்குத்தான் வீடு திரும்புவான். இடையில் என்ன நடந்தது; ஏது நடந்தது என்ற விவரமே தெரியாது.

இரவு ஒரு மணிக்கும் இரண்டு மணிக்கும் மிகவும் சோர்வோடு இல்லம் திரும்பும் சரவணனிடம் எதையும் கேட்கவும் மனம் இடம் தருவதில்லை. மாதக் கடைசியில் வாங்கிய சம்பளப்பணம் முழுவதும் என்ன ஆயிற்று என்றும் தெரியவில்லை. வழக்கமான மார்க்கெட் செலவுக்கான பணமோ பிள்ளைகளின் பள்ளிச் செலவிற்கான பணமோ மரகதத்துக்குக் கிடைக்கவில்லை.

மளிகைக் கடைக்காரனுக்குள்ள நிலுவையைக் கொடுக்காததால் அந்த மாதச் செலவுச் சாமான்கள் கூட அவன் கொடுக்க மறுத்துவிட்டான்.

மரகதம் சொல்லவும் முடியாமல் விழுங்கவும் முடியாமல் கையில் காதில் கிடந்த நகைகளை அடகு வைத்துக் குடும்பச் செலவையும் பிள்ளைகளின் தேவைகளையும் கவனித்துக்கொண்டு வந்தாள். அதனையும் எத்தனை நாளைக்குத்தான் செய்ய முடியும்?

சரவணனின் சம்பளப் பணத்தில் சீராக இயங்கிக்கொண்டு வந்த குடும்பத்தில் ஒரு தேக்கம்! ஒரே ஒரு மாதச் சம்பளப் பணம் மரகதத்தின் கைக்கு வராததால் ஏற்பட்ட சிக்கல்களை நினைத்துப் பார்க்கும்போது பிரமிப்பு ஏற்பட்டது. அதனை மிஞ்சிய கவலையும் அவளுக்கு.

சரவணன் இவ்வளவு காலமும் ஓர் அரசியல் கட்சியில் வெறும் உறுப்பினராக மட்டுந்தான் இருந்தான். ஆண்டுக்கொருமுறை சந்தாவையும் தேவைப்பட்டபோது நன்கொடைகளையும் கொடுத்துவிட்டு ஒதுங்கியிருந்த அவனை நடந்து முடிந்த ஆண்டுத் தேர்தலில் செயலவை உறுப்பினராகத் தெரிவு செய்துவிட்டனர்.

புதிய பொறுப்பு! புதிய அனுபவம்! கொஞ்சம் சுறுசுறுப்புக் காட்ட ஆரம்பித்தான். அவனுடைய சுறுசுறுப்பும் அயராத உழைப்பும் கிளைத் தலைவரைக் கவர்ந்தன. அவருடைய நம்பிக்கைக்குப் பாத்திரமானவர்களில் சரவணனும் ஒருவன்.

கிளையிலே தலைவர்-மாநிலத்திலே செயலாளர் - மத்தியிலே செயலவை உறுப்பினர். இன்னும் பல பதவிகள்; பொறுப்புக்கள். அத்தனையும் போதாதென்று தேசியத் தலைவர் பதவிக்கும் போட்டியிடத் துணிந்து விட்டார் மணவழகன்.

தங்கள் கிளையின் தலைவர் தேசிய அளவில் பிரகாசிக்கவேண்டும் என்ற அவா செயலவை உறுப்பினர்களுக்கும் வந்துவிட்டது. "உங்கள் வெற்றிக்கு நாங்கள் முழுமூச்சாக உழைப்போம்" என்று வாக்குறுதியும் கொடுத்துவிட்டனர். அப்படி வாக்குறுதி கொடுத்தவர்களில் சரவணனும் ஒருவன்.

சரவணனைப் பொறுத்தவரையில் எதையும் சொல்லமாட்டான்— செய்துதான் காட்டுவான். அதனால் தான் கடந்த ஒரு மாத காலமாக உணவு, உறக்கம், குடும்பப் பொறுப்பு எதையும் பொருட்படுத்தாமல் இரவு நடுநிசி வரை ஓட்டு வேட்டையில் தீவிரம் காட்டி வந்தான்.

கிளைத் தலைவரைத் தேசியத் தலைவராக்கி விடவேண்டும் என்ற உணர்ச்சி வெறியில் பகைவர்களும் நண்பர்களாகிவிட்டனர்.

அவன் செல்லாத இடமில்லை; பார்க்காத நபர்கள் இல்லை. எப்படியும் தன் தலைவரை மேல் மட்டத்திற்குக் கொண்டு வந்து விடவேண்டும் என்ற தணியாத ஆவல் தலைதூக்கி நின்றது.

கடந்த ஒருமாத காலமாக இரவும் பகலும், அவனுக்கு அதே நினைவுதான். உறங்காத இரவுகளையும் பொருட்படுத்தாமல் ஒவ்வொரு நாளும் வேலைக்கும் போக வேண்டி இருந்தது.

சரவணன் காலையில் வேலைக்குப் போகத் தயாராகிக் கொண்டிருந்தான்.

மரகதம் அவன் அருகில் வந்து நின்றாள். அவள் மனத்தில் எத்தனையோ செய்திகள்; முறையீடுகள். அவற்றை எல்லாம் சொல்லி விடும் துணிவில்லாமல் தயங்கிக் கொண்டிருந்தவள் இன்று எப்படியும் சொல்லிவிடுவதென்ற முடிவுக்கு வந்துவிட்டாள்.

"அத்தான்..." அவளுக்குத்தான் எத்தனை தயக்கம்?

"என்ன மரகதம்?" சரவணன் கேட்டான்.

"இந்த ஒரு மாதத்திலே உங்க உடம்பு எவ்வளவு இளைச்சிப் போச்சி... இப்போ வேளா வேளைக்குச் சாப்பாட்டுக்குக்கூட வீட்டுக்கு வர்றதில்லே..." அவள் தொண்டையில் என்னவோ வந்து அடைப்பது போன்றிருந்தது.

சரவணன் சிரித்துக் கொண்டான்.

"என்ன செய்யிறது மரகதம்...? ஒப்புக் கொண்டு விட்ட வரையிலே முடிக்க வேண்டியிருக்கு. நான் மட்டுமா இப்படி இரவு பகலா அலையறேன்? எத்தனையோ பேர். ஏன், உன் அண்ணன்கூடத்தான் எங்களுடன் இணைந்து வேலை செய்யிறாரு" என்றான் சரவணன்.

"அண்ணனைப் பற்றி ஏன் அத்தான் பேசுறீங்க...? அவருக்கு மனைவியா, குழந்தைங்களா, குடும்பமா? பொறுப்பில்லாத தனிக்கட்டை. அம்மாவைக் கூடத் தம்பிதானே பார்த்துக்கிறான். வயது நாற்பது ஆகியும் இன்னும் திருமணமே வேண்டான்னு தனிமரமா வாழுற அவருக்கும் உங்களுக்கும் வித்தியாசம் இருக்கு அத்தான். சின்னவன் செல்வம் அப்பா முகத்தை நல்லாப் பார்த்து ரொம்ப நாளாச்சுங்கிறான்... அவனுக்கு உங்க ஏக்கம்..." சொல்லிக் கொண்டு வரும்போதே அவள் கன்னங்களில் கண்ணீர் வழிந்தோடியது.

தான் சொல்ல வேண்டிய செய்திகளில் ஒரு பகுதியைச்சொல்லி விட்டது போன்ற உணர்வு அவளுக்கு ஏற்பட்டது.


"இதுக்கா அழுறே மரகதம்... நான் உங்கள் எல்லாரையும் விட்டு விட்டு எங்கேயும் போயிடலே" அவளுக்கு ஆறுதல் சொன்னான் சரவணன்.

"நான் இந்தப் பிள்ளைங்களை வச்சிக்கிட்டு ஒரு மாதகாலமா படாத பாடுபடறேன்... நல்ல சாப்பாடு இல்லே... நிம்மதியான உறக்கமில்லே..." அழக்கூடாது என்று நினைத்தாள். ஆனால், மனத்தில் தேங்கிக் கிடக்கும் துயரங்கள் அழுகையாகப் பிறிட்டுக் கொண்டு வந்து விட்டன.

"அழாதே மரகதம்... எங்களை நம்பி இருக்கிற தலைவரை நாங்கள் கைவிட விரும்பலே. அதனாலேதான் இந்த உழைப்பு. இந்த வாரச் சனிக்கிழமையோடு எல்லாம் ஓய்ந்து விடும். அப்புறம் நானும் நடுநிசியிலே வீட்டுக்கு வர வேண்டிய அவசியம் ஏற்படாது" என்று ஆறுதல் சொல்லிவிட்டு அவசரமாக வேலைக்குப் போய்விட்டான்.

துணிகளை எடுத்துக் துவைப்பதற்கு ஊறப்போட அறைக்குச் சென்ற மரகதம், கட்டிலின் மேல் சரவணனின் கால் சட்டை கிடப்பதைப் பார்த்தாள். அதனைத் தூக்கிப் பார்த்தபோது அது கனமாக இருப்பது தெரியவந்தது. கால் சட்டைப் பைக்குள் கையைவிட்டுப் பார்த்தாள். அவனுடைய "மணி பர்ஸ்" அதனுள் இருந்தது.

கால் சட்டையை மாற்றும் போது அதனை எடுத்து வைக்க மறந்துவிட்டான் போலிருக்கிறது.



அவள் அதனை விரித்துப் பார்த்தாள். அதனுள் சில்லறைக் காசுகளுடன் மூன்று பாசாக் கடை சிட்டைகளும் இருந்தன.

அவள் மனம் "திக்" என்றது. வீட்டிலிருந்த ஓரிரு நகைகளைத்தான் அவள் அடகு வைத்து விட்டாளே. அவனுக்கு நகைகள் ஏது? வெளியில் நண்பர்களிடம் வாங்கியிருப்பானா? அல்லது அவன் நண்பர்கள் கொடுத்து வைக்கச் சொல்லியிருப்பார்களா?

மரகதம் மனங் குழம்பினாள். எதையும் அவளால் உறுதிப் படுத்த முடியவில்லை. ஆனால், இந்த ஒரு மாத காலத்திற்குள் என்னென்ன நடக்க வேண்டுமோ அத்தனையும் நடந்துவிட்டிருப்பதை அவள் கண்கூடாகப் பார்க்க முடிந்தது.

குடும்பம், மனைவி. குழந்தைகள் என்று அமைதியாக வாழ்ந்த சரவணனை இந்த அரசியல் எவ்வளவு அலைக்கழித்து விட்டது. நேரந் தவறிய உணவு, காலந் தவறிய உறக்கம்.

மரகதம் பதற்றப்படவில்லை.

ஒரு மாதத்தைக் கழித்தாயிற்று. இன்னும் எஞ்சியிருக்கும் நான்கு நாட்களில் தேர்தலும்முடிந்துவிடும். அதன் பிறகு சரவணனுக்கு வெளியே போய் அலைய வேண்டிய அவசியமும் இராது. ஒரு மாதம் பொறுத்தவள் இந்த நான்கு நாட்கள் மட்டுமா பொறுக்க முடியாது?

சனிக்கிழமையும் வந்தது.

சரவணன் வேலைக்கும் லீவு போட்டு விட்டுக் காலையிலேயே மாநாட்டு மண்டபத்துக்குப் போய் விட்டான்.

ஒரு மாத கால ஆட்டமும் பாட்டமும் இன்று அடங்கிவிடும்.

சரவணன் வீட்டிற்குக் திரும்பி வருவதை ஆவலுடன் எதிர்பார்த்திருந்தாள் மரகதம். இரவும் வந்து விட்டது.

பிள்ளைகள் எல்லாரும் வழக்கம் போலவே எட்டு மணிக்கும் ஒன்பது மணிக்கும் உறங்கச் சென்றுவிட்டனர். மரகதம் மட்டும் கதைப் புத்தகத்தைப் பெயருக்குக் கையில் வைத்துக் கொண்டு சிந்தனையை எங்கோ மேய விட்டுக்கொண்டிருந்தாள்.

இரவு பன்னிரண்டு மணிக்கும் ஒரு மணிக்கும் இல்லந் திரும்பிக் கொண்டிருந்த சரவணன் அன்று பதினோரு மணிக்கெல்லாம் வந்து விட்டான்.

எவ்வளவோ அலுப்புக்களைத் தீர்த்து விட்டதற்கு அறிகுறியாக "அப்பாடா..." என்று சோபாவில் வந்து சாய்ந்தான்.

வழக்கம் போலவே அவனுக்கு வெந்நீர் போட்டு வைத்திருந்தாள் மரகதம். பதினோரு மணிக்கு வந்து விட்டதால் வெந்நீர் ஆறிப் போகாமலே இருந்தது.

சரவணன் எழுந்து சென்று குளித்து விட்டு வந்தான். இத்தனை நாளும் வெளியில் எதையாவது சாப்பிட்டு விட்டு வந்துவிடும் சரவணன் "சாப்பிட ஏதாவது இருக்கா மரகதம்?" என்று கேட்டான்.

மரகதம் அவனைச் சமையலறைக்கு அழைத்துச்சென்று அவனுக்கென எடுத்து வைத்திருந்த தோசையையும் சட்டினியையும் கொடுத்தாள்.

"ஏன் அத்தான் தேர்தல் முடிஞ்சிப் போச்சா?" மரகதம் கேட்டாள்.

"ம்...முடிஞ்சிப் போச்சு" சலிப்போடு பதில் சொன்னான் சரவணன்.

"ஏன் அத்தான் சலிப்பா சொல்றீங்க?"

"எங்க தலைவர் தோற்றுப் போயிட்டாரு மரகதம்"

"தோற்ற என்ன? அவருக்குத்தான் பல பதவிங்க இருக்கே. அது போதாதா?" மரகதம் கேட்டாள்.

"போதுமென்ற மனம் யாருக்கு இருக்கு?"

"இருக்கோ இல்லையோ, இருக்

சிறு பதவிகளை மற்றவர்களுக்கும் பகிர்ந்து கொடுத்துவிட்டா இந்தப் போட்டி எல்லாம் ஏன் வருது?" மரகதம் கேட்டாள்.

நீ கூட அரசியல் பேசுறியே?" சரவணனுக்கு ஆச்சரியமாகப் போய் விட்டது.

"நீங்க இந்த ஒருமாசமா அலைஞ்சதையும் பத்திரிகையிலே படிச்சதையும் வச்சித்தான் சொல்றேன்" என்றாள் மரகதம்.

"நீ சொல்றதும் சரிதான்... எங்க தலைவருக்கு வெற்றி வாய்ப்பு பிரகாசமா இருந்ததாலேதான் போட்டிக்கு நின்னாரு..."

"இப்போ தோற்றுப் போயிட்டாரே..."

"ஆமாம், தோற்றுத்தான் போயிட்டாரு... வெற்றியோ தோல்வியோ ஒரு பெரிய பிரச்சினைக்கு முடிவு தெரிஞ்சிப் போச்சு. அந்த வகையிலே நிம்மதிதான்" என்று பெருமூச்சு விட்டான் சரவணன்.

"இதோ பாருங்க அத்தான், பிள்ளைங்க நல்லாச் சாப்பிட்டு ஒரு மாசமாவுது. நாளைக்கு ஞாயிற்றுக் கிழமை. பிள்ளைங்க வீட்டிலேதான் இருப்பாங்க. நீங்க காலையிலேயே மார்க்கெட்டுக்குப் போயி இறைச்சி மீனெல்லாம் வாங்கி வந்திடுங்க" என்றாள் மரகதம்.

"பணம்?" தன்னிடம் பணம் இல்லையென்பதை அவன் கேள்வி காட்டிக் கொடுத்து விட்டது.

"நான் பக்கத்து வீட்டுப் பாட்டிக்கிட்டே இருபது வெள்ளி கடனா வாங்கி வச்சிருக்கிறேன்" என்றாள் மரகதம்.

சரவணன் அமைதியாகச் சாப்பிட்டுவிட்டு எழுந்தான்.

மறுநாள் வழக்கத்திற்கு மாறாகக் காலை எட்டுமணிக்குத்தான் படுக்கையை விட்டு எழுந்தான் சரவணன். முகச் சவரம் செய்து, குளித்து உடை மாற்றிக்கொண்டு அங்காடிக்குப் போகத் தயாராக மணி ஒன்பதாகிவிட்டது.

மரகதம் கூடையைக் கொண்டு வந்து கூடத்தில் வைத்தாள். தான் பக்கத்து வீட்டுப் பாட்டியிடம் கடனாக வாங்கி வைத்திருந்த இருபது வெள்ளியையும் அவனிடம் கொடுத்தாள்.

சரவணன் கூடையை எடுத்துக் கொண்டு அங்காடிக்குப் புறப்பட ஆயத்தமானபோது அவனைத் தேடிக் கொண்டு கிளைச் செயலாளர் கதிர்வேலு வந்து விட்டார்.

"என்ன கதிர்...? இந்தப் பக்கம்" சரவணன் கேட்டான்.

"எல்லாம் உன்னைப் பார்க்கத்தான். தலைவர் உன்னை உடனே அவசரமாக அழைச்சிக்கிட்டு வரச் சொன்னாரு" என்றார் கதிர்வேலு.

"தேர்தல் எல்லாந்தான் முடிஞ்சிப் போச்சு. நம்ம தலைவரும் தோற்றுப் போயிட்டாரு. இன்னும் என்ன அவசரம்?" சரவணன் கேட்டான்.

"தோற்றுப் போயிட்டாருங்கிறதுக்காகப் பேசாம இருந்திட முடியுமா? ஜெயித்தவரைக் கவிழ்க்க வழிதேட வேண்டாமா...? சரி, சரி! நேரத்தைக் கடத்தாதே. புறப்படு" கதிர்வேலு துரிதப்படுத்தினார்.

சரவணன் கையில் எடுத்த கூடையை மீண்டும் மேசைமேல் வைத்துவிட்டான். மரகதம் கொடுத்த இருபது வெள்ளி அவன் சட்டைப் பைக்குள்ளேயே இருந்தது.


அவர்கள் போய்விட்டார்கள்.

மரகதத்திற்கு மயக்கம் வரும் போல் இருந்தது. சோபாவில் சாய்ந்து விட்டாள். அவள் உள்ளத்திலிருந்து அழுகை குமுறிக்கொண்டு வந்தது.

இதற்கு முடிவு?

எங்கே இருக்கிறதோ, யார் கண்டார்கள்?

மரவள்ளிக் குழம்பு



தேவையான பொருட்கள்:

மரவள்ளிக்கிழங்கு 3 கட்டி, தேங்காய் 1, மிளகாய் வற்றல் 15, பெரிய வெங்காயம் 1, பூண்டு 1, காய்ந்த ஊடான் 1/2 கப், பழுத்த மிளகாய் 6, உப்பு, எண்ணெய், கடுகு, கறிவேப்பிலை.


செய்யும் விதம்:

கிழங்குகளைச் சிறு துண்டுகளாக வெட்டி வேகவிடவும். சிறிது வெந்தவுடன் பழுத்த மிளகாய்களை வெட்டி அதில் போடவும். மிளகாய் வற்றலை அரைத்து வைத்துக் கொள்வதோடு பூண்டு, ஊடான் இவைகளை நசுக்கிக் கொள்ளவும். தேங்காய்ப் பாலில் முதல் பால் தவிர மீதமுள்ளதைக் கிழங்குடன் சேர்க்க வேண்டும்.

கிழங்கு குழைய வெந்தவுடன் இறக்கி வைத்துவிட்டு வாணலியில் எண்ணெய் விட்டுக் காய்ந்தவுடன் கடுகு சேர்க்கவும். பொரிந்தவுடன் வெங்காயம், கறிவேப்பிலையைப் போட்டுச் சிவந்தவுடன் அரைத்த விழுதையும்போட்டு எண்ணெய்யில் நன்றாக வதக்கவேண்டும். வதங்கிய பின் கிழங்கில் கொட்டி, முதல்பால், உப்புகலந்து நன்றாகக் கிளறி அடுப்பில் ஏற்றி ஒருமுறை கொதித்தவுடன்இறக்கிவிடவும்.விரும்புவோர் எலுமிச்சைச் சாறு கலந்துகொள்ளலாம்.

–திருமதி வேலாயுதம்,
சிகாமட்

அகத்தை அழகுபடுத்துங்கள்



இப்படித்தான் வாழவேண்டும் என்ற நிலை மாறி இப்படியும் வாழலாம் என்ற நிலை ஏற்பட்டுள்ள இந்த நவீன காலத்தில் நடை, உடை, பாவனை ஆகியவற்றையும் நாகரிகம் என்ற போர்வைக்குள் புகுத்தும் நம் பெண்கள் இந்நாட்டில் நிறையப்பேர் உள்ளனர். பழங்கால முறைக்கும் இப்போது வளர்ந்து வரும் நாகரிகத்திற்கும் நிறைய வேறுபாடு உண்டு. "வாழ்க்கை வாழ்வதற்கே" என்று கூறிக்கொண்டு கண்மண் தெரியாமல் கால்போன போக்கிலும் மனம் போன போக்கிலும் வாழ்ந்துவிட்டுப் பின் வருந்துவதால் பயன் இல்லை.

பெண்களாகிய நாம் வீட்டின் கண்மணிகள். நாகரிகம் வேண்டாம் என்று சொல்லவில்லை; ஆடம்பரமும் கூடாது என்று கண்டிக்கவில்லை. ஆனால் அலங்கோலம்தான் கூடாது. ஆடைக் குறைப்பு என்று கூறிக்கொண்டு துண்டு துணியில் ரவிக்கை அணியும் பெண்களில் பலர் அதை நாகரிகம் என்று சொல்கின்றனர். ஆனால் உண்மையான நாகரிகம் அதுவல்ல; மறைக்க வேண்டியதை மறைப்பதே நாகரிகம்.

"காலம் மாறிவிட்டது; நாங்களும் மாறினோம்" என்பர் சிலர். காலம் மாறவேயில்லை; மனிதர்கள் தான் மாறிக்கொண்டேயிருக்கிறார்கள். காலத்தின் மீது பழி போடுகிறார்கள். "படித்தோம் என்ற பெருமிதத்தில் நடந்தால் அதுவே நமக்கு எவ்வளவு இகழ்ச்சியைத் தரும் தெரியுமா? ஆணவக்காரி என்றும் அடங்காப்பிடாரி என்றும் மற்றவர்கள் நம்மைப் பார்த்துக் கூறக் கூடும். ஏன் இந்த இகழ்ச்சி? அடக்கம், ஒடுக்கம், பண்பு, அன்பு இவற்றைப் பேணி வாழ்வதால் குலமகள், மகாலட்சுமி என்று பெரியோர்கள் ஆசை தீரச் சொல்வர்.

ஒரு பெண்ணுக்குப் பெருமை தரக்கூடியது அவளுடையே நடத்தையே! அதன் பிறகே அவளுடைய உடையலங்காரம். ஆகையால் உடலையும் உருவத்தையும் அழகு சாதனங்களாலும் அலங்காரப் பொருட்களாலும் அழகுபடுத்துவதை விடுத்து அகத்தை முதலில் அழகு படுத்துங்கள். அதுவே உங்கள் நன்னடத்தைக்குச் சான்றாகும்.

''கிருஷ்ணா''
கோலாலம்பூர்.

விதிகள்

1. குறிப்புகளின் துணையோடு தக்க எழுத்துக்களைக் கொண்டு கட்டங்களை நிரப்ப வேண்டும்.
2. ஒரு கட்டத்தில் ஓரெழுத்து மட்டுமே எழுதப்படவேண்டும்.
3. அழித்தல், அடித்தல் திருத்தல், கூடாது. "பால் பாயிண்ட்" பேனாவால்எழுதுவது நல்லது. பென்சிலால் எழுதுதல் கூடாது.
4. சரியான விடை எழுதியவர் வெ.100 பரிசு பெறுவார். ஒருவருக்கு மேற்பட்டோர் வெற்றி பெறுவார்களாயின் இத்தொகை பகிர்ந்து அளிக்கப்படும்.
5. எவரும் சரியான விடையை எழுதவில்லையெனில் மிகக் குறைந்த பிழைகளையுடைய விடையை எழுதியவருக்கு வெ.10 வழங்கப்படும். ஒரே எண்ணிக்கையிலான மிகக் குறைந்த பிழைகளுடைய விடையைப் பலர் எழுதியிருப்பின் வெ.10 பகிர்ந்தளிக்கப் படும். எஞ்சியவெ.90 அடுத்த போட்டிக்கானபரிசுத்தொகையோடு சேர்க்கப்படும்.
6. ஒருவர் எத்தனை கூப்பன்களை வேண்டுமானாலும் அனுப்பலாம். தனித்தாளில் எழுதப்படும் விடைகள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா.
7. "புதிய சமுதாயத்தில்" பணியாற்றுபவர்களும் அவர்தம் குடும்பத்தினரும் போட்டியில் கலந்துகொள்ள இயலாது.
8. இப்போட்டி தொடர்பான அனைத்துக்கும் ஆசிரியரின் முடிவே இறுதியானது.
9. இறுதிநாள் 10-9-1977
10. கூப்பன்களை அனுப்பவேண்டிய முகவரி:-

புதிய சமுதாயம்
131, Jalan Tuanku Abdul Rahman, [2nd Floor]
Kuala Lumpur.

■	1	■	2		
3				■	■
■		■	4	5	
6	■	7	■		■
8	9			■	10
11			■	12	

தமிழறிவுப்போட்டி-6

இறுதிநாள் 10-9-77

பெயர்: ____________

அடையாள அட்டை எண்: ____________

முகவரி: ____________

____

____

கையொப்பம்

பரிசு $100/=

இடமிருந்து வலம்:

2. இது இல்லாத பெண்களின் வாழ்க்கை ஒளிமயமாக இருக்கும் என உறுதி கூற முடியாது.
3. அரசாங்கம் இதைப் போட்டுத் தான் எதையும் செயற்படுத்தும்.
4. கோவலனின் நெஞ்சம் கவர்ந்தவள்.
8. ஒரு திசை, மாறிக் கிடக்கிறது.
11. (ஒழுங்கு படுத்தினால்) நடராசப் பெருமானின் திருத்தலம்.
12. மற்றவர்களுக்காக உழைத்துச் சொந்தத்தில் முன்னேறுதிருப்பவர்களுக்கு உவமை.

மேலிருந்து கீழ்:

1. பெண்களில் சிலருக்குக் கூந்தல் இப்படியும் இருப்பதுண்டு.
2. பெண்களுக்குக் கிடைக்கும் பதவிகளில் மிக உயர்ந்த பதவி.
5. எண்சாண் உடம்புக்கு இது தானே பிரதானம்?
6. இராவணன் இதிலும் சிறந்தவனாக விளங்கினான்.
7. இது இல்லாமல் தமிழ்ப் படமா?
9. வாழைமரத்தில் இது ஒன்றுக்கு மேல் இருப்பது அதிசயம்!
10. அடிபடுவதே இதன் தலைவிதி!

தமிழறிவுப் போட்டி 4 முடிவு

1 இ	ரு	2 கா	டு	■	3 து
■	4 பி	ணி	■	5 அ	ணி
6 ப	ட்	■	7 வ	ர	வு
ரி	■	8 க	ட	ன்	■
■	9 பா	ல	ம்	■	10 ஊ
11 நா	ண	ம்	■	■	சி

தமிழறிவுப் போட்டி -4க்கு வழக்கம்போல் ஆயிரக்கணக்கான கூப்பன்கள் வந்தன. ஆயினும் இருவரே தங்களின் கூப்பன்களை எங்கள் அமைப்புக்கேற்ற வகையில் சரியாக நிறைவு செய்திருந்தனர். அவர்களுக்குத் தலா $25 அனுப்பிக்கப்படும். பரிசு பெற்றவர்கள்:

1. வி.கிருஷ்ணன், டோர்க்கிங் டன் தோட்டம். சபாக் பெர்ணம், சிலாங்கூர்.

2. ச. கருப்பையா, 77, கம்போங் பாரு, உலுதிமியாங், சிரம்பான்.

தமிழறிவுப் போட்டியின் பரிசுத் தொகை இந்த இதழிலிருந்து $100ஆக உயர்த்தப்பட்டுள்ளது. இனி மாதம் ஒருமுறையாக தமிழறிவுப் போட்டி நடைபெறும். கூப்பன், மாதம் இருமுறை வெளியிடப்படும்.

பரிசுத் தொகையைக் கூட்டவேண்டும்; கூப்பனை அனுப்புவதற்குரிய நாட்கள் அதிகரிக்கப்படவேண்டும் என்று பெரும்பாலான வாசகர்கள் விடுத்த வேண்டுகோளுக்கிணங்க மேற்குறித்தவாறு தமிழறிவுப் போட்டியில் மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன.

தமிழ் வளர்க்கும் கோவில்

"பள்ளித் தலமனைத்தும் கோயில் செய்குவோம்" என்று பாடினான் பாரதி. இதற்குப் பொருள் பலர் பலவாறாகச் சொல்கிறார்கள் என்றாலும் பள்ளிகளிலேயே சமயக்கல்வி போதிக்கப்படவேண்டும் என்று இன்றையச் சூழ்நிலைக்கேற்றவாறு பொருள் கொள்வதில் தவறில்லை.

பள்ளிகளில் சமயக்கல்வி போதிக்கப்படவேண்டும் என்னும் அதேவேளையில் கோவில்களிலும் தமிழ்க்கல்வி (நம்மைப் பொறுத்த வரை) போதிக்கப்படவேண்டும் என்பதும் பொருத்தம் அல்லவா?

"பள்ளித்தலமனைத்தும் கோயில் செய்குவோம்" என்ற பாரதியின் பாடலைக் "கோயில் தலமனைத்தும் பள்ளி செய்குவோம்" என மாற்றிப் பாடும் வகையில் கோலாலம்பூர் மாநகரிலுள்ள ஒரு கோவில், சிறுவர்களுக்குத் தமிழ் கற்பிப்பதைத் தனது தலையாய பணிகளில் ஒன்றாகச் செய்து வருகிறது.

ஸ்தாப்பாக் [சுடுநீர்க் கிராமம்] வட்டாரத்திலுள்ள ஸ்ரீ முத்துமாரியம்மன் கோவில் இந்தத் தமிழ்ப் பணியை இன்று நேற்று செய்து வரவில்லை; சாதாரணத் தகரக்கொட்டகையாக இருந்த 1963ஆம் ஆண்டிலிருந்தே செய்து வருகிறது.

இந்தக் கோவில் நிர்வாகிகள் இந்தத் தமிழ் வகுப்பை அந்தக் காலத்திலிருந்தே தேர்ச்சி பெற்ற தமிழாசிரியர்களைக் கொண்டு நடத்தி வருவது சிறப்பித்துச் சொல்லவேண்டிய ஒன்று. "ஆனா" தெரியாத சிறுவர்கள், ஆங்கில-மலாய்ப் பள்ளிகளில் பயிலும் இந்திய மாணவர்கள் முதலியோர் ஒவ்வொரு வாரமும் ஞாயிற்றுக்கிழமை நடைபெறும் இவ்வகுப்பில் கலந்து கொள்கின்றனர். பாலர்வகுப்புமுதல் ஐந்தாம் வகுப்பு வரை கற்பிக்கப்படும் இந்தத் தமிழ் வகுப்பில் 200க்கும் அதிகமான மாணவர்கள் பங்கு பெறுகின்றனர்.

ஆசிரியர்கள். தவிர்க்க இயலாத சூழ்நிலையில் வராத நாட்களில் சிசிலியாஎன்னும் மாணவி வகுப்பை நடத்துகிறார். இவர் இங்கேயே தமிழ் கற்றுத் தமிழைப் போதிக்கும் அளவுக்குத் திறமை பெற்றிருக்கிறார்.

"பால் நினைந்தூட்டும் தாயினும் சாலப் பரிந்து" என்று திருவாசகம் குறிப்பிடுவது போல, இம்மாணவர்களுக்காகத் "தேநீர், பிஸ்கெட்" ஆகியவற்றைக்கடந்த ஆண்டு முதல் வாரந்தோறும் அவ்வட்டாரத்தைச் சேர்ந்த அன்பர் திரு. துரைராஜ் இலவசமாக வழங்கி வருகிறார். இது தவிர கல்வி நிதியாக திரு. பெ. வெற்றிவேல் ஆண்டுக்கு. 200 வெள்ளி வழங்குவதும் குறிப்பிடத்தக்கது.

ஸ்ரீ முத்துமாரியம்மன் கோவிலின் நிர்வாகிகள் தங்கள் கோவிலுக்குச் சிறப்புத் தேடுவதை இத்தோடு நிறுத்திவிடவில்லை. திருமுறைத் தொண்டர் ம. சண்முகனார் தலைமையில் இயங்கும் திருவருள் தவநெறி மன்றத்தின் துணையோடு சனிக்கிழமைதோறும் தேவார வகுப்பும் நடத்தி வருகின்றனர்.

கோவில் என்பது வெறும் பக்தியை மட்டும் வளர்க்கவே என்றில்லாமல் சமுதாயத்தின் தேவைகளையும் நிறைவு செய்யும் அறச்சாலை எனக்கருதி அவர்கள் அடுத்த ஆண்டு முதல் வானொலி— தொலைக்காட்சி பழுது பார்க்கும் பயிற்சி வகுப்பையும் இளைஞர்களுக்கெனத் துவக்கவிருக்கின்றனர். மெய்ஞானத்தோடு நாம் விஞ்ஞானத்திலும் புகழ்பெற வேண்டும் என்பதையும் மெய்ஞானம் விஞ்ஞானத்திற்கு எதிரானதல்ல என்பதையும் இது புலப்படுத்துகிறது. இப்பயிற்சி வகுப்பில் சேர விரும்பும் இளைஞர்கள் கோவில் நிர்வாகத்தினருடன் தொடர்புகொள்ளலாம்.

பூச்சொரி விழா

மலேசியாவில் உள்ள இதர அம்மன் கோவில்கள் பெற்றிராத ஒரு சிறப்பை வரலாற்று ரீதியில் இந்த ஸ்தாப்பாக் ஸ்ரீ முத்துமாரியம்மன் கோவில் பெற்றிருக்கிறது. ஆமாம், அம்மன் கோவிலிலும் காவடி எடுக்கின்ற, நமது சமய நெறிக்குப் புறம்பான கருத்தை மாற்றி அம்மனுக்கு உகந்த பூச்



தலைசிறந்த மாணவி

குமாரி சிசிலியா

சொரி விழாவை மலேசியாவிலேயே முதன்முதலாகத் துவக்கிய பெருமை இக்கோவிலுக்கு உண்டு. 1972ஆம் ஆண்டு முதல் இக்கோவிலின் பெரும் விழாவாகப் பூச்சொரித் திருவிழா நடத்தப்படுகிறது. இதில் ஆண்டு தோறும் நானூற்றுக்கும்மேற்பட்ட பெண்கள். பங்கெடுக்கின்றனர்.

இப்போது மலேசியாவில் மேலும் சில அம்மன் கோவில்கள் பூச்சொரி விழா நடத்துவது இங்கு நினைவுகூரத்தக்கது.

விழா நடக்கும் விதம்

வைகாசித் திங்கள் முதல் ஞாயிற்றுக்கிழமையன்று காப்புக் கட்டி, தொடர்ந்து ஏழு நாட்களுக்கு உபயம் நடத்தப்படும். ஏழாவது நாள் -அடுத்த ஞாயிற்றுக்கிழமை பூச்சொரி விழா எடுக்கப்படும். பூச்சொரி விழாவில் பங்கு பெற்று அம்மனுக்குப் பூச்சொரிய விரும்பும் பூவையர்கள் $1.50 கொடுத்து ஏற்கனவே தங்கள் பெயரைப் பதிந்துகொள்கிறார்கள். அவ்வாறு பதிந்துகொண்டவர்கள் அன்றைய தினம் முத்துமாரியம்மன் கோயிலுக்குச் சுமார் இரண்டு மைல் தொலைவிலுள்ள ஆனந்த விநாயகர் கோவிலிலிருந்து [மற்ற கோவில்களைவிட மூலக் கடவுளான விநாயகர் கோவிலிலிருந்து பூவேந்தி ஊர்வலமாக வருவது சிறப்பு] தத்தம்



தமிழ் வகுப்பு மாணவர்களில் சிலர்

புறப்பட்டு கோவிலுக்கு வருகிறார்கள். அந்த அவர்களின் பூக்கள் அம்மன் மீது சொரியப்படுகின்றன.

வழிபாடு செய்யப்பட்ட பூக்களில் சிறிதளவு பெண்களுக்கு வழங்கப்படுகிறது. மலைபோல் குவிந்து கிடக்கும் எஞ்சிய பூக்களை மறுநாள்

அட்டைப்படம்:

அண்மையில் கொண்டாடப்பட்ட பூச்சொரி விழாவில் எடுக்கப்பட்ட படம்.

ஆற்றில் கொண்டுபோய்த் தூவிவிடுகிறார்கள். கரகம் எடுப்பவர்கள் முன்னே செல்ல, நாதஸ்வரம் மங்கல ஒலி எழுப்ப, பூவேந்திய பாவையர்கள் வரிசையாக நடந்துவர பக்தகோடிகள் பின்தொடரும் பூச்சொரி விழா ஊர்வலம் பார்க்கக் கண்கொள்ளாக்காட்சியாக விளங்கும்.

கல்யாண மண்டபம்

சுமார் $70 ஆயிரம் செலவில் கல்யாணமண்டபம் கட்டும் முயற்சியில் தற்சமயம் நிர்வாகத்ினர் முழுமூச்சாக இறங்கியுள்ளனர். இந்த மண்டபம் கல்யாண மண்டபமாக மட்டும் விளங்காமல் தமிழ் வகுப்பு நடக்கும் தமிழ் மண்டபமாகவும் விளங்கப்போகிறது.

தற்போதைய நிர்வாகத்தலைவர் திரு. ஆ. க. பெருமாள்; செயலாளர் ஏ. தி. பாணி, பொருளாளர் திரு. கோ. பாக்கியசீலன் ஆகியோர் இதர பதினெட்டு நிர்வாக உறுப்பினர்களோடு இந்த மண்டபம் கட்டும் முயற்சியில் இறங்கியுள்ளனர்.

சைவமும் தமிழும் நமது இரு கண்கள் என்பார்கள். அதன்படி சைவத்தையும் தமிழையும் சரிக்குச் சரியாக வளர்த்து வரும் ஸ்ரீ முத்து மாரியம்மன் கோயில் நிர்வாகத்தினரின் இந்த மண்டபம் கட்டும் முயற்சிக்கு மக்கள் ஆதரவும் மாரியம்மன் அருளும் கிட்டட்டும்; அவர்கள் விரைவில் மண்டபத்தைக் கட்டட்டும்.

-பாதாசன்

வழுக்கையர்

1999ஆம்ஆண்டில், நாற்பது வயதைக் கடந்தவர்களில் நிறையப் பேர் வழுக்கைத் தலை உடையவர்களாக இருப்பார்கள் என ஓர் ஆராய்ச்சியாளர் கூறுகின்றார். சர்க்கரை, உப்பு ஆகியவற்றை மிகவும் குறைவாகப் பயன்படுத்துவது, வறுத்த உணவுப் பொருட்களைத் தவிர்ப்பது ஆகிய பழக்கங்களால் வழுக்கையைத் தடுக்கலாம் என்கிறார் அவர்.

செல்வராஜூ குமரன்,
கிள்ளான்.

சிவபெருமான் தாலாட்டு

❀ நகைச்சுவைப்பித்தன்

ஓருருவம் இல்லாத ஒண்பொருளே! ஓர்கோடிப்
பேருருவம் கொள்ளும் பெருமானே, கண்ணுறங்கு!

உற்பாதந் தாம்நசுக்கி ஓய்ந்தனையால்! உன்னிரண்டு
பொற்பாதந் தாம்நீட்டிப் புண்ணியனே, கண்ணுறங்கு!

காடுநட மாடிக் களைப்புமிக உற்றனையால்!
பாடுவிட வேண்டாவோ! பார்முதலே, கண்ணுறங்கு!

அண்டம் புரத்தற்கே ஐந்தொழிலுங் கொண்டனையால்!
கண்டம் கறுத்ததனிக் கண்ணுதலாய், கண்ணுறங்கு!

தீயாய்க் குடலெரியத் தேய்ந்து மிகவருந்தி
நாயாய் அலைந்து நலிந்திரண்டு கையேந்திச்
சோற்றுப் பருக்கைக்கே சோர்வுற்றுக் கும்பியிலே
கூற்றுக் கிடந்தழுந்து கூனிக் கிடப்பவரைப்
பாராதே, தூக்கம் பழுதுபடும்! கீழ்நிலையை
ஓராதே ஐயா, உனதுறக்கம் கெட்டுவிடும்!
ஓய்ந்த இமைமூடி உள்ளக் கதவடைத்துச்
சாய்ந்த நெடுமரமாய்ச் சங்கரனே, கண்ணுறங்கு!

ஈடும் இணையும் இலாதுபுவி வாழ்ந்திருந்தோர்
சூடு சுரணை சுயஅறிவு தன்மதிப்பு
மானம் மரியாதை மாண்புநலம் தாம்விட்டே
ஈனம் மிகுந்த இழிந்த பிறவிகளாய்க்
கூலி கொடுப்பார்தம் கோலசைவுக் கேற்றபடி
தோலி லுணர்வின்றித் தொந்தோம்தொந் தோமெனவே
ஆட்டமிடு கின்றார்! அரைவயிற்றுத் தீனிக்கும்
வாட்டுமெரி நீருக்கும் வாழ்கின்றார்! ஆதிசக்தி
ஓர்பாதி கொண்டவனே, உள்ளம் நெகிழ்ந்தாதே!
பேர்பாதி மூங்கைகளாய்ப் பேடிகளாய்ப் போனாலும்
பூட்டிவைத்த கல்லாகப் போட்டுவைத்த கல்லாக
நீட்டிவைத்த கல்லாக நிம்மதியாய்க் கண்ணுறங்கு!

பொற்கோயில் கட்டியுனைப் பொன்னால் வடித்தஇனம்
கற்கோயி லுக்குங் கதியின்றி ஏதின்றி,
இற்று விழும்பலகை இற்று விழுங்கால்கள்
இற்று விழுங்கூரை இட்டுவைத்த மண்படிமம்
கால்தூக்கி நாய்நீர் கழிக்க, பசுக்கூட்டம்
வால்தூக்கிச் சாணமிட, வன்பிழுக்கை ஆடுதள்ள,
மட்டிச் சிறுவர் மலங்கழிக்க வாய்ந்தபல
குட்டிச் சுவர்களையுன் கோயிலென்று பேர்சொல்லிச்
சுட்டிநெறி மாய்ப்பதனைச் சோதியே, எண்ணாதே!
வெட்டியெறி கட்டையென மெய்நீட்டிக் கண்ணுறங்கு!

சோற்றுக் கழுங்குரலும் சோர்வுற் றழுங்குரலும்
பேற்றுக் கழுங்குரலும் பேதுற் றழுங்குரலும்
ஊமை மனிதர் உரிமைக் கழுங்குரலும்
தூமை மடவார் துயருற் றழுங்குரலும்
'ஐயோ' எனுங்குரலும் அல்லல் மிகுந்து 'சிவம்
பொய்யோ' எனுங்குரலும் பொற்கோவே, கேளாதே!
தோடுடைய உன்செவிகள் துன்பக் குரல்கேட்டால்
நீடுதுயில் ஓடிவிடும்! நிம்மதிக்குப் பங்கமின்றி
வண்டுமுர லோசை மலர்தூவும் மெல்லோசை
மண்டுமணி யோசை மறைகிளத்தும் நல்லோசை
தேவாரப் பாடல் திருவா சகப்பாடல்
நாவார நாளும் நயந்திசைக்கும் பாட்டோசை
அத்தனையும் கேட்டே அட, சிவனே! கண்ணுறங்கு!
எத்தனையும் நாணமின்றி என்றென்றுங் கண்ணுறங்கு!



நடிப்பே துணை

ஜெயசித்ரா

நான் பல படங்களில், பல வெற்றிப்படங்களில் நடித்திருந்தாலும் என்னை ஒரு கதாநாயகியாக நான் எப்போதுமே கற்பனை செய்து பார்ப்பது இல்லை. தமிழ்ப்பட உலகைப் பொறுத்தவரை ஒரு நடிகை எத்தனை நாட்கள் கதாநாயகியாக நடிக்க முடியும் என்று சொல்ல முடியாது.

இன்று யாருடன் கதாநாயகியாக நடிக்கிறேனோ, அதே கதாநாயகருக்குச் சில ஆண்டுகள் கழித்து அம்மாவாகக்கூட நடிக்கவேண்டிய நிலை ஏற்படலாம்! பண்டரிபாயைப் "பராசக்தி" படத்தில் நடிகர் திலகத்தின் காதலியாகப் பார்த்த நாம், அதற்குப்பிறகு எத்தனை படங்களில் அவருக்கு அம்மாவாக, அக்காவாகப் பார்த்திருக்கிறோம்.

வேடம் மாறினாலும் அவர் படங்களில் நிலைத்து நிற்கிறார். அது மாதிரியே நானும் என்றும் நிலைத்து நிற்கவேண்டும் என்று விரும்புகின்றேன். அதற்கு நடிப்புமட்டுமே துணையாக இருக்கமுடியும். நடிப்பில் தேர்ச்சிபெற்ற ஒரு நடிகையால் தான் காலத்தால் அழிக்கமுடியாத படி திரையுலகில் நிலைத்து நிற்க முடியும்!

இப்படி யோர் அழியாத இடத்தை - புகழைப் பெறவேண்டும் என்றுதான் நானும் நினைக்கிறேன். எனவே, நான் இப்போதெல்லாம் ஏற்று நடிக்கும் பாத்திரங்கள் கதாநாயகியின் தன்மைகள் கொண்டதா இல்லையா என்றுகூட சிந்தித்துப்பார்ப்பதில்லை. ஒரு படத்தில் நடிப்பதின்மூலம் என் நடிப்புத் திறமையைக் கொஞ்சமாவது நான் பார்க்கமுடியுமா - பெருக்கமுடியுமா- அதில் வெற்றியும் காணமுடியுமா என்றுமட்டுமே யோசிப்பதுண்டு.

பூந்தோட்டம்

ஊட்டியில் "புன்னகை அரசி" கே. ஆர். விஜயாவுக்குச் சொந்தமாக ஒரு பெரிய பூந்தோட்டம் இருக்கிறது. வண்ண வண்ணப் பூச்செடிகள், விதவிதமான குரோட்டன்ஸ்கள் இத்தோட்டத்தில் உள்ளன. ஆண்டு தோறும் தேர்ந்தெடுக்கப்படும் சிறந்த தோட்டத்துக்கான பரிசை இவரது தோட்டம் இந்த ஆண்டு பெற்றிருக்கிறது என்பது குறிப்பிடத்தக்கது.

வண்ணமயில் வாணிஸ்ரீ!

நடிகை வாணிஸ்ரீ மற்ற எந்த நடிகைகளும் வளர்க்காத ஒன்றை வளர்க்கிறார். அதுதான் வண்ண மயில். இந்த மயிலுக்காகப் பெரிய கூண்டு ஒன்றைத் தயார் செய்து அதைத் தன் தோட்டத்திலேயே வைத்திருக்கிறார்.

பிடித்த கதாசிரியர்!

நகைச்சுவை நடிகை மனோரமாவுக்கு மிகவும் பிடித்த கதாசிரியர் ஜெயகாந்தன். அவர் எழுதிய கதைகள் சுவையாக மட்டுமல்ல சிந்திக்கவும் வைக்கின்றன என்கிறார் மனோரமா.

---ராமதாஸ் மனோகரன்

மருதுவைக் கேளுங்கள்

து. பெரியசாமி, கிள்ளான்

கே: ஒருவன் வாழ்க்கையில் முன்னேற மிக முக்கியமானது உழைப்பா, கல்வியா, பேச்சுத் திறமையா?

ப: ஒவ்வொருவருக்கும் ஒவ்வொன்று கைகொடுக்கும். தாங்கள் குறிப்பிட்டிருக்கும் மூன்றுமே வாழ்க்கை முன்னேற்றத்திற்குத் தேவையான அம்சங்கள்.

கே: அண்ணு, மனிதனுக்கும் குரங்குகளுக்கும் வித்தியாசம் என்ன?

ப: மனிதனுக்கு இருக்கும் "வால்" வெளித்தோற்றத்திற்குத் தெரியவில்லை. இதுதான் முக்கியமான வித்தியாசம்.

குமாரி ஜானகி, சுங்கை பிரு தோட்டம், சிம்மோ

கே: புதிய சமுதாயத்தில் சிறுவர்களுக்கே ஒரு பகுதியை வெளியிடும் நோக்கம் உண்டா?

ப: ஏற்கனவே கண்ணகி சித்திரத் தொடர்கதை, சிறுவர் கதைகள், விடுகதைகள், சிறுவர் கவிதைகள் புதிய சமுதாயத்தில் வெளிவருவதைத் தாங்கள் கவனிக்கவில்லையா?

எம். ஜி. ராஜு, கேமரன் மலை

கே: அண்ணு, இன்னும் சாதிபேதம் பார்க்கும் சிலரைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

ப: தற்காலத்துக்கு ஒவ்வாத கட்டுப்பெட்டிகள்!

குமாரி த. ராணி, ஈப்போ

கே: இன்றையப் பெண்களை மென்மையான மலருக்கு ஒப்பிடக்கூடாது என்று வாதிக்கிறீர்களே, ஏன்?



ப: பெண்களின் மென்மைத்தன்மை படிப்படியாகக் குறைந்து வருவது உண்மையே. ஆண்களுக்கு எல்லா வகையிலும் நிகராகப் பெண்கள் முன்னேறி வருவதால், ஆண்களிடம் காணப்படும் முரட்டுத் தன்மையும், வன்மை இயல்பும் பெண்களிடம் படிந்துவருவதுதவிர்க்கமுடியாதது. ஆகவே எல்லாப் பெண்களையும் மலருக்கு ஒப்பிடுவது பொருத்தமில்லைதான்!

குமாரி கலையரசி, மாத்தாங் தோட்டம் தைப்பிங்

கே: அண்ணு! காலங்கள் மாறுகின்றனவா? நாம் மாறுகின்றோமா?

ப: காலத்தை மாற்றுகின்றவர்களும் மனிதர்களாகிய நாம்தான். கால மாறுதலுக்கேற்பத் தம்மை மாற்றிக் கொள்கிறவர்களும் மனிதர்களே. காலமும் மனிதர்களும் ஒருவரோடொருவர் பின்னிப்பிணைந்து நிற்பவர்கள்

க. அழகர்சாமி, ஈப்போ

கே: ஒருவனை உயர்த்துவது எது?

ப: கல்வியும் அதனையொட்டிக் கிடைக்கின்ற

வே பாலகிருஷ்ணன், லஞ்சாங் தோட்டம், பகாங்

கே: பாட்டாளிகளின் சேவை கால அனுகூல ஒப்பந்தம் நடைமுறைக்கு வந்து விட்டதா?

ப: 1976 ஜனவரி முதல் தேதிக்குப் பிறகு ஓய்வு பெற்றிருக்கும் எல்லாத் தோட்டத் தொழிலாளர்களும் இந்த ஒப்பந்தத்தின் அனுகூலங்களை இப்பொழுது பெறமுடியும்.

எம். ராஜேஸ்வரி சாமிக்கண்ணு,
டென்னிஸ்டவுன் தோட்டம், பாரிட்புந்தார்

கே: பெண்களுக்குச் சம உரிமை கொடுப்பதைத் தாங்கள் வரவேற்கிறீர்களா?

ப: வரவேற்காவிட்டால் பெண்கள் என்னைப் பிய்த்தெடுத்து விடுவார்கள். ஆட்சியிலிருந்த பெண் பிரதமர்கள் எல்லாரும் பதவிகளை இழந்து நிற்கின்ற இந்தக் கட்டத்தில்கூட பெண்களின் சம உரிமைக் கோரிக்கையை நாம் புறக்கணிக்க முடியாது.

கே: நமது ம. இ. கா அரசியல் நாளுக்குநாள் வேகமாகப் போவதைப் பற்றி...?

ப: இது நம் மக்களின் அரசியல் விழிப்பைக் காட்டுகிறது. அதே சமயத்தில் பதவிச் சண்டைகளை மட்டும் பெருக்கிக் கொண்டிராமல் மக்களுக்கு உண்மையில் தொண்டு செய்கிற திருக்கூட்டமாக ம. இ. கா. அமைப்பு விளங்குவதற்குத் தலைவர்களும், தொண்டர்களும் அதிகமான அர்ப்பணிப்பு உணர்வை வளர்த்துக்கொள்ள வேண்டிய அவசியம் இருக்கிறது.

க. திலகராஜா, கங்கார்

கே: பட்டங்கள் மனிதர்களுக்கு மதிப்பளிக்கின்றனவா, மனிதர்கள் பட்டங்களுக்கு மதிப்பளிக்கின்றனரா?

ப: பட்டங்களால் மதிப்புப் பெறுகிறவர்களே பெரும்பாலோர். விரல் விட்டு எண்ணக்கூடிய ஒரு சிலர் மட்டுமே தாங்கள் பெறும் பட்டங்களுக்கு மதிப்பைத் தேடித் தருகின்றனர்.

எம். ஏ. அழகுமலை, ஒல்டு சிபில்டு தோட்டம், கிள்ளான்

கே: உதடு சிரிக்கும்போது உள்ளம் சிரிக்குமா?

ப: உண்மையான சிரிப்பு அதுதான்!

கே: வாய்க்கும் மனைவியைப் பொறுத்துத்தான் ஒருவரின் வாழ்க்கை அமைகிறதா?

ப: நூற்றுக்குத் தொண்ணூறு பங்கு இல்லத்தரசியின் கையில்தான் ஒருவனின் வாழ்க்கை வெற்றி அமைந்திருக்கிறது.

கே: மனச்சாட்சி உள்ளவர்கள்தாம் மனிதர்களா?

ப: அவர்களே மதிக்கத்தக்க மனிதர்கள்.

என். என். கிருஷ்ணவேணி, கம்போங் சீரே, சிமினி

கே: வெற்றிலை, புகையிலை போடுவதினால் புற்று நோய் ஏற்படும் சாத்தியம் உண்டா?

ஐயாசாமி ஐமுனு, சுங்கை

கே: மனிதனின் படைப்பில் மகத்தானது எது?
ப: கம்பனின் இராம காதை.

என். ஜெயபாலன் (நிர்மல்), சிரம்பான்

கே: அண்ணு! கம்யூனிஸ்டுப் பயங்கரவாதிகளின் தொல்லே எப்போது ஒழியும்?
ப: பயங்கரவாதிகள் நடமாடும் பகுதிகளில் வசிக்கின்ற மக்கள் அரசாங்கத்தின் நடவடிக்கைகளுக்கு எல்லா வகையாலும் ஒத்துழைப்பு நல்கி, பயங்கரவாதிகளுக்குக் கொஞ்சம்கூடத்தயவு தாட்சண்யம் காட்டாமல் நடந்துகொண்டால், மலேசிய-தாய்லாந்துப் படைகள் தற்சமயம் எல்லேயில் மேற்கொண்டிருக்கும் முழுமூச்சான துடைத்தொழிப்பு நடவடிக்கை மிக விரைவில் நூற்றுக்கு நூறு வெற்றியடையும்.

கே: நம் நாட்டில் எண்ணெய் கிடைக்கும் சாத்தியம் உண்டா?



ப: நீங்கள் தூங்கிக் கொண்டிருக்கிறீர்கள் என்று தோன்றுகிறது! எண்ணெய் வளம் கொப்பளிக்கும் குபேர நாடுகளில் ஒன்ருக மலேசியா இடம்பெறும் காலம் நமது எண்ணெய்க் கிணறுகள் மூலம் நெருங்கிக் கொண்டிருக்கிறது.

சா. ராஜேஸ்வரன், நோர்த் ஹம்மாக் தோட்டம், கிள்ளான்

கே: தற்போது எம். ஜி. ஆரின் நிலேமை என்ன?
ப: தமிழகத்தின் ஆட்சிப் பீடத்தில் அமர்ந்திருக்கும் எம். ஜி. ஆர். சட்டமன்றத்தில் எதிர்க்கட்சித் தலேவர் கருணுநிதி தொடுக்கும் கணேகளே ஒருபுறம் சமாளிக்க வேண்டும். மற்ருெரு புறம் தேர்தலில் தாம் அளித்த வாக்குறுதிகளே நிறைவேற்ற நடவடிக்கைகளே எடுக்கவேண்டும். புரட்சி நடிகராக இருந்தபோது இத்துணேச் சிக்கல்களே அவர் எதிர்நோக்கியிருக்கமாட்டார்!

கே: வாழ்க்கையில் துன்பம் ஏன் ஏற்படுகிறது?
ப: இன்பத்திலேயே மனிதன் மூழ்கிக் கிடந்தால் அவனுக்குத் திமிர் தலேக்கேறித் தகாத வழிகளில் சென்று விடுவான். அவ்வாறு அவன் தறி கெட்டுப் போகாமல் தடுக்கவே இறைவன் இடையிடையே சோதனேகளேயும் துன்பங்களேயும் மனிதனுக்கு உண்டாக்குகிருன்.

மல்லிகா அருள்மணி, அலோர்காஜா, மலாக்கா

கே: அண்ணு, சொந்தக் காலில் நிற்கத் தெரியாத குடும்பத் தலேவனேப் பற்றி மனேவி என்ன நினேப்பாள்?
ப: "கல்லென்ருலும் கணவன்; புல்லென்ருலும் புருஷன்" என்ற பழமொழியை மதிக்க முடியாத பரிதாபமே அந்த மனேவிக்கு ஏற்படும்.

கே: தோட்டப்புறத்தில் நன்கு உழைத்து வாழ்க்கையில் முன்னேற முடியும் என்ற நம்பிக்கை இருந்தும் சிலர் பட்டணத்தில் வாழ்வதையே விரும்புகிருர்களே ஏன்?
ப: பட்டணத்தின் வெளிச்சமிக்க பகட்டான வாழ்க்கை தோட்டப்புற இளேஞர்களே ஈர்ப்பதில் ஆச்சரியமில்லே. தோட்டத்தில் வாழ்ந்தாலும் பட்டணத்தில் வாழ்ந்தாலும் காரிய நோக்குள்ள கடுமையான உழைப்பு மூலமே வாழ்க்கையில் வெற்றிகாண முடியும்.

ஆர். பாலசுப்ரமணியம், லாபுவான் பாடாங் தோட்டம், பத்து தீகா

கே: சிக்கலான நிலேமை யாருக்கு அதிகம், ஆண்களுக்கா? பெண்களுக்கா?
ப: ஆண்களுக்கே அதிகம்!

பெ. முத்துசாமி, சுபாங்

கே: "நெருப்பின் மேல் தண்ணீர் வார்த்துக் குளிப்பாட்டியதுபோல" என்பதன் பொருள் என்ன?
ப: படுகறுப்பாக இருப்பவர்களேப் பார்த்து இப்படிச் சொல்கிருர்கள் என்று கருதுகிறேன். எரியும் கொள்ளிக்கட்டையில் நீர் வார்த்தால் நெருப்பு அணேந்து அந்தக் கட்டை முழுக்கறுப்பாக மாறி விடும்.

கே: ம. இ. கா. துணேத்தலேவர் மாண்புமிகு ச. சாமிவேலு அவர்களின் விலாசம் என்ன?
ப: வீட்டு எண் 24, ஜாலான் 17, கெப்போங் பாரு, கோலாலம்பூர்.

ராம்குமார், புக்கிட் சீடிங் தோட்டம், பந்திங்

கே: ஒருவரின் சொல்லேக் கொண்டும், அவருடைய நடை, உடை, பாவனேகளே வைத்தும் அவரை எடைபோட முடியுமா?
ப: "நிலத்தில் கிடந்தமை கால் காட்டும்; காட்டும் குலத்தில் பிறந்தார்வாய்ச் சொல்" என்பது குறள்.

வளர்மதி, அண்ட்லி தோட்டம், பந்தாய் ரெமிஸ்

கே: நம் சமூகத்திற்கு வழி காட்டச் சரியான தலேவர்களில்லே; தலேவர்கள் காட்டும் பாதையில் நாம் செல்வதில்லே. இவ்விரண்டில் எது சரி?



ப: இரண்டுமே முழு உண்மையன்று. இன்னும் உறுதிமிக்க வழிகாட்டும் போக்கை நம் தலேவர்கள் கடைப்பிடிக்க அவசியம் இருக்கிறது. அதுபோலவே தலேவர்களுக்குக் கட்டுப்பட்டு அவர்கள் காட்டுகிற வழியில் அணிவகுத்துச் செல்லுகின்ற ஒழுங்குமுறையும் நமது மக்களிடையே இன்னும் வலுவடைய வேண்டும்.

கே: சத்தியம், தர்மம், நிதானம் என்றெல்லாம் மேடையில் பேசிவிட்டு அதைச் சுய வாழ்க்கையில் பலர் கடைப்பிடிப்பதில்லேயே ஏன்?
ப: சொல்லிய வண்ணம் செய்வது அரிது என்பதைப் புரிந்துகொள்ளாமல் வார்த்தைகளே மேடைகளில் அள்ளி வீசுவதுதான் காரணம். அதுமட்டுமின்றி, தாங்கள் பரப்பும் லட்சியங்களேத் தாங்களே பின்பற்றுகிற மன உறுதியும் பலரிடம் காண முடிவதில்லே.

எம். சேது, குவாந்தான்

கே: முருகு சார்! தங்களுக்குப் பத்திரிகைத் துறையில் எத்தனே ஆண்டுகள் அனுபவம் உண்டு?
ப: ஏறத்தாழ 32 ஆண்டுகள்.

கே: "புதிய சமுதாயம்" இதழைத் தற்போது எத்தனே ஆயிரம் வாசகர்கள் படிக்கிருர்கள்?
ப: இரண்டு லட்சத்திற்கும் அதிகம்.

பி. வனிதா, ஊத்தான் மெலிந்தாங்

கே: செய்த தவறை எண்ணி மனம் வருந்திக் கண்ணீர் விட்டால் மன்னிப்புக் கிட்டுமா?
ப: கிட்டும்.

பி. எஸ். ஆறுமுகம், கிள்ளான்

கே: புதிய சமுதாயத்தைக் கண்டு எவரேனும் பொறுமை பட்டதுண்டா அண்ணு?
ப: புதிய சமுதாயத்தைக் கண்டு தமிழகத்திலுள்ள பெரிய பத்திரிகையாளர்கள் "பொறுமை" படுகிருர்கள். இது நமது வாசகர்களுக்குப் பெருமை தருகின்ற நிலைதானே?

எம். சுமதி, கோப்பெங்

கே: முதல் தாரத்து மகளைத் தந்தை கொடுமைப் படுத்தலாமா?



ப: கூடாது. தாயில்லாத பிள்ளையைத் தந்தை, தாயாகவும் விளங்கிக் கனிவோடு பாதுகாப்பதே சரி.

கே: படிக்கும் பிள்ளைகளுக்குச் சினிமாப் பைத்தியம் பிடிக்கலாமா?
ப: சினிமா பார்க்கலாம். சினிமாப் பைத்தியம் படிக்கும் பிள்ளைகளுக்கும் சரி, மற்றும் யாருக்கும் பிடிக்கக்கூடாது.

மா. புஷ்பராணி, காஜாங்

கே: அண்ணு, தயவு செய்து வட்டார வாழ்த்து நேயர் விருப்பத்தின் புதிய முகவரியைத் தெரிவிக்கவும்
ப: Penerbit, வட்டார வாழ்த்து நேயர்விருப்பம், Radio Malaysia, Rangkaian Merah, Bahagian Persembahan Angkasapuri, Kuala Lumpur.

கே: என் எதிர்கால ஆசை ஒரு டாக்டராக வேண்டும் என்பது. தங்களின் அறிவுரை என்ன?
ப: அதற்குத் தேவைப்படுகிற மாதிரி உங்கள் கல்வித் தகுதியை வளர்த்துக்கொண்டால் உங்கள் ஆசை நிறைவேறும்.

பெ. இராஜகுமாரன், கெரிலா தோட்டம், கிளந்தான்

கே: ஒருவனுக்கு அறிவுரை கூறுவது நல்லதல்ல என்கிறர்கள் சிலர். நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?
ப: பாத்திரமறிந்து பிச்சை இடு என்பதுபோல, எடுத்துக்கொள்ளக்கூடியவர்களிடம் மட்டும் அறிவுரையைச் சொல்லுவதே சிறப்பு.

என். தமிழ்ப்பித்தன், ரவாங்

கே: கோலாலம்பூரில் உள்ள தனியார் பள்ளியில் படிக்கும் மாணவர்கள், சாப்பாட்டு நேரத்தில் 'கண்டீன்'ப் புகைமண்டலமாக்குகிறர்களாம். குடுமி போடும் அளவிற்குத் தலையில் முடி. பள்ளியின் ஒதுக்குப்புறங்களில் சீட்டாட்டம்வேறு! நாளைய சமுதாயத்தில் இவர்கள் புல்லுருவிகளாக மாறுவதில் ஆச்சரியம் ஒன்றும் இல்லையே?
ப: எந்தப் பள்ளிக்கூடத்தைக் குறிப்பிடுகிறீர்கள்? குறிப்பிட்ட பள்ளிக்கூடத்தின் தலைமையாசிரியருக்கும் கல்வி இலாகாவுக்கும் கடிதம் எழுதி எங்களுக்கும் ஒரு பிரதியை அனுப்பிவையுங்கள்.

ஈ. அ. விஜய் மனேகரன், சிரம்பான்

கே: தமிழறிவுப் போட்டியில் என்னைப்போன்ற இலக்கியம் பயிலாத சிலரால் கலந்து கொள்ளமுடியவில்லை. ஆதலால் வேறு சுலபமான போட்டியாக வெளியிட முடியுமா?
ப: இலக்கியம் படிக்காத சாதாரணத் தமிழறிவு உள்ளவர்களும் பங்குகொள்கிற மாதிரி தமிழறிவுப் போட்டியைப் படிப்படியாக எளிமைப்படுத்தி வருவதை நீங்கள் கவனிக்கவில்லையா? முயன்று பாருங்கள்.

ஏ. எஸ். ரவி பெருமாள், குக்கூப் தோட்டம், பொந்தியான், ஜோகூர்

கே: "வாசகர்களிடமிருந்து எழுத்தோவியங்கள் எதிர்பார்க்கிறேம்" என்று நீங்கள் கூறுவது உதட்டளவில்தான் என்று நினைக்கிறேன். நாங்கள் (வாசகர்கள்) அனுப்பினல் போகவேண்டிய இடத்திற்குப் போய் விடும்; ஆனல் "பெரிய எழுத்தாளர்கள்" எதையாவது கிறுக்கி அனுப்பினலும் உடனே பிரசுரித்து விடுவீர்கள்! அப்படித்தானே?
ப: உங்கள் கேள்வி மிகவும் சூடாக இருக்கிறது. வளரும் எழுத்தாளர்களாக இருந்தாலும், பெரிய எழுத்தாளர்களாக இருந்தாலும் தரம் பார்த்துப் பிரசுரிப்பதே நாங்கள் கடைப்பிடிக்கும் கண்டிப்பான கொள்கை. பெரிய எழுத்தாளர்கள் அனுப்பினல்கூட தகுதியில்லாத எழுத்துக்களை மரியாதையோடு திருப்பி அனுப்பிவிடுகிறேம். அதுபோலவே வளரும் எழுத்தாளர்களிடம் பிரகாசிக்கும் வாய்ப்பு உள்ளவர்களை அடையாளங்கண்டு ஊக்கப்படுத்த எல்லா முயற்சிகளும் செய்கிறேம்.

ரோண்ணில் கமால், சுங்கை பொங்கோ தோட்டம், பீடோங்

கே: எப்படிப்பட்டவர்களிடமிருந்து கடவுள் விலகிக் கொள்கிறர்?
ப: "கல்லார் நெஞ்சில் நில்லான் ஈசான்"

ஆர். லோகநாதன், ஸ்கூடாய்

கே: அண்ணு, என் தங்கை பிரஜா உரிமை பெறுவதற்காக மலாய்ச் சோதனையில் தேறி ஒன்றரை வருடங்களுக்கு மேலாகி விட்டது. பல முறை கேட்டும் "இன்னும் பொறுத்திருங்கள்" என்கிறர்கள். அப்படி என்றால் எப்போது பிரஜா உரிமை கிடைக்கும்?
ப: இத்தகைய கேள்விகளுக்கு ஆளுங்கட்சியிலுள்ள ம. இ. கா. தலைவர்களால்கூடப் பதில் சொல்ல இயலாதபோது நான் எப்படிக்கால வரம்பைக் குறிப்பிட்டுச் சொல்ல முடியும்?


கே: வாஞ்சையாகப் பேசும் பெண்கள் அப்பாவிகளா, காரியவாதிகளா?
ப: பெரும்பாலோர் அப்பாவிகளாகவும் ஒருசிலர் காரியவாதிகளாகவும் இருக்கக்கூடும்.

தங்கம்மாள் முனியாண்டி, உலுயாம் தோட்டம், ரவாங்

கே: உங்கள் பெயருக்கு முன்னல் முருகு என்று வருகிறதே, அது எதைக் குறிக்கிறது?
ப: என் தந்தையார் பெயர் முருகப்பன். அதனைச் சுருக்கி முருகு என்று வைத்துக் கொண்டிருக்கிறேன்.

மா. வ. அமரவேல், மா. வ. நாவல்தாசன், குளுவாங்

கே: திருவள்ளுவருக்கு நினைவுச் சின்னம் அமைக்கப்பட்டுள்ளதா?



ப: தமிழ்நாட்டில் சிலைகளும் கோட்டங்களும் வள்ளுவருக்கு எழுப்பப்பட்டுள்ளன. இங்கு கோலக்கிள்ளானில் திருக்குறள் மன்றம், வள்ளுவர் மண்டபம் ஒன்றை எழுப்பி இருக்கிறது. கோலாலம்பூர் ஸ்ரீ மகாமாரியம்மன் கோவில் தேவஸ்தானம் பத்துமலையில் வள்ளுவர் கோட்டம் அமைக்கத் திட்டமிட்டுள்ளது. தமிழ் இளைஞர் மணிமன்றப் பேரவை நம் நாட்டில் வள்ளுவருக்கும் சிலை நிறுவ எடுத்துக்கொண்ட முயற்சி இனிமேல்தான் வெற்றி அடையவேண்டும்

பால்மரக் காட்டினிலே

அகிலன்

10. மஞ்சளும் கயிறும்

நோய்ப் படுக்கையில் கிடக்கும் கண்ணம்மாவைக் காணப்போகிறோம் என்று நினைத்துக்கொண்டு அங்கு வந்த பாலனுக்கு, அவன் சிறிதும் எதிர்பாராத கோலத்தில் கண்ணம்மா காட்சியளித்தாள். உடம்பு நெருப்பாய்ச் சுட்டுக்கொண்டுதான் இருந்தது. ஆனால் அதை அவள் பொருட்படுத்தியதாகவே தெரியவில்லை. குளித்து முழுகி, பொட்டிட்டு, பூ வைத்து புத்தாடையும் புதுமணமுமாய்க் குலுங்கிக்கொண்டிருந்தாள். வழக்கத்துக்கு மாறாகப் பன்னிரண்டு முழமுள்ள ரோஜா நிற சில்க் புடவை அவள் உடலை அலங்கரித்துக்கொண்டிருந்தது. அதே நிறத்தில் ஜாக்கெட். மணமேடைப் பெண்ணாக மாறியிருந்தாள் அவள்.

"நீங்க இப்ப என்னைத் தேடிக்கிட்டு வருவீங்கன்னு எனக்குத் தெரியும். நீங்க வரலேன்னா நானே உங்களைப் பார்க்கறதுக்கு உங்க தோட்டத்துக்கு வந்திருப்பேன்" என்றாள் கண்ணம்மா.

"வந்து?"

"எங்கேயாச்சும் என்னைத் தனியா அழைச்சுக்கிட்டுப் போகச் சொல்லியிருப்பேன்".

"உடம்பெல்லாம் கொதிக்குதே உனக்கு?" நெற்றியிலும் கன்னத்திலும் கை வைத்துப் பார்த்தான் பாலன்.

"அதெல்லாம் சரியாப் போயிடும்; இதுக்கெல்லாம் நீங்க ஒண்ணும் கவலைப்படாதீங்க!" என்று சொல்லிவிட்டு "நான்புடவை கட்டிக்கிட்டிருக்கிறது உங்களுக்குப் புடிச்சிருக்கா? இதைப் பத்தி நீங்க ஒண்ணுமே சொல்லலியே?" என்றாள்.

"சொல்லட்டுமா?"

"சொல்லுங்க"

நிற்க முடியாமல் மெல்லக் கீழே தரையில் அமர்ந்தாள் கண்ணம்மா. பாலனும் உட்கார்ந்தான். சட்டென்று கண்ணம்மா அவன் மடியில் தன் தலையை வைத்துப் படுத்துக்கொண்டுவிட்டாள்.

"கண்ணம்மாவைப் பார்க்கிறப்ப கல்யாணப் பெண்ணு மாதிரி இருக்கு. இப்பவே கழுத்திலே ஒரு தாலியைக் கட்டிடலாமான்னு தோணுது."

கண்ணம்மாவின் விழிகளில் குபீரென்று புத்தொளி பொங்கியது. "அத்தான், நம்ம ரெண்டு பேரு மனசும் ஒரே மனசுதான்! நான் என்ன நினைக்கிறேனோ அதையே நீங்களும் நினைக்கிறீங்க. இப்ப நீங்க இங்கே வருவீங்கன்னு நெனைச்சேன்; வந்துட்டீங்க. கல்யாணம் பண்ணிக்கணும்னு நெனைச்சேன்; நீங்களும் அதையே சொல்றீங்க. மனசுப் பொருத்தம்னு சொல்றாங்களே, அது நமக்குள்ளே ரொம்ப இருக்குது, அத்தான்..."

"முக்கியமா உன்னைப் பார்த்து ஒரு விஷயத்தைச் சொல்லிவிட்டுப் போகலாம்னுதான் வந்தேன். எங்க தோட்டத்து நிர்வாகம் தடுக்கிறதாலே நம்ப கல்யாணம் ஒண்ணும் நிற்கப்போறதில்லே. வேலைக்குச் சீட்டெழுதிக் கொடுத்திட்டு உன்னைக் கல்யாணம் செய்துகிட்டு, வெளியூருக்குப் போய் வேறே ஒரு வேலை தேடிக்கப்போறேன்".

இதைக் கேட்டவுடன் கண்ணம்மாவின் முக மலர்ச்சியை அவன் எதிர்பார்த்தான். ஆனால் அவளோ எவ்வித உணர்ச்சியுமின்றி அவனை வெறித்து நோக்கினாள்.

"ஏன், இந்த ஏற்பாடு உனக்குப் புடிக்கலையா?"

"நீங்க பொழைக்கிற பொழைப்பிலே நான் மண்ணைப் போடறதுக்காக உங்களைக் கல்யாணம் செய்துக்கணுமாக்கும்?"

"வெளியூர்லே எனக்கு ஏதாச்சும் வேலை கெடைக்காமலா போயிடும்?"

"அவ்வளவு லேசா வேலை கிடைச்சிடும்னு நான் நம்பலே. அப்படியே கிடைச்சால்கூட உங்க குடும்பத்திலேருந்து உங்களை நான் தனியாப் பிரிக்கமாட்டேன். உங்கண்ணன் முருகன்தான் அவர் பிறந்த குடும்பத்தை அடியோட மறந்திட்டாருன்னா எனக்காக நீங்களும் இதை விட்டுட்டு வந்திடவேண்டாம். அந்தப் பாவத்தை நான் செய்யமாட்டேன்."

கண்ணம்மா இப்போது பாலனுக்கு ஒரு புதிய பிரச்சினையாகிவிட்டாள். கல்யாணத்துக்கு இவளே முட்டுக்கட்டை போடுவாள் போலிருக்கிறதே! கூட்டுக் குடும்பத்தை விட்டுத் தனியே பிரிந்துபோகவேண்டும் என்று ஆசைப்படுகிற பெண்களே உலகத்தில் அதிகம். அவர்களுக்கு முற்றும் நேர்மாறாக இருக்கிறாளே!

"காமாட்சி அக்காளுக்கு ஒரு வழி செய்ய முடியாதப்ப, நான் மாத்திரம் உங்களோட சந்தோஷமாக் குடும்பம் நடத்தலாங்கிறீங்களா?"

"காமாட்சியையும் நம்மோட வச்சுக்குவோம். ஆறு மாசம், ஒரு வருஷம் ஆனப்புறம் நிலைமை மாறிடாதா? அப்போ முத்துவுக்கும் அவளுக்கும் கல்யாணம் செய்திடுவோம்."

"வேலையில்லாமல் நம்ப ரெண்டு பேர் பட்டினி கிடந்தாப் பத்தாது, காமாட்சியும் சேர்ந்து கிடக்கட்டும்னு சொல்றீங்க!" சிரித்தாள் கண்ணம்மா.

விவரந்தெரியாத சிறுமி என்று தான் மதிப்பீடு செய்த கண்ணம்மா இவ்வளவு ஆழமாய்ச் சிந்திக்கக்கூடியவள் என்பதே அவனுக்குப் புதிராக இருந்தது. அவளுடைய உள் மனத்தின் போராட்டம் அவனுக்குத் தெரியாமல் இல்லை. தானோ தன் குடும்பமோ பாலன் அவளைக் கல்யாணம் செய்துகொள்வதால் கஷ்டப்படுவதை அவள் விரும்பவில்லை. அதோடு தன் அக்கா காமாட்சிக்கு வாழ்வு கிடைக்காத நிலையில் தான் மட்டும் வாழ்வதற்கும் அவள் தயங்கினாள்.

கண்ணம்மாவால் தோற்றுவிக்கப்பட்ட புதிய சிக்கலுக்கு என்ன வழி என்று தெரியாமல் தவித்தான் பாலன்.

"கண்ணம்மா! அப்படீன்னா உனக்கு என்னை இப்பக் கல்யாணம் செய்துக்க இஷ்டமில்லையா?"

"இப்பவே, இந்த நிமிஷத்திலேயே, நமக்குக் கல்யாணம் நடக்கணும்னு நான் ஆசைப்படறேன். நாளைக்குப் பொழுது விடிஞ்சா எங்கே என்ன நடக்குமோ தெரியாது. நீங்க சொன்ன மாதிரி நான் புதுப் பொண்ணா உங்களுக்குக் கழுத்தை நீட்டக் காத்திருக்கிறேன். இப்பவே, இந்த இடத்திலேயே நீங்க எனக்குத் தாலி கட்டலாம்".

திடீரென்று கண்ணம்மா முன்னுக்குப் பின் முரணாகப் பேசுவது போல் பாலனுக்குத் தோன்றியது. ஜுர வேகத்தில் அவள் உளறத் தொடங்கிவிட்டாளோ என்றுகூட அவன் அஞ்சினான். அறிவுள்ள பெண்போல் பேசியவள் ஏன் இப்படிக் குழம்புகிறாள்?

"இப்பவே கல்யாணமா?"

"ஆமா!"

கண்ணம்மா மெல்ல எழுந்து சென்று ஒரு மாடத்தில் வைத்திருந்த வெற்றிலை பாக்குத் தட்டை அவனருகில் எடுத்து வந்தாள். அதைக் கண்டவுடன் திடுக்கிட்டு வெலவெலத்துப் போனான் பாலன். அதில் வெற்றிலை பாக்கு, பூ, மஞ்சள் இவ்வளவும் இருந்தன. அத்துடன் ஒரு மஞ்சள் கயிறும் காணப்பட்டது. கயிற்றின் மத்தியில் ஒரு மஞ்சள் துண்டை அவள் முடிந்து வைத்திருந்தாள். அந்த மஞ்சள் துண்டுதான் தாலியா?

"இதென்ன கண்ணம்மா?"

"இதுதான் நீங்க இப்ப என் கழுத்திலே கட்டப்போற தாலி!... உம் கட்டுங்க!"

தட்டை அவன் முன் நீட்டினாள் கண்ணம்மா.

"இப்பத்தான் உன்னோட அக்காளைப் பத்தியும் எங்க குடும்பத்தைப் பத்தியும் சொன்னியே!"

"அவங்களையும் நான் மறக்கலே; என்னையும் நான் மறக்கலே; உங்களையும் மறக்கலே".

புரியாத புதிராகப் புது மணப் பெண் கோலத்திலிருந்து கொண்டு தனக்கு முன்னே கழுத்தை நீட்டிக் கொண்டிருக்கும் அவளுடைய பிடிவாதம் அவனைத் திணறச் செய்தது.

"கண்ணம்மா!" நாத் தழுதழுத்தது பாலனுக்கு.

"இப்ப நீங்க எனக்குத் தாலி கட்டலேன்னு, இப்பவே நான் உங்க காலடியிலேயே விழுந்து உசிரை விட்டுடுவேன். நேத்து ராத்திரியே நான் செத்துப் போயிட்டேன்னு வச்சுக்குங்க. செத்துத் தொலைஞ்சாலும் கவலையில்லை. என் கழுத்திலே தாலியில்லேன்னு இப்பவே எனக்குப் பைத்தியம் பிடிச்சுடும் போலேருக்கு அத்தான்!"

அவளுடைய மனநிலை அளவுக்கு மீறிப் பாதிக்கப்பட்டிருப்பதைப் பாலன் புரிந்து கொண்டான். பின் விளைவைப் பற்றி அவளிடம் பேசினால் அவள் புரிந்துகொள்ளும் பக்குவத்தில் அப்போது இல்லை. அவளுடைய பிடிவாதத்தில் அவள் உறுதியோடிருந்தாள். வேறு வழி இல்லை பாலனுக்கு.

நடுங்கும் கரத்தில் தாலியை எடுத்தவாறே, "கல்யாணத்துக்கப்புறம் எங்கே நாம் குடும்பம் நடத்தறது? எப்படி நடத்தறது?" என்று கேட்டான்.

"முதல்லே நீங்க தாலியைக் கட்டுங்க சொல்றேன். இங்கேயே, இப்பவே நம்ப குடும்பம் நடத்தலாம். நோட்டீஸ் கெடு தீர இன்னம் ஒரு வாரத்துக்கு மேலே இருக்குதே! பின்னாலே பேசிக்கலாம், கட்டுங்க".

கொந்தளிக்கும் உணர்ச்சிப் பிழம்பாகப் பற்றி எரிந்துகொண்டிருந்த கண்ணம்மாவின் மறுக்க முடியாத ஆணைக்குக் கட்டுப்படுவதைத் தவிர அந்த நேரத்தில் அவனுக்கு வேறெதுவுமே தோன்றவில்லை. எதையும் யோசித்துப் பார்க்கும் நிலையில் அவனும் இல்லை; அவன் அவளை யோசிக்க விடவும் இல்லை.

அதே தோட்டத்தின் தொலைவில் கோயிலில் குடியிருந்த மாரியம்மனை நினைத்துப்பிரார்த்தனை செய்து கொண்டு கண்ணம்மாவின் கழுத்தில் அந்த மஞ்சள் கயிற்றைக் கட்டினான் பாலன். மூன்று முடிச்சுக்கள் போட்டான். கண்ணம்மாவின் பெரிய விழிகளில் மீண்டும் புத்தொளி பொங்கியது. கயிற்றின் மத்தியில் தொங்கிய அந்த மஞ்சளை எடுத்துப் பயபக்தியோடு தன் கண்களில் ஒற்றிக்கொண்டாள். உதட்டில் பதித்துக் கொண்டாள்.

"அத்தான், என்னோட ஆசை நிறைவேறிடுச்சு அத்தான்; நிறைவேத்திட்டீங்க அத்தான்; என்னோட கடைசி ஆசையை..."

பேச்சை முடிக்காமலே பொங்கும் அன்போடு அவன் கழுத்தைத் தன் கரங்களால் வளைத்துக் கொண்டாள் கண்ணம்மா. பெரியதோர் மலர் மாலை அவன் கழுத்தில் வந்து விழுந்து மடியில் தவழ்வது போலிருந்தது பாலனுக்கு. இது குளிர்ச்சியான மலர் மாலையில்லை; இதில் வெப்பம் கலந்திருந்தது; அனலாய்ச் சுட்டுப் பொசுக்கியது.

முகத்தோடு முகம் வைத்தபடியே, "இத்தனை நாளா உங்களை நினைச்சு நினைச்சு நான் பட்டிருக்கிற பாடு! கடைசி கடைசியா ஒரு அச்சுக் கடுதாசி அனுப்பி உங்களை எங்கிட்டேருந்து பிரிக்கப்பாத்திட்டானுகளே, அது நடந்திச்சா? நேத்து ராத்திரி நான் கண்ணோடை கண்ணு மூடியிருப்பேன்னு நினைக்கிறீங்களா?"

"எனக்கும் உன்னோட கவலையிலே பங்கு இல்லேங்கிறியா? இல்லாட்டி இப்ப ஏன் உன்னைத் தேடிக்கிட்டு இங்கே ஓடியாந்தேன்?"

"அத்தான்! எங்கே நீங்க எனக்குத் தாலி கட்டத் தயங்கப் போறீங்களோன்னு நினைச்சேன். மூணு



முடிச்சைப் போட்டு உங்களுக்கே என்னைச் சொந்தமாக்கிட்டிங்க. இனி நீங்க முழுக்க முழுக்க எனக்குச் சொந்தம்; எனக்கே சொந்தம்".

அவள் முகத்தருகே குனிந்த பாலன், "இனிமேலும் நீ மாட்டேன்னு சொல்லமாட்டியே?" என்று சிரித்தபடியே கேட்டான்.

"நான் மாட்டேன்னு சொன்னாத் தான் நீங்க என்னை விடப் போறீங்களா என்ன? மாட்டேன்னு சொல்றதுக்கா உங்க கையிலே தாலியைக் குடுத்து நான் கட்டிக்கிட்டேன்?"

இப்படிச் சொல்லிவிட்டு, அதிகமாய்ப் பேசிவிட்டதுபோல் தன் கரங்களை அவன் கழுத்திலிருந்து எடுத்து, அதற்குள் நாணத்தோடு தன் முகத்தைப் புதைத்துக் கொண்டு விட்டாள் கண்ணம்மா.

"பொல்லாதவ நீ!"

"நீங்க மட்டும் ரொம்ப நல்லவராக்கும்!" அதன் பிறகு அவளும் "மாட்டேன்" என்று மறுக்கவில்லை; அவனும் அவளை விடவில்லை.

ஊர் அறிய, உற்றம் சுற்றத்தாருக்குத் தெரிய அவர்கள் கல்யாணம் செய்துகொண்டிருந்தால், கல்யாணத்தை ஒட்டிய எல்லா நிகழ்ச்சிகளுமே உற்றம் சுற்றத்தார் ஏற்பாடு செய்தபடிதான் அங்கே நடந்திருக்கும். இது அவர்கள் இருவருக்கு மட்டுமே தெரிந்த இரகசியக் கல்யாணம்.

முதல் இரவின் வருகைக்காக அவர்கள் வீணே காத்திருக்கவில்லை. அந்த முதற்பகல் நேரந்தான் அவர்கள் தனிமையின்பத்தை அங்கே கண்டு களித்தது. அன்றைய முதற்பகல்தான் அவர்களுக்கு முதல் இரவு.

நெருப்பாய்க் கொளுத்தும் காய்ச்சலைச் சிறிதுகூடப் பொருட்படுத்தாமல், உணர்ச்சி நெருப்பில் அவனோடு முழுகித் திளைத்து மனநிறைவு பெற்றாள் கண்ணம்மா. பாலனுக்குத் தன் வாழ்க்கையில் என்றென்றும் மறக்கமுடியாத இனிய அநுபவமாகத்தான் அது தோன்றியது.

நேரம் சென்றது.

பால் வெட்டப் போனவர்கள் திரும்பும் வேளை நெருங்கிக்கொண்டிருந்தது.


இருவரும் மீண்டும் குளித்து முழுகினார்கள். பச்சைத் தண்ணீரில் குளிக்க வேண்டாமென்று தடுத்துப் பார்த்தான்.

"நீங்க ஒண்ணும் கவலைப்படாதிங்க; என்னோட ஜுரம் எப்பவோ பறந்து போயிடுச்சு!" என்று சிரித்துக்கொண்டே சொல்லிவிட்டு, குளிப்பதற்காகக் கீழே இறங்கிச் சென்று வந்தாள் கண்ணம்மா. கீழ் வீட்டோடு இருந்த தட்டி மறைப்புத்தான் அவர்களுடைய குளியல் அறை.

பிறகு பாலனுக்கும் சாப்பாடு பரிமாறினாள். அவன் சாப்பிட்டு முடிக்கும்வரை தானும் ஏதோ பெயருக்குச் சாப்பிட்டு வைத்தாள்.

பழக்கத்தை மாற்றுங்கள்

முன்கூட்டியே கவனமுடன் இருந்தால் இருதய நோய் வராமல் தடுக்கலாம். வந்த பின் பரிகாரம் தேடுவதை விட வருமுன் காப்பதே மேல். உங்கள் இருதயத்தைப் பற்றிய கவலைகள் குறைய ஒரே வழி-நீங்கள் செய்ய வேண்டியதெல்லாம் உங்களின் உணவுப் பழக்கத்தை மாற்றி அமைத்துக் கொள்வதுதான்.



கொழுப்புச் சத்து நிறைந்த உணவை அறவே நீக்கவேண்டும். உணவு சமைக்கும்போது கொழுப்புச் சத்து மிகுந்த எண்ணெய் வகைகளைத் தவிர்த்துத் தாவர (சூரியகாந்தி, சோளம்) எண்ணெய் வகைகளை உபயோகித்தால் உங்கள் குடும்பத்தில் எவருக்குமே இருதயநோய் வராமல் தடுக்கலாம்.

"இந்தச் சேதியை, நீ தாலி கட்டிக்கிட்ட சேதியை, இப்பவே நம்ப வீட்டிலே சொல்லிட்டா என்ன?" என்று கேட்டான் பாலன்.

"இன்னம் ஒருநாள் பொறுத்துக்குங்களேன்; இன்னிக்குச் சொல்ல வேண்டாம்."

"அதுவரைக்கும் உன்னோட கழுத்தை நீ மெத்தவங்ககிட்டே மறைச்சுக்கப் போறியா?"

"நான் என்னமோ செய்துக்கறேன்; நீங்க ஒண்ணும் அவசரப் படாதிங்க. இப்ப இது நம்ப ரெண்டு பேருக்குள்ளே இருக்கட்டும்."

"நோட்டீஸ் கெடு முடிஞ்சதுக்கப்புறம் நாம என்ன செய்யறது? நீதான் என்னோட வேலையை விட்டுட்டு வெளியூர் போக வேண்டாம்னு சொல்றியே!"

"நாளைச் சமாச்சாரத்தை நாளைக்குப் பார்த்துக்கறது. இன்னைக்கு ஒரு நாளைக்காவது கவலைப்படாமல் சந்தோஷமா இருப்பமே!" என்றாள் கண்ணம்மா.

"இனிமே என்னாலே உன்னைத் தனியா விட்டுட்டு இருக்க முடியும்னு நினைக்கிறியா?"

"அத்தான்!..." சட்டென்று முகம் உயர்த்தி அவன் கண்களையே ஊடுருவி அவன் இதயத்தைத் துருவிப் பார்த்தாள் கண்ணம்மா. "என் மேலே இவ்வளவு ஆசையா நீங்க வச்சிருக்கீங்க?" என்று அவள் கண்கள் அவனைக் கேட்டன.

"சொல் கண்ணம்மா! எப்படி நம்ப குடும்பம் நடத்தப் போறோம்? நான் இந்த வேலையை விடத்தான் போறேன். இந்த விஷயத்திலே நீ சொல்றதை நான் கேக்கப் போறதில்லே."

"இந்தா பாருங்க, நீங்க எனக்கு இன்னிக்கு குடுத்திருக்கிற சுகத்தை நினைச்சு நினைச்சு ஆனந்தப்படத்தான் நேரம் இருக்கு. நாளைக்கு நடக்கப் போறதை எங்கிட்டே பேசி என்னை அழ வச்சிடாதிங்க. ஏதாச்சும் பேசினீங்கன்னு நான் அழுதிடுவேன்." நாத் தழுதழுத்தது கண்ணம்மாவுக்கு.

மீண்டும் வந்து கண்ணம்மா அவன் மடியில் தலையை வைத்துத் தரையில் படுத்துக்கொண்டுவிட்டாள். அவனைப் பேசவிடாமல் தானே பேசினாள். "நான் ஏழேழு ஜென்மங்களுக்குச் செய்த புண்ணியந்தான் எனக்கு இப்ப இந்த அதிர்ஷ்டத்தைக் கொடுத்திருக்கு. இன்னம் ஏழேழு ஜென்மங்களுக்கு இந்த ஒரு நாள் போதும் எனக்கு."

கீழ் வீட்டில் சத்தம் கேட்டு, சட்டென்று அவன் மடியிலிருந்து தன் தலையை எடுத்துக்கொண்டாள் அவள். கீழே இறங்கி ஓடிவந்தாள். பால் வெட்டப் போயிருந்த கண்ணம்மாவின் குடும்பம் வேலை முடிந்து வீட்டுக்குத் திரும்பியிருந்தது.

காலையில் சமைத்து வைத்துச் சென்ற சாப்பாட்டை எடுத்துத் தன் அப்பாவுக்கும் தம்பிகளுக்கும் பாலனுக்கும் பரிமாறினாள் கண்ணம்மா. சேலைத் தலைப்பால் அவ்வப்போது அவள் தன் கழுத்தை இழுத்து மூடிக் கொண்டது பாலனுக்குச் சிரிப்பை வரவழைத்தது. எவ்வளவு நாளைக்குத்தான் இப்படி அவளால் நாடகம் போடமுடியும்?

சாப்பிட்டுக்கொண்டே பழனியிடம், "நீங்க ஒண்ணுக்கும் கவலைப் படாதிங்க மாமா" என்றான் பாலன். "கண்ணம்மாவைக் கல்யாணம் பண்ணிக்கிட்டு நான் வெளியூரிலே வேலை தேடப் போறேன்; காமாட்சியும் கொஞ்ச நாள் எங்களோட இருக்கட்டும். பின்னாலே முத்துவுக்கும் காமாட்சிக்கும் கல்யாணத்தை முடிச்சிடலாம்."

பழனியும் தங்கம்மாவும் நம்பிக்கையோடு பாலனின் முகத்தைப் பார்த்தார்கள்.

"உள்ள வேலையை விட்டுட்டு அத்தானும் சேர்ந்து நம்மோட தெருவுக்கு வர்ரேங்கறார்" என்று சொல்லி நகைத்தாள் கண்ணம்மா.

மாலைப் பொழுது வரையில் அங்கேயே தங்கிவிட்டு, தன் இதயத்தைக் கண்ணம்மாவிடம் பறிகொடுத்தபடி, பிரிய மனமில்லாமல் அவளைப் பிரிந்து வந்தான் பாலன். விக்டரி எஸ்டேட்டுக்குள் அவன் நுழையும்போது நன்றாக இருட்டிவிட்டது. இரவெல்லாம் ஆனந்தமயமான நினைவுகளில் திளைத்தவனுக்கு, பின்னிரவு நேரம் மட்டிலும் பயங்கரமான கனவுகளில் கழிந்தது.

மறுநாள் காலை எட்டு மணியிருக்கும்.

அடுத்த எஸ்டேட்டிலிருந்த வாடகைக் கார் ஒன்று அவன் பள்ளிக்கூடத்துக்கு முன்பு வந்து நின்றது. பாலனின் நண்பன் கணேசனும் மற்றும் இரண்டு இளைஞர்களும் காரிலிருந்து இறங்கி வந்தார்கள். கணேசன் ஓட்டமும் நடையுமாகச் சென்று தலைமை ஆசிரியர் சண்முகத்திடம் ஏதோ ஒரு செய்தியைக் கூறினான். பிறகு பாலனிடம் வந்து. "புறப்படு, ஓர் அவசரமான வேலை; தலைமை ஆசிரியர் கிட்டே சொல்லிட்டேன்" என்றான்.

"என்ன கணேசா?"

கணேசனின் முகம் பேயறைந்த மாதிரி காட்சியளித்தது. எதையோ அவன் பாலனிடம் மறைக்க முயன்றான்.

"வா, காரிலே போறப்பச் சொல்றேன்; கண்ணம்மாவுக்கு ரொம்ப..."

"சொல்லு கணேசா!"

காருக்குள் பாலனைப் பிடித்துத் தள்ளித் தானும் அருகில்உட்கார்ந்து கொண்டான் கணேசன். உடன் வந்தவர்களைப் பார்த்து, "பாலனோடை அப்பா அம்மாகிட்டே சொல்லி அவங்களையும் கூட்டிக்கிட்டு வந்து சேருங்க" என்றான்.

கார் அடுத்த எஸ்டேட்டை நோக்கிப் பறந்தது.

"என்ன கணேசா?" அவன் தோளைப் பற்றி உலுக்கினான் பாலன்.

"கண்ணம்மாப் பொண்ணு கழுத்திலே சுருக்குப் போட்டுக்கிட்டுச் செத்துப் போச்சு. நாலு மணிச் சங்கு ஊதறதுக்கு முன்னாலேதான் இது நடந்திருக்கு. தோட்டத்திலே தொங்கின அதை இப்ப விட்டிலே கொண்டாந்து போட்டிருங்காங்க."

"கண்ணம்மா!" என்று வீரிட்டலறினான் பாலன்.

அவனை அடக்கி காருக்குள் வைத்திருப்பது கணேசனுக்குப் பெரும்பாடாய்ப் போய்விட்டது.

"இந்தா, உனக்கு அது எழுதி வச்ச கடுதாசி..."

கசங்கிப் போன காகிதத் துண்டு ஒன்றைப் பாலனிடம் நீட்டினான் கணேசன்.

"அத்தான்! உங்களைக் கல்யாணம் பண்ணிக்கிட்டு எனக்கு வாழக் கொடுத்து வைக்கலே. ஆனால் உங்களைக் கல்யர்ணம் பண்ணிக்கிட்டு, உங்களோட ஒரு நாளாவது மனைவியா வாழ்ந்திட்டு, எனக்குச் சாகக் கொடுத்து வச்சிருக்கு. இந்த அதிர்ஷ்டம் போதும் எனக்கு. நீங்க கட்டின தாலியை மட்டும் என் கழுத்தை விட்டு எடுக்கச் சொல்லாதிங்க.

அத்தான்... அத்தான்... அத்தான்...

உங்க மனைவி,
பா. கண்ணம்மா"

(தொடரும்)

என்று தணியும் இந்த சினிமா மோகம்?

இரா.கலாராமு

தமிழகத்தின் நட்சத்திரப் படையெடுப்புக்கள் ஓயாமல் தொடர்ந்து கொண்டும் அதனால் இங்குள்ள ஏழை மக்கள் வியர்வை சிந்திப் பாடுபட்டுத் தேடிச் சேர்க்கின்ற பணத்தை இழந்துகொண்டும் வருகின்ற நிகழ்ச்சிகள் இப்பொழுது ஆங்காங்கே சர்வசாதாரணமாக நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன.

இயல்பாகவே நெடுங்காலமாக சினிமா மோகத்தில் ஊறிக் கிடக்கின்ற நமது சமூகத்துக்குத் திரையில் தோன்றுகின்ற நட்சத்திரக் கலைஞர்களை நேரில் பார்த்து மகிழவேண்டும் என்ற ஆவல் நிறைந்து வழிவதில் ஆச்சரியமில்லை! ஆனால் நமது பாமர மக்களின் சினிமா மோகத்தையே மூலதனமாக வைத்து நட்சத்திரக் குவியலை இங்கே தருவிக்கின்ற ஏற்பாட்டாளர்களும், "ஏனோ தானோ" என்று எதையெதையோ-உப்புச்சப்பில்லாத சரக்குகளையெல்லாம் மேடையிலே அவிழ்த்துக்கொட்டுகின்ற கலைஞர்களும் லாபத்தைத் தான் சுருட்டிக்கொண்டு போகிறார்களே தவிர-கொடுக்கின்ற தொகைக்கு ரசிகர்களுக்குத் திருப்தியளிக்கும் வகையில் எதையும் படைப்பதில்லை!

அடுக்கடுக்கான சொற்களில் அழகழகான விளம்பரங்களைச் செய்து, மக்களின் மனதை சுண்டியிழுத்து, யானை விலை, குதிரை விலையில் டிக்கட்டுகளை விற்று, அரங்கம் முழுவதும் ரசிகர்களை நிரப்பி, இறுதியிலே பெருத்த ஏமாற்றத்தைத் தருகின்ற நிகழ்ச்சிகளைத்தான் காண வேண்டியிருக்கிறது! ஒரு தமிழ்ப் பத்திரிகையைக் காசு கொடுத்து வாங்கிப் படிக்க மனமில்லாதவர்கள் கூட நட்சத்திர நிகழ்ச்சிகளுக்காக நான்கு வெள்ளி. முதல் இருபது வெள்ளி வரைகூட இழக்கத் தயாராக இருக்கிறார்கள். இப்படி நடிகர்களுக்காக "எத்தனையும்" இழக்க நினைக்கின்றவர்கள் இருக்கும்வரை அத்தனையும் எப்படி உருப்படும்!

அண்மையில் டைரக்டர் கே.பாலசந்தர் தலைமையில் கமலஹாசன் கலைக்குழு மலேசியாவுக்கு படையெடுத்தது எல்லாருக்கும் தெரியும்! இதில் என்ன வேடிக்கையென்றால்-என்னவோ அபூர்வ மனிதன் ஒருவன் ஆகாயத்திலிருந்து பூமிக்கு இறங்கிவந்ததுபோல பெண்களும் ஆண்களும் கமலஹாசன் தங்கியிருந்த ஓட்டல் முன் குவிந்து கொண்டு "கூடு" கட்டத் தொடங்கிவிட்டனர்! அதிலும் பெண்கள் கூட்டத்தைச் சமாளிக்க காவலாளிகள் பெரும் போராட்டமே நடத்த வேண்டியிருந்ததாம்!... ஒரு சாதாரண நடிகருக்காக இப்படியொரு கூட்டமென்றால் நம் சமூகம் எப்படித்தான் உருப்பட முடியும்!... இன்னொரு சுவையான கதையும் உண்டு!

இந்தக் கமலஹாசனைக் காண்பதற்காக ஜொகூர்பாருவிலிருந்து கோலாலம்பூருக்கு கார் "சார்ட்டர்" பண்ணிப்போன குடும்பமும் உண்டு! அந்தக் குடும்பத்திலுள்ள ஒருவர் எனக்கு அறிமுகமானவர். அவரிடம் "எங்க! ஒரு நடிகனை பார்ப்பதற்காக ஜொகூர்பாருவிலிருந்து கோலாலம்பூருக்கு போயிருக்கீங்களே..ரொம்ப செலவுதானே" என்று கேட்டேன். அதற்கு அவர் என்ன சொன்னார் தெரியுமா? "நாம் எவ்வளவோ செலவழிக்கிறோம். அதில் இது ஒண்ணு! அதுவும் இதுபோல் நடிகர்களை நேரில் பார்க்கக்கூடிய வாய்ப்பு அடிக்கடி கிடைக்குமா" என்று பெருமையாகச் சொல்லிக்கொண்டார் அந்தச் சினிமா பித்தர்! பாருங்கள், இப்படியும் சில மனிதர்கள்!... இன்னொரு கதை...

அண்மையில் அதே கமலஹாசன் கலைக்குழுவினர் குளுவாங்கில் நிகழ்ச்சி நடத்துவதாக அறிவித்து டிக்கட்டுக்களும் பரபரப்பாக விற்பனையாகின! ஆனால் திடீரென்று அந்த புரோகிராம் "கேன்சல்" செய்யப்பட்டுவிட்டது! பிறகு என்ன? பணம் பறிகொடுத்தவர்களின் பதறல்-அரங்கில் போடப்பட்டிருந்த நாற்காலிகளின் சிதறல்! இதே நிலைமைதான் ஜொகூர்பாருவிலும் நடந்தது! ஜொகூர்பாரு வெள்ளிவிழா மண்டபத்தில் மக்கள் நிறைந்து வழியத்தொடங்கியபோது "கமலஹாசன் நிகழ்ச்சி ரத்து" என்ற அறிவிப்பு ரசிகர்களுக்குப் பேரதிர்ச்சியாக விழுந்தது! ஆயினும் குளுவாங்கில் நடந்த "அடிதடி" சம்பவம் எச்சரிக்கை பண்ணியதால் உடனடியாகக் கோலாலம்பூர் கலைஞர்களை வரவழைத்துக் குறைந்த கட்டணத்தில் ஓர் "ஆறுதல்" நிகழ்ச்சியை நடத்தினார்கள்! திரைக்கலைஞர்களைக் காட்டிலும் உள்ளூர்க் கலைஞர்களின் நிகழ்ச்சி தரமிக்கதாய் இருந்ததால் ரசிகர்கள் அமைதியடைந்தனர்! இவற்றையெல்லாம்பார்த்துக் கணிக்கும்போது ஏற்படும் எண்ணம்—

ஒன்று, நம் சமூகத்தின் சினிமா மோகம் அழிய வேண்டும்! இல்லையேல் நமது சமூகம் அழிந்துபோய் விடும்!

இலக்கிய அரங்கம்

டாக்டர் இரா. தண்டாயுதம்

த பெரியசாமி, பினாங்கு

கே: திருமுருகாற்றுப் படையைப் பாடியவர் யார்?

ப: திருமுருகாற்றுப் படையைப் பாடியவர் நக்கீரர். பத்துப்பாட்டில் இதுவும் ஒன்று. பொருநர் ஆற்றுப் படை, சிறுபாணாற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை, முல்லைப் பாட்டு, மதுரைக் காஞ்சி, நெடுநல் வாடை, குறிஞ்சிப்பாட்டு, பட்டினப்பாலை, மலைபடுகடாம் என்பவை மீதி ஒன்பது பாட்டுக்கள்.

கே: சங்க இலக்கியப் பாடல்கள் மொத்தம் எத்தனை? இப்பாடல்களைப் பாடிய புலவர்கள் எத்தனை பேர்?

ப: சங்க இலக்கியப் பாடல்களின் மொத்தத் தொகை 2381. இவற்றைப் பாடிய புலவர்களுள் பெயர் தெரிந்த புலவர்கள் 473 பேர். 102 பாடல்களைப் பாடிய புலவர்களின் பெயர்கள் தெரியவில்லை.

ஆ. மாலவன், ஈப்போ

கே: ஞானக்குறள் என்ற நூலை இயற்றியவர் யார்!

ப: ஔவையார்.

கே: சங்ககாலத்தில் தோன்றிய வள்ளல்களைப்போல் பின்னர் யாரும் தோன்றவே இல்லையா?

ப: காலத்தின் தேவைக்கேற்ப வள்ளல்கள் தோன்றிக்கொண்டு தான் இருக்கிறார்கள். ஓர் தட்டில் பொன்னும் அதற்கு நிகராக மற்றொரு தட்டில் நெல்லுமாக விற்ற கொடிய பஞ்சகாலத்திலும் ஏழை எளியவர்களுக்கு உதவிய வள்ளல் சீதக்காதி தோன்றியது மிகமிகப் பின்னால்தானே?

ஆர். பழனியாண்டி, பெட்டாலிங்

கே: மலிகடல், சீர்மை, தெறல் ஆகிய சொற்களுக்கான பொருளைக் கூறவும்.

ப: மலிதல் என்பதற்கு நிறைதல், பெருகல், மிகுதல், விம்முதல், பரத்தல், விரைதல் எனப் பலபொருள்கள் உண்டு. இங்கு மலிகடல் என்பதற்குப் பரந்த கடல் என்று பொருள் கொள்ளலாம். சீர்மை என்ற சொல் சிறப்பு, செம்மை, நன்னடை ஆகிய பொருள்களைக் குறிக்கும். தெறல் என்பதன் பொருள் தண்டித்தல்.

வே. இராமு, ஈப்போ

கே: மலேசியாவில் முதலில் தோன்றியது கவிதையா? சிறுகதையா?

ப: கவிதைதான். சென்ற நூற்றாண்டின் இறுதியிலேயே இங்குக் கவிதை நூல்கள் வெளிவரத் தொடங்கிவிட்டன. வண்ணை அந்தாதி, வண்ணை நகர் ஊஞ்சல், சிங்கை நகர் அந்தாதி, சல்லாப லாவணி ஆகியவை அவற்றுள் சில.

அ. துரைராஜு, அலோர்ஸ்டார்

கே: இலக்கியத்திற்கு அவசியமான ஒன்று கற்பனை என்கிறார்கள். கற்பனை என்பது இல்லாததைக் கூறுவதுதானே?

ப: சாதாரண உலக வழக்கில் கற்பனை என்பதை இல்லாத ஒன்றைக் கூறுவதற்குப் பயன்படுத்துகிறோம். ஆனால் இலக்கியத்தைப் பொறுத்த மட்டில் அதன் பொருளே வேறு. நடந்ததை மனக்கண் முன் மறுபடியும் கொண்டு வருதல், ஒரு பொருளை அதனோடு ஒத்த மற்றொரு பொருளோடு தொடர்பு படுத்துதல், நடக்கப் போவதை மனத்துள் காணுதல், உவமை, உருவகம் ஆகியவற்றால் தொடர்புபடுத்திப் பார்த்தல் முதலிய பலவும் இலக்கியத்தைப் பொறுத்த மட்டில் கற்பனையின் கூறுகளே!

இரா. செல்வராஜு, கோலாலம்பூர்

கே: சிலப்பதிகாரம் உணர்த்தும் உண்மை யாது?

ப: சிலப்பதிகாரம் ஓர் உண்மையை அல்ல, மூன்று உண்மைகளை உணர்த்துகின்றது. அரசியலில் பிழை செய்தவர்களுக்கு அறமே கூற்றாகித் தண்டனை வழங்கும், பத்தினியை எல்லோரும் போற்றி வழிபடுவர், ஊழ்வினை வலிமையுடையது என்பவையே அம்மூன்று உண்மைகள்.

கே: நொண்டி நாடகம் என்பது என்ன?

ப: பதினேழு, பதினெட்டாம் நூற்றாண்டுகளில் தோன்றிய ஓர் இலக்கிய வகை இது. ஒருவன் தீய வழியில் நடந்து ஒழுக்கம் கெட்டுப் பரத்தையுடன் உறவு கொண்டு, பின்னர் காலிழந்து துன்பங்கள் பல அனுபவிப்பதாக அமைத்துப் பாடுவது நொண்டி நாடகம் ஆகும்.

செல்வராஜு குமரன், கிள்ளான்

கே: சொல்லின் செல்வர் நூல்களைப் பற்றிச் சிறிது கூறவும்?

ப: தமிழ்ச் சொற்களுக்குள்ள ஓசை இன்பத்தை உணர்ந்து அனுபவிக்கத் துணை செய்பவை சொல்லின் செல்வர் ரா. பி. சேதுப்பிள்ளை அவர்களின் நூல்கள். பேசுவதை அழகாகக் கவிதைபோல் பேசும் ஆற்றலுள்ளவர் இவர். இவர் நூல்களிலும் இவ்வியல்பைக் காணலாம்.

கே: பரிபாடலில் தற்போது எத்தனைப் பாடல்கள் உள்ளன?

ப: பரிபாடல்கள் எழுபது "பரிபாடல்" தொகுப்பில் தொகுக்கப் பட்டதாக உரையாசிரியர்கள் குறிப்பிட்டுள்ளார்கள். இன்று கிடைப்பவை இருபத்திரண்டு பாடல்களே!

சு. கணேசன், ஜோகூர்பாரு

கே: எதுகையும் மோனையும் கவிதைக்கு அங்கம் என்று சிலர் கூறுகிறார்கள். அலங்காரம் என்று வேறு சிலர் கூறுகிறார்கள். தங்கள் கருத்து என்ன?

ப: எதுகையும் மோனையும் தமிழ்க் கவிதைக்கு அங்கங்கள் என்பதே எனது கருத்து. "அபிநயக் கலையில் கண்ணும் இதழும் கையும் காலும் எப்படி அங்கமாயிருந்து உணர்ச்சிகளை எடுத்துக் காட்டுகின்றனவோ, அப்படியே கவியிலுள்ள சீர், மோனை, எதுகை ஆகிய எல்லாம் அங்கங்களாக இருந்து உணர்ச்சிகளை எடுத்துக் காட்டுகின்றன" என்று ரசிகமணி டி. கே. சி. கூறுவதும் இங்குக் கருதத்தக்கது.

ம. சுப்பிரமணியம், மலாக்கா

கே: ராஜம் கிருஷ்ணன் ஏதாவது நாவல் எழுதியுள்ளாரா?

ப: "சலனங்கள்" என்ற நாவல் அண்மையில் வெளிவந்துள்ளது. "அன்னையர் பூமி" என்றொரு தொடர் கதையும் வெளிவந்து கொண்டிருக்கிறது.

து. பாஸ்கரன், ஜோகூர்பாரு

கே: தமிழில் எழுதப்பட்ட முதல் நாவல் எது? இது எந்த ஆண்டில் வெளிவந்தது?

ப: வேதநாயகம் பிள்ளை எழுதிய "பிரதாப முதலியார் சரித்திர"மே தமிழில் எழுதப்பட்ட முதல் நாவல். இந்நாவல் 1876ஆம் ஆண்டில் வெளி வந்தது.

இரா. இராமராவ், தலைநகர்

கே: சீனியர் கேம்பிரிட்ஜ் பரீட்சைக்குத் தமிழ் இலக்கியம் எடுத்தோம். நாங்கள் எதிர்பார்த்த அளவுக்குப் புள்ளிகள் கிடைக்கவில்லை. தரப்படும் கவிதைகள் தரம் உயர்ந்தவை. சம்பந்தப் பட்டவர்கள் கவனிப்பார்களா?

ப: முயற்சி செய்யுங்கள். வெற்றி உறுதியாகக் கிடைக்கும். கவிதைகள் எளிமையானவையே! ஒரு முறைக்கு இருமுறை கவனம் செலுத்திப் படித்தால் புரிந்துகொள்ளலாம்.